# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர்:—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

துணையாசிரியர்:—ஜெ. தங்கவேல், பி. ஏ.

தொகுதி ௪ | பிரஜோற்பத்தி ஹூ பங்குனி ௴ | பகுதி ௩


## உள்ளடக்கம்

5- JUL 19..


கடவுள் வாழ்த்து .... 47
பத்திரிகாசிரியர் முன்னுரை .... ,,
செங்குந்தர் பாடசாலைக் கட்டிட தர்மநிதிச் சீட்டு .... 49
அறிவியல் பகுதி:—காலச் சக்கரத்தின் கோலம் என்னே! .... 51
மாதர் பகுதி:—எங்கள் அப்பாவுக்குச் சம்பள நாள் ... 53
ஆராய்ச்சிப் பகுதி:—பொங்கற் புதுநாள் ... 55
இளைஞர் பக்கம்:—என் கதை .... 58
என்று ஒழியுமோ? .... 60
செங்குந்த யாத்திரைவாசி .... 63
கூட்டுறவு இயக்கமும் அதனால் உண்டாகும் நன்மைகளும் ... 65
குலதிலகர் பகுதி:—செங்குந்த கவிவாணர் சரித்திர தீபிகை ... 67
மூன்றாவது மகாநாட்டுக் கணக்கு .... 71
தலைச்சங்கப் பிரதிநிதிகள் சுற்றுப் பிரயாணம் ... 73
கிளர்ச்சி .... 75



காரியாலயம்:—2/17, பவழக்கார தெரு, சென்னை.

# செங்குந்தர் கல்விநிதி

"கல்வியி னூங்கில்லை சிற்றுயிர்க் குற்றதுணை"

பல சிறு துளி!

ஒரு பெரு வெள்ளம்!!

பல்வேறு சமூகங்களும் முன்னேற்றத் துறையி லீடுபட்டு மேலோங்கியெழப் பெரும்பாடு பட்டுவரும் இக்காலத்தில், ஏனைய சமூகங்களோடு சமமான நிலையில் நிற்றற்கும், உலகப் போட்டியிற் கலந்துகொண்டு மேன்மை யுறுதற்கும் நங்குலத்தினர் உலகப் போக்கை நன்குணர்ந்து கைத்தொழில் முதலிய பல துறைகளிலும் திறமை பெறுவது இன்றியமையாததாகும். அவ்வாறு நம்மைத் தயார் செய்துகொள்வதற்கு மற்றெல்லாவற்றினும் சிறந்த சாதனம் கல்வியேயாகும். அதுவே நமது பண்டைப் புகழினையும் அந்நிலைக்கு நேர்முரணாக நாம் தற்போது அடைந்துள்ள தாழ் நிலையினையும் கண்ணாடி போல் நமக் கெடுத்துக் காட்ட வல்லது. அம்மட்டோ? நாம் அத்தகைய தாழ்வுக் கடலினைக் கடந்து மேன்மைக் கரையினையடைதற்கேற்ற தெப்பமாய் உதவுவதும் அதுவே. சுருங்கக்கூறின், நமது சமூகத்தினரைப் பல துறைகளிலும் முன்னேற்றி மேம்படுத்த வல்லது கல்வியே யாகும். அதனை யுணர்ந்தே நமது தலைச் சங்கத்தாரும், நமது குலச் சீர்திருத்தத்துக்கும் முன்னேற்றத்துக்கும் அதனை முதற்படியாகக் கொண்டு உழைத்து வருகிறார்கள்.

ஆனால், கல்விப் பொருளினை நமது மக்களிடைப் பரப்புவதற்குச் செல்வப் பொருள் பெரிதும் அவசியமாயுள்ளது. உலகத்திலேயே பேரறிஞராகத் திகழக்கூடிய பல பிள்ளைகள் வறுமையின் வாய்ப்பட்டு, அல்ல லுழன்று, பாறையில் விதைத்த செழுவிதை போன்று பெயர் தெரியாது மறைந்து கிடக்கின்றனர். அத்தகையோர் தளிர்த்துச் செழித்து, ஓங்கி வளர்ந்து, அறிவு, ஆராய்ச்சி முதலிய நறுமண மலர்களையும் தீங்கனிகளையும் உலகினர்க்குத் தந்துதவுமாறு பொருளுதவி புரிதலினும் சிறந்த தானமுண்டா? தருமந்தானுண்டா? அன்னதானம் முதலிய தானங்கள் ஒருவ ரிருவருக்கு ஒரு சமயத்தில் திருப்தியும் நன்மையும் அளிக்கலாம். கல்வி தானமோ, உலகமுழுதும் பேரொளியைப் பரப்ப வல்லதொரு ஆற்றல் சான்ற அறிவுப் பிழம்பையே உண்டாக்கினும் உண்டாக்கலாம்.

அதனாலேயே, ஏழ்மையால் வருந்தி வாடும் நங்குல மக்களுக்குக் கல்விச் செல்வத்தை வழங்குவதற்காக நமது தலைச்சங்கத்தார் செங்குந்தர் கல்விநிதி யெனும் நிதியொன்றை யேற்படுத்தி யுள்ளார்கள். அதன் உதவியைக் கொண்டு தற்போது சுமார் 30 மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். அதன் பயனாக நம்மவரிடைப் பட்டதாரிகளது தொகையும் வருஷா வருஷம் அதிகரித்து வருகிறது. மேலும் மேலும் அதிகமான மாணவர்க்கு உபகாரச் சம்பளம் முதலிய உதவிகள் செய்யவேண்டு மென்பது நமது தலைவர்களது நோக்கமாக உள்ளது. வெளியூர்களிலிருந்து சென்னைக்கு வந்து கல்வி பயிலும் மாணவர்க்கு உண்டி, உறையுள் முதலிய வசதிகளை யளிப்பதற்காகவும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. ஆனால், இந்நோக்கங்க ளெல்லாம் நிறைவேறுவதற்கு இந்நிதி பன்மடங்காகப் பெருக வேண்டும். சுபகாரியங்களில் நன்கொடை யளித்தல், சம்பாதனையில் ரூபாய்க்குத் தம்பிடி யளித்தல் முதலிய பல வழிகளில் அதனைப் பெருக்க வேண்டுமெனவும் நமது மகாநாட்டில் தீர்மானம் நிறைவேறியுள்ளது. பல புண்ணிய சீலர்களும் அவ்வழிகளில் தாராளமாக வழங்கிக்கொண்டு வருகிறார்கள். ஆயினும் கல்விநிதி போதிய அளவு விருத்தியடைவதற்கு நன்கொடைகள் இன்னு மதிகமாக வழங்கப்படல் வேண்டும்.

ஆகவே, செல்வச் சீமான்களே! குலாபிமானிகளே!! உங்கள் சோதரர்கள் மேன்மையடைய வேண்டுமானால், நமது குலம் மேலோங்க வேண்டுமானால், நாமும் நமது முன்னோரைப் போன்று வீரர்களாய், அறிஞர்களாய், கைத்தொழில் நிபுணர்களாய், சீர்குலத் தோன்றல்களாய்த் திகழ வேண்டுமானால் நமது கல்விநிதிக்கு,

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்! நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவு மற்றவர் வாய்ச்சொல் லருளீர்! ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்!

---

கல்விநிதிக்கு நன்கொடை யனுப்புவோர்,

மா. பா. கந்தசாமி முதலியார், B. A., B. E.,
அமைச்சர், செங்குந்தர் கல்விநிதி,
'காமாக்ஷி விலாசம்', ஹோஸ்டல் காலனி, மாம்பலம்.
தேனாம்பேட்டை P. O., சென்னை என்னும் விலாசத்துக்கு அனுப்பவும்.


# செங்குந்தமித்திரன்

338

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர்:—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

துணையாசிரியர்:—ஜெ. தங்கவேல், பி. ஏ.

தொகுதி—௬] பிரஜோற்பத்தி௵ பங்குனி௴ [பகுதி—௩


### கடவுள் வணக்கம்

சேல்பட் டழிந்தது செந்தூர் வயல்பொழில் தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடியார் மனம் மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையும் சூரனும் வெற்பும் அவன்
கால்பட் டழிந்தது என்தலைமே லயன் கையெழுத்தே. (கந்தர் அலங்காரம்)

JUN 1967

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### பிரசாரகர்களது சுற்றுப் பிரயாணம்

நெடுநாட்களாக உறங்கிக் கிடந்த நங்குல மக்களைத் தட்டி யெழுப்புவதும், அவர்களிடை அறிவுச் சுடர் கொளுத்துவதும், உலகப் போக்குக் கேற்றவாறு அவர்களைத் தயார் செய்வதும், முன்னேற்றப் பாதையிலே அவர்களைச் செலுத்துவதுமே நமது தலைச் சங்கத்தின் நோக்கமாகும். ஆரம்பகாலந்தொட்டே அஃது அவ்வழியில் தவறாது உழைத்து வருகின்றது. அத்தகைய பெரு நோக்கத்திற்குச் சிறந்த சாதகம் பத்திரிகையே என்பதை அறிந்துதான் நமது 'மித்திர'னையும் அது பிறப்பித்துள்ளது. அதோடு நில்லாமல் கல்வியறிவு நிரம்பியவர்களும், தங்கள் நலங்களை யெல்லாம் தியாகஞ் செய்து குலத்தொண் டொன்றினையே குறியாகக் கொண்டு அதனைத் தளராது ஆற்ற முன்வந்துள்ள குலாபிமானிகளுமான நங்குலச் சீலர்கள் சிலரைக் கொண்டும் நங்குல மக்களிடை அறிவொளியைப் பரப்பி வருகின்றது.

இத்தகைய பிரசாரகர்கள் அடிக்கடி பல ஜில்லாக்களுக்குஞ் சென்று, பல குக்கிராமங்களிலும் பிரசாரஞ் செய்து, தலைச் சங்கத்தின் சீரிய நோக்கத்தினை நிறைவேற்றி வருகிறார்கள். அவர்களது பிரசாரத்தின் பயனாக நங்குலம் எவ்வளவு மேலோங்கி யிருக்கிறதென்பது நங்குலத்தின் நிலையினைச் சென்ற ஐந்து வருடங்களாக ஆழ்ந்து கவனித்து வருவோர்க்குப் புலப்படாமற் போகாது. ஐந்தாண்டுகட்கு முன்னர் பெயர் தெரியாதிருந்த நங்குலம் தற்போது உலகத்தின் பல பாகங்களிலும் தன் பெயரைப் பரப்பி யிருக்கிறது. உலகத்தின் பல பாகங்களிலும் தனித்தனியே பிரிந்து வாழ்ந்து வந்த நம்மக்களிடையே குலாபிமானமும் சகோதர உணர்ச்சியும் கிளம்பியிருக்கின்றது. அதன் பயனாக, "இதுவரை எந்தச் சமூகமும் இவ்வளவு மேன்மையாக மகாநாடு கூட்டியதில்லை" என்று பலரும் ஆச்சரியத்துடன் கூறத் தக்கவாறு நமது முதல் மகாநாடு ஈரோட்டிற் கூடியது. அடுத்தாற்போல் வேறிரண்டு மகாநாடுகளும் நடந்துவிட்டன. உலகமென்பதே இன்னதென் றறியாது கிடந்த நமது மக்கள் பலர் கண் விழித்துப் பார்த்து, ஆச்சரியப்பட்டு, தமது வீணுறக்கத்துக்காகத் தம்மை வசிக்கொண்டு, தம் குறையை நிவர்த்திக்கத் தீவிரமாக முற்பட்டுள்ளார்கள். இத்தகைய நன்மைகளுக்கெல்லாம் காரணம் நமது தலைச் சங்கத்தாரும், அவர்கள் பத்திரிகை வாயிலாகவும் பிரசாரகர் வாயிலாகவும் ஆற்றிவரும் தொண்டுமே யாகும்.

பிரசாரகர்களது சுற்றுப் பிரயாணத்தைப்பற்றிச் சவிஸ்தாரமாகக் கேட்டறியும் எமது மனத்திடை ஒரு புறம் மகிழ்ச்சியும் திருப்தியும் தாண்டவமாடுகின்றன; ஒரு புறம் கவலையும் வருத்தமும் கொந்தளிக்கின்றன. சில ஊர்களில் நமது குலச் சீலர்கள் பிரசாரகர்களுக்கு அளிக்கும் வரவேற்பையும், ஊக்கத்தோடு அவர்களோ டிருந்து புரியும் அரிய உதவியையும், குலமுன்னேற்ற விஷயமாக அவர்களைக் கேட்கும் நுணுக்கமான பல கேள்விகளையும், கூட்டங் கூட்டுதல், சந்தா வசூலித்தல் முதலிய வழிகளில் காட்டும் உற்சாகத்தையும் பற்றிக் கேட்குந்தோறும் எமதுள்ளம் பூரிக்கின்றது. ஆனால், அந்தோ! நமது பிரசாரகர்கள் சில விடங்களில் படும் பாடுகளைப்பற்றிக் கேட்டால் எமது மனம் கறுகுகின்றது.

வழி தெரியாமை முதலிய காரணங்களால் பல கஷ்டங்களுக் குள்ளாகிக் கடைசியாகப் புதியபுதிய ஊர்களுக்குப் போய்ச் சேரும் பிரசாரகர்கள் சில சமயங்களில் நாட் கணக்காகத் திரிந்தலைந்தும் கூட்டங் கூட்ட வியலாமல் வெறுப்போடு வருந்தித் திரும்பவேண்டி யிருக்கிறது. சில ஊர்களில் மக்கள் உணர்ச்சி யென்பது ஒரு சிறிதுமின்றி வந்தவர்களை அசட்டை செய்து வாளா விருந்து விடுகின்றனர். வேறு சில ஊர்களில், சுயநலப் புலிகளும் பொதுநல விரோதிகளுமாயுள்ள சில "பெரியோர்"களது விஷமத்தால் தடையேற்படுகிறது. மற்றுஞ் சில ஊர்களில் கக்ஷிப் பேய் குறுக்கிட்டுக் காரியங்களைக் கெடுக்கிறது. இத்தகைய காரணங்களால் அங்கு நமது பிரசாரகர்களது பிரயாசை யெல்லாம் வீணாகிறது.

மித்திரனுக்குச் சந்தா வசூலிப்பதும் நமது பிரசாரகர்களது வேலைகளி லொன்று என்பதை அன்பர்கள் அறிவார்கள். இதைப்போல் வேறெந்த வேலையும் அவர்களுக்கு அவ்வளவு கஷ்டத்தை யளிப்பதில்லை. சில ஊர்களில் குலாபிமானிகள் சிலர் அவர்களோடு சேர்ந்து வெகு சுலபமாகச் சந்தா பாக்கியை வசூலித்துப் பேருதவி செய்கிறார்கள். ஆனால் சில இடங்களில் நடக்கும் சம்பவங்கள் வெகு விசித்திரமாக இருக்கின்றன. இரண்டு மூன்று வருடங்களாகப் பத்திரிகை வரவழைத்துக் கொண்டிருந்த ஒருவர் 'நான் எதற்காகப் பணம் தரவேண்டும்? பத்திரிகை அனுப்புமாறு நான் உங்களை வேண்டினேனா? இனி ஒரு பத்திரிகையும் அனுப்பவேண்டாம்' என்று வெகு நியாயமாகப் பேசுவார். 'வருடம் ஒன்றரை ரூபாயா கொடுக்க வேண்டும்? எனக்குத் தெரியாதே. இலவசமாக அனுப்புகிறீர்க ளென்றல்லவோ இது வரையில் எண்ணி யிருந்தேன்.' எனக்கு வேண்டாம்ப்பா இனி இந்தத் தொல்லை' என்பாரொருவர். 'நாளைக்கு வாரும் பார்ப்போம்' என்பாரொருவர். 'இப்பொழுதேது பணம்? இன்னும் மூன்று மாதங் கழித்து வாரும்' என்பாரொருவர். 'நான் எழுதின வியாசத்தைப் பிரசுரித்தீர்களா நீங்கள்? பின்னெதற்காக உங்களுக்கு நான் பணந் தரவேண்டும்' என்பா ரொருவர்.

இவற்றையெல்லாம் கேட்கும் வாசகர்களுக்கு நகைப்புத் தோன்றலாம். எமக்கு நகைப்பதா வருந்துவதா எனத் தெரியவில்லை. அன்பர்களே, பிள்ளைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன் போகிறது என்பதுபோல நங்குல மக்கள் சிலர் யோசனையின்றி அசட்டையாகப் பேசும் பேச்சுக்கள் அவற்றையெல்லாம் நேரிற் கேட்டுப் பொறுத்துக் கொண்டிருக்கும் பிரசாரகர்களது காதுகளில் எவ்வாறு பாயுமென யோசித்துப் பாருங்கள். பிரசாரகர்கள் தமது பிரயாணத்தில் அனுபவிக்கும் கஷ்டங்களைக் கேட்டால் எத்தகைய கன்மனமும் கரைந்துகும். சில சமயங்களில் அவர்கள் இரவு பனிரண்டு மணிக்கு உணவு கொள்ள நேரிடும்; சில சமயங்களில் உணவே யின்றிப் பட்டினி கிடக்கவும்நேரிடும்; சில சமயங்களில் ரயில்வே ஸ்டேஷன்களிலேயே உறங்க நேரிடும்; சில சமயங்களில் இரவு முழுதும் கண் விழித்துக் கிடக்க நேரிடும்; சில சமயங்களில் வெயிலிலும் மழையிலும், மணலிலும் சேற்றிலும் பல மைல்கள் கடுநடை நடக்க நேரிடும்; சில சமயங்களில் ஆட்களைத் தேடி மணிக் கணக்காகச் சுற்ற நேரிடும். இவ்வண்ணம் தங்கள் சௌகரியங்களை யெல்லாம் விட்டொழித்து உழைக்கும் இவர்களைத் தியாக மூர்த்திகளாக வன்றோ நாம் கருதவேண்டும்? இத்தனைக் கஷ்டங்களையும் பொறுத்துக்கொண்டு அவர்கள் நம்மிடம் வருவது நம்மைச் சீர்படுத்துவதற்கன்றோ? நம்மிடை வேரூன்றிக் கிடக்கும் அறியாமை, கக்ஷிபேதம் முதலியவைகளைக் களைவதற்கன்றோ? நங்குலநிலத்திலே முன்னேற்றச் செடியை வளர்ப்பதற்கன்றோ? இங்ஙனம் வருந்தி வருவோர் மனதை நமது கடுமொழிகளாலும், சுடுசெயல்களாலும் பின்னும் புண்படுத்துவது நியாயமாகுமா? யோசித்துப் பார்க்கின் 'மித்திரன்' சந்தா பாக்கியை நம்மிடம் வந்து வசூலிப்பதற்காக நாம் அவர்களுக்குக் கடமைப்பட்டவர்களென்றே புலப்படும். நங்குலப் பத்திரிகை வாங்குவது நமது முதற் கடமையாகும். வாங்கினால், அது மேலும் மேலும் வளர்வதற்கு இன்றியமையாததான சந்தாவைப் பாக்கியின்றிச் செலுத்துதல் நமது முக்கிய கடமையாகும். இக் கடமைகளை நாம் மறவாது ஆற்றுமாறு நம்மை அண்ட வரும் பெரியோர்கள் நமது நன்றிக்குப் பாத்திரர்கள் என்பதில் ஐயமென்னே? மேலும், அவர்கள் நேரில் நம்மிடம் வந்து சந்தாவை வசூலிப்பதால் மணியார்டர் செலவு, வி. பி. செலவு முதலியவைகளும் மிகுதிப்படுகின்றன. இவற்றை யெல்லாம் யோசித்து இனியாயினும் நமது பிரசாரகர்களை அன்புடன் வரவேற்று, பிரசாரம், சந்தா வசூல் முதலியவற்றில் அவர்கட்குத் தம்மாலியன்ற உதவி புரிந்து, தலைச் சங்கத்தின் நோக்கங்களெல்லாம் செவ்வனே நிறைவேற அதற்கான வழியில் உழைக்குமாறு அன்பர்களைப் பன்முறையும் வேண்டிக்கொள்ளுகிறோம். இயற்கையாகவே இத்தகைய உதவிகளைப் புரிந்துவரும் குலச் சீலர்களுக்குப் பிரசாரகர்கள் சார்பாகவும், தலைச்சங்கத்தின் சார்பாகவும், நங் குலத்தின் சார்பாகவும் எமது மனமார்ந்த வந்தனத்தையும் நன்றியையும் செலுத்துகின்றோம்.

# செங்குந்தர் பாடசாலைக் கட்டிட தர்மநிதிச் சீட்டு

## இதனை முன்னறிவித்தபடி பிரசோற்பத்தி௵ தை௴ 25௳ (7-2-32) ஞாயிற்றுக்கிழமை மாலை 3-மணிக்குச் செங்குந்தர் இரவு பாடசாலை மண்டபத்தில்

திருவாளர்கள் W. V. இராஜசேகர முதலியார், பாலசுந்தர சுவாமிகள், கு. நாகசாமி முதலியார், C. பக்கிரிசாமி முதலியார், தீ. க. சண்முக முதலியார், சிவலிங்கப்ப செட்டியார், சேட் நன்னி சாயபு, S. குமாரசாமி முதலியார், மு. அருணசல முதலியார், ஆறுமுக முதலியார் ஆகிய இத்தலைவர்களின் முன்னிலையில் சீட்டுக்களைக் குலுக்கிப் பிரைசுகள் எடுத்துப் பதிவு செய்யப்பெற்றது.

வசூலான தொகைக்குத் தக்கபடி பிரைசுகளின் தொகை நிர்ணயிக்கப்பட்டது.

இதனடியிற் கண்ட பிரைஸ் எண்ணுள்ளவர்கள் தங்களிடமுள்ள ரசீதை பிரசோற்பத்தி௵ பங்குனி௴ 8 (20-3-32)உக்குள் அனுப்பிப் பரிசுகளை ஏற்றுக்கொள்ள வேண்டியது.

எங்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கிச் சீட்டுப் புத்தகங்களை விற்றனுப்பிய மெய்யன்பர்களுக்கு மனமார்ந்த நன்றியறிதலைச் செலுத்துகின்றோம்.

விலாசம்:—காரியதரிசி, செங்குந்தர் பாடசாலைக் கட்டிட தர்மநிதிச் சீட்டு நிலையம்,
மண்டபத்தெரு, காஞ்சீபுரம்.

| | | | |
|---|---|---|---|
| (1) முதற் பரிசு | ரூ. 25—0—0 | 18393, N. நல்லா நாயக்கன், கூகலூர். |
| (2) இரண்டாவது பரிசு | ரூ. 12—8—0 | 11340, S. சுப்பா முதலியார், ஆக்கூர். |
| (3) மூன்றாவது பரிசு | ரூ. 5—0—0 | 22352, காசி விசுவநாதன், கோபிமில் ரோட், [போற்டிக்ஷன். |
| (4) நான்காவது பரிசு | ரூ. 2—8—0 | 22776, 22539. |
| (5) ஐந்தாவது பரிசு | ரூ. 1—4—0 | 2768, 20558, 14960, 16369. |
| (6) ஆறாவது பரிசு | ரூ. 0—8—0 | 9095, 16064, 22949, 14450, 34955, 17695, 17427, 14940, 19736, 10453. |

(7) ஏழாவது பரிசு ரூ. 0—4—0.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 19,117 | 18,408 | 13,941 | 19,870 | 19,713 | 34,940 | 19,169 | 11,082 | 16,373 | 15,029 |
| 19,742 | 35,181 | 22,849 | 18,610 | 10,936 | 1,024 | 10,409 | 1,034 | 22,294 | 9,102 |
| 1,178 | 2,765 | 35,191 | 23,060 | 23,058 | 9,087 | 16,568 | 11,380 | 13,946 | 10,495 |

(8) எட்டாவது பரிசு ரூ. 0—2—3

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13,936 | 22,369 | 10,464 | 1,181 | 373 | 9,096 | 11,352 | 13,622 | 19,811 | 34,949 |
| 23,094 | 35,195 | 138 | 23,085 | 4 | 22,833 | 22,953 | 15,017 | 1 792 | ... |
| 18,611 | 15,006 | 16,554 | 11,534 | 24,237 | 19,729 | 10,517 | 24,256 | 23,023 | ... |
| 16,657 | 2,423 | 22,536 | 22,834 | 18,413 | 16,591 | 16,597 | 22,999 | 9,073 | ... |
| 22,809 | 10,441 | 10,499 | 11,073 | 11,088 | 14,284 | 13,991 | 16,592 | 8 | ... |
| 140 | 10,525 | 19,837 | 11,078 | 11,532 | 10,944 | 19,108 | 11,387 | 35,187 | ... |
| 33,755 | 17,123 | 16,661 | 22,995 | 10,410 | 10,470 | 15,011 | 23,026 | 24,225 | ... |
| 1,175 | 22,339 | 17,435 | 22,533 | 22,411 | 10,501 | 11,123 | 34,843 | 15,010 | ... |
| 34,838 | 22,831 | 19,827 | 19,754 | 1,188 | 16,374 | 22,771 | 14,958 | 22,807 | ... |
| 16,599 | 13,992 | 34,950 | 17,470 | 19,120 | 23,089 | 19,112 | 19,812 | 22,333 | ... |
| 17,868 | 16,073 | 19,171 | 24,280 | 1 | 22,524 | 9,097 | 19,831 | 22,346 | ... |

(9) ஒன்பதாவது பரிசு ரூ. 0—1—6.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22,812 | 11,342 | 24,281 | 19,721 | 18,602 | 19,743 | 17,366 | 22,540 | 10,937 | 22,531 |
| 10,461 | 22,409 | 16,671 | 17,864 | 34,848 | 2,430 | 13,986 | 11,385 | 22,819 | 16,664 |
| 9,240 | 10,211 | 1,172 | 22,527 | 22,416 | 8 | 19,875 | 24,235 | 11,843 | 19,168 |
| 9,072 | 14 944 | 16,668 | 19,718 | 3,719 | 10,961 | 9,052 | 17,434 | 19,732 | 31,471 |
| 19,133 | 20,570 | 19,716 | 16,070 | 10,454 | 34,958 | 11,394 | 23,007 | 22,342 | 11,081 |
| 11 074 | 15,015 | 2,764 | 139,45 | 10,430 | 15 020 | 16,194 | 23,097 | 23,024 | 19,109 |
| 1,183 | 2,143 | 11,111 | 14,949 | 19,714 | 19,828 | 17,362 | 1,176 | 11,115 | 10,496 |
| 23,079 | 23,067 | 1,791 | 22,515 | 22,397 | 16,589 | 23,012 | 11,069 | 14,956 | 15,047 |
| 14,487 | 13,934 | 18,400 | 19,750 | 22,535 | 22,852 | 13,980 | 16,608 | 16,598 | 11,541 |
| 15,012 | 17,444 | 23,064 | 19,100 | 11,125 | 15 043 | 14,435 | 22,401 | 24,244 | 13,927 |
| 24,554 | 11,547 | 1,804 | 11,378 | 31,472 | 14,943 | 3,763 | 20,569 | 24,249 | 1,169 |
| 436 | 19,816 | 22,541 | 13,931 | 11,067 | 19,741 | 10,469 | 10 | 18,592 | 11,389 |
| 13,628 | 134 | 24,233 | 24,255 | 117 | 16,609 | 22,307 | 22,950 | 22,538 | 2,771 |
| 9,099 | 19,832 | 22,995 | 23 009 | 13,938 | 19,728 | 19,755 | 20,563 | 23,062 | 1,174 |
| 13,624 | 24,279 | 9,084 | 9,059 | 1,0503 | 34,867 | 9,100 | 23,001 | 34,941 | 16,565 |
| 23,077 | 116 | 19,868 | 22,351 | 9,065 | 22,293 | 18,702 | 24,224 | 9,094 | 34,943 |
| 16,376 | 10,516 | 34,836 | 9,232 | 22,830 | 11,121 | 11,377 | 22,826 | 24,241 | 22,463 |
| 16,561 | 22,340 | 23,031 | 34,414 | 17,132 | 22,466 | 11,070 | 19,882 | 10,966 | 22,368 |
| 23,013 | 22,420 | 13,630 | 17,365 | 15,041 | 18,599 | 10,963 | 22,370 | 17,692 | 14,279 |
| 10,962 | 24,243 | 14,451 | 9,230 | 10,445 | 13,636 | 22,993 | 369 | 9,108 | 17,426 |

(10) பத்தாவது பரிசு ரூ. 0—0—9.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23061 | 22821 | 22477 | 24247 | 24274 | 35198 | 1795 | 22468 | 19737 | 9047 | 14939 | 19134 |
| 16656 | 24215 | 24269 | 19876 | 18409 | 13985 | 9070 | 13948 | 19813 | 10526 | 11072 | 19170 |
| 23084 | 14447 | 2427 | 24251 | 1021 | 360 | 16604 | 24272 | 48 | 19877 | 34829 | 24283 |
| 10429 | 11129 | 35197 | 23076 | 22481 | 22438 | 23065 | 34827 | 22817 | 23081 | 19175 | 22820 |
| 22996 | 22514 | 10452 | 19883 | 31462 | 23071 | 135 | 356 | 11335 | 22530 | 24400 | 9228 |
| 1187 | 11076 | 22421 | 22784 | 17120 | 9082 | 19179 | 19113 | 19106 | 22424 | 19807 | 19123 |
| 10940 | 23010 | 1022 | 24218 | 22359 | 24258 | 16069 | 34954 | 1799 | 23002 | 18414 | 1785 |
| 9083 | 10460 | 1554 | 10941 | 15039 | 19804 | 1786 | 18398 | 22491 | 9086 | 34413 | 17121 |
| 24232 | 437 | 31461 | 16596 | 22521 | 24207 | 9224 | 23068 | 19746 | 11131 | 16071 | 22464 |
| 22528 | 2767 | 23004 | 19739 | 22493 | 22430 | 15014 | 23099 | 34864 | 16590 | 1798 | 13987 |
| 22343 | 10506 | 11386 | 9090 | 13943 | 23017 | 11390 | 11130 | 1547 | 14442 | 31463 | 13932 |
| 23098 | 19098 | 14454 | 14941 | 10414 | 123 | 10509 | 34855 | 19126 | 19097 | 22785 | 18395 |
| 16600 | 1544 | 1803 | 19730 | 16556 | 23093 | 51 | 34945 | 10976 | 22496 | 34938 | 24216 |
| 35185 | 19801 | 14453 | 17443 | 19809 | 11531 | 14950 | 112 | 2757 | 14438 | 15037 | 22399 |
| 24242 | 19886 | 9058 | 19733 | 19115 | 22434 | 34844 | 22547 | 34866 | 11542 | 17471 | 16062 |
| 18396 | 10972 | 17431 | 22740 | 11068 | 22341 | 23014 | 22422 | 10451 | 2142 | 1545 | 22844 |
| 19173 | 22428 | 22331 | 19819 | 23006 | 18608 | 34948 | 19178 | 19738 | 10434 | 13978 | 14439 |
| 19726 | 16072 | 2753 | 2139 | 22781 | 23063 | 11549 | 34411 | 22338 | 11351 | 359 | 22488 |
| 23086 | 14082 | 11119 | 15007 | 16593 | 15027 | 23057 | 22800 | 24231 | 113 | 13619 | 22832 |
| 22398 | 22818 | 22407 | 23095 | 1550 | 9049 | 17428 | 20562 | 19734 | 22347 | 10523 | ... |
| 22349 | 1560 | 22778 | 19881 | 11548 | 17371 | 16563 | 10412 | 19844 | 22472 | 22519 | 22476 |
| 19722 | 24219 | 19834 | 1800 | 18591 | 1562 | 11339 | 11336 | 17691 | 17429 | 16555 | 24286 |
| 22348 | 10977 | 22354 | 18394 | 22523 | 18597 | 20554 | 9222 | 16065 | 9067 | 10458 | 22402 |
| 22308 | 44959 | 34869 | 10967 | 22373 | 19821 | 14443 | 34837 | 19841 | 22432 | 16081 | 1028 |
| 24203 | 34939 | 22856 | 10472 | 1546 | 139 | 31464 | 1182 | 34853 | 17439 | 19803 | 24229 |
| 17374 | 22437 | 11112 | 15036 | 9236 | 34834 | 22403 | 16669 | 9106 | 17129 | 10958 | 1553 |
| 17379 | 128 | 16564 | 24266 | 34857 | 31465 | 24267 | 9064 | 22499 | 24222 | 24273 | 20561 |
| ... | 16067 | 13635 | 24284 | 10449 | 1787 | 13981 | 16066 | 9234 | 13627 | 20550 | 14446 |
| 16548 | 17136 | 22490 | 22469 | 10957 | 14449 | 22498 | 119 | 22816 | 16549 | 24866 | 22787 |
| 16676 | 19720 | 23080 | 363 | 22511 | 9220 | 1015 | 19822 | 2762 | 34947 | 5 | 10960 |
| 22952 | 19836 | 9238 | 22465 | 10521 | 24264 | 11393 | 13976 | 14947 | 19176 | 6 | 18701 |
| 19842 | 24202 | 22360 | 1788 | 13625 | 10959 | 9229 | 31467 | 1173 | 10975 | 23078 | 9057 |
| 1186 | 24263 | 129 | 15034 | 19125 | 13944 | 13633 | 19180 | 22823 | 16547 | 15026 | 22815 |

(இதனுடைய தொடர்ச்சியை 79-வது பக்கத்தில் கண்டு கொள்க.)



## அறிவியல் பகுதி

# காலச் சக்கரத்தின் கோலம் என்னே !

[திரு. மு. த. வேலாயுத முதலியார், வின்லங் சைகோன்]

வேதம், சாஸ்திரம், இதிகாசம், புராணம் முதலிய வைகளைக் கட்டிச் சுருங்கடலில் விட்டு, கண்ணுக் கெதிரே பிரத்தியட்சமாகத் தோன்றுவன எவையோ அவற்றையே உன்னத உலகும் உன்னுகிறது. புராணுதிகளினின்று எடுத்துக் காட்டும் உதாரணங்களனைத்தையும் இற்றைய உலகம் இகழ்வதுந் தவிர விஞ்ஞான சாத்திரத்தின் உதாரணத்தை உன்னி உன்னிப் புகழும் உலகம் இஃதாயிற்று.

பள்ளியிற் படிக்கும் மாணவனும், 'விஞ்ஞான சாத்திரத்தின் வாயிலாகக் காட்டும் உதாரணங்களைக் கொள்ளுவேனே யன்றி மற்றைய புராணுதிகளிற் காட்டும் உதாரணங்கள் உறுதி பயப்பனவா மாகையான் அவற்றைக் கொள்ளே' னென்கிருன். காலச் சக்கரத்தின் வேகத்தால் நாளுக்கு நாள், என் நிமிடத்திற்கு நிமிடமே, உலகம் பெரும் மாறுதலடைகிறது. "காலமறிந்து பிழையாதான் கோலமழிந்து குரங்காவான்" எனும் முதுமொழிக்கேற்ப மனிதன் தன் வாழ்க்கையை வனப்புறச் செய்ய விழைகின்றான். சன்மார்க்க நீதிகளைப் புராணங்களினின்று எடுத்துக் காட்டிப் போதித்த காலம் மலையேறி ஒளிந்துவிட்டது. இன்று எதையும் சினிமா படக் காட்சி முதலியவைகளினால் கண்ணுக்கெதிரே காட்டிக் கருத்துக் கொவ்வுமாறு செய்கின்றனர். இற்றைய மாணவர்க்கு மலை, காடு, கடல், சுரங்கம் முதலியவைகள் பொருட் பாடத்தில் வரும் பக்ஷத்தில் சினிமாவில் காட்டிப் பாடம் புகட்டுகின்றனர். இம்முறையே சிரிய முறையெனச் செவிடுபடச் செப்புவதை ஒப்புக்கொள்ளுகின்றனர் உயரிய உலகோர்.

உலகில் ஒரு பால் நடந்த விஷயத்தை மற்றொரு பால் மிகச் சுலபத்தில் காட்சிக்குக் கொணர்கின்றனர். பிரஞ்சு மந்திரிகளான ஸ்ரீமான்கள் லாவல், பிரியாண்டு முதலிய இவர்கள் சமீபத்தில் ஜெர்மனிக்குச் சென்ற பொழுது ஆண்டு ஸ்ரீமான்கள் புருனிங் கர்டியஸ் அவர்கள் வரவேற்ற அதி உன்னத காட்சிகளையும் உலகப் பிரசித்தி பெற்ற சினிமா நடிகர் ஸ்ரீ சார்லி சாப்ளின் என்பார் லண்டனில் மகாத்மா காந்தியாரைச் சந்தித்துப் பேசிய காட்சியையும் எக்காட்டினும் பார்க்க முடிந்ததாயின் உலகத்தின் முற்போக்கை ஆரே அறியவல்லார் ? (இண்டு சைனு பிலிம் கம்பெனியாரை, மேற்கண்ட அதி அவசியமான படங்களை வரவழைத்துச் சினிமாவில் காட்டும்படி சைகோன் பத்திரிகை ஒன்று கேட்கிறது.)

தொண்டர் நாதனைத் தூதுவிட்ட சுந்தரப் பெரியாரின் மகிமையும், எலும்பைப் பெண்ணுருவாக்கிய ஞான சம்பந்தரின் நலனுறு மகிமையும், ஊமைப்பெண்ணை உவப்புடன் பேசவைத்த மாணிக்கவாசகனார் எனும் உன்னுந்தோறும் இன்னமுதூறும் பெருமாதவர் மகிமையும், வெஞ்சுரத்தால் வெருண்டு வாடிய கூன்பாண்டியனுக் கருள் தந்த ஒப்புயர் விலாதாராம் அப்பர் தம்அருள் மகிமையும், சமீபத்தில் காலஞ் சென்ற விஞ்ஞான சாத்திர நிபுணர் தாமஸ் எடிசன் மகிமை முன்னே என்ன செய்ய வல்லன என்று மார்பு தட்டுங் காலம் இதுவாயிற்று.

பண்டைய ரிஷிகள் ஞான திருஷ்டியினால் ஒரு பாங்கு நடக்கும் விஷயங்களைத் தெரிந்துணர்ந்து கொண்டது பண்டைய நூல்களின் வரலாறே ஒழிய இற்றைக்கும் அங்ஙனம் நடைபெறுகிறதா? ஆனால் இன்றோ, அந்தக் காலத்திய தபோதனர் ஞான திருஷ்டியினால் உணர்ந்திட்ட நேரத்திற்குள், 'அலோ 168' என்று சொல்லி வாய் மூடுமுன் குறித்த விடத்தில் பேசுகின்றோம். இம்மட்டோ? உலகத்தின் எத்திசையிலும் நடக்கும் அதிஅற்புதங்களை ஒரு பாங்கே நின்று கம்பியில்லாத் தந்தி மூலம் அறிகின்றோம். ஆகையான் பண்டைய நாளில் ஞான திருஷ்டியினால் பார்த்துத் தனக்குள்ளேயே வைத்துக்கொண்ட முனிவரின் மகிமை பெரியதா? இற்றை நாளில் பல்லாயிரமைலுக் காப்பால் நடைபெறும் விஷயங்களை உடனே எல்லோரும் தெரிந்துகொள்ளும் விதம் கண்டு பிடித்த இரசாயன விற்பனரின் மகிமை பெரியதா எனப் பள்ளியிற் படிக்கும் சிறு பிள்ளையும் தெள்ளிதிற் கேட்க முன் வந்துள்ள காலம் இஃதாயிற்று.

இவையே யன்றி இன்றைய உலகம்—நவீன உலகம்—விஞ்ஞான சாத்திர உலகம்—வீறிட்டோங்குவது ரேடியோ, ஒலிபெருக்கி, டெலிவிஷன் முதலியவைகளினாலேதான். இப்பொழுது ஓர் இடத்திலிருந்து மற்றோரிடத்தில் உள்ளவரிடம் பேசுவதுந் தவிர, பேசுபவர் இன்னாரென்றும் தெரிந்து கொள்ளுகின்றனர். இவ்விதம் பேசுவது "டெலிவிஷன்" என்னுங் கருவியைக் கொண்டு தான். சைகோன் "ஒப்பினியன்" என்னும் பிரஞ்சு

தினசரிப் பத்திரிகையில், இதைப்பற்றி எழுதப்பட்ட சில விஷயங்களை மட்டும் கீழே தருகின்றேன்:—

சமார் முப்பது வருடங்கட்கு முன், மிகவும் தூரத்தி லிருப்பவரைக் கருவியின் சகாயத்தாற் பார்ப்பது மிகவும் பைத்தியம் வாய்ந்த பகற்கனவே யாகும் என எண்ணினார்கள். இப்படிப் பார்ப்பதற்கு ஆராய்ச்சியாளர்கள் பலரின் முயற்சியால் இக் கருவி கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் அதிக முயற்சியால் கண்டு பிடிக்கப்பட்ட இந்த டெலிவிஷன் எனனும் கருவியை ஆட்சிக்குக் கொண்டுவர, சிலர் தங்களுக்கு நேர்ந்த இன்னல்கள் பலவற்றுடன் உயிரையும் இழக்க நேரிட்டது.

இன்றே நாம் மேற்கண்ட கருவியை உபயோகிக்கின்றோம். அது இன்னும் உயரிய முறையில் அதாவது கம்பியில்லாத் தந்திபோல் நல்ல வெற்றிக்கு வருங்காலமும் சமீபித்துவிட்டது. அமெரிக்கா யூ. எஸ். ஏவில் இம்முறை வெற்றி பெற்றிருக்கிறது. தற்காலம் அங்கு, நியூயார்க், வாஷிங்டன், போஸ்டன், ஷிக்காகோ முதலிய ஊர்களில் டெலிவிஷன் பரவி வருகின்றது. இப்பொழுது மாத்திரம் அங்குச் சுமார் 15,000 டெலிவிஷன் ஸ்தாபனங்கள் இருக்கின்றன. இன்னும் ஓர் ஆண்டிற்குள் ஒரு லக்ஷம் எண்ணிக்கை ஆகும் என்று கருதுகிறார்கள்.

மேற்கண்ட கருவியில், சச்சதுரமான திரை ஒன்று காணப்படும். இது ஒவ்வொரு பக்கமும் சுமார் 20 சாந்தி மேட்டர் நீளமிருக்கும். இத்திரையில்தான் உருவம் தெரியவரும். இதை இன்னும் நல்ல முறைக்குக் கொண்டுவரப் பிரயாசைப்படும் பௌதிக சாஸ்திர விற்பனர்கள் சமீப காலத்தில் இன்னும் உயரிய முறைக்குக் கொண்டு வரலாம் என நிச்சயிக்கின்றனர்.

இப்பொழுது நியூயார்க்கில் ஆறாவது ஸ்டேஷன் திறந்திருக்கிறார்கள். ஒரு நாளைக்கு இரு முறை, இந்த ஸ்டேஷனில், கொலொம்பியா ஸ்டேஷனில் உள்ள விஷயங்களைத் தெரிவிக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஏழாவது ஸ்டேஷன் ஒன்று திறக்கவும் -இப்பொழுது உத்தரவு கேட்டிருக்கிறார்கள். இந்த ஸ்டேஷனை எப்படி அமைக்கப் போகின்றார்களென்றால், உலகிலுள்ள உயரமான கட்டடங்க ளெல்லாவற்றிலும் அதிக உயரமாய் அதாவது 103 மாடிகள் (318 கெஜம்) உள்ள பெருங்கட்டடம் கட்டி 103-வது மாடியில் திறந்த வெளியில் உருவங்களையும் ஒலிகளையும் வெளியிடும் கருவியை அமைக்கப் போகின்றனராம். ஏன் இவ்வாறு அதிக உயரத்தில் அமைக்க வேண்டுமெனிற் காரணமுண்டு. ஒரு ஸ்டேஷனிலிருந்து மற்றோர் ஸ்டேஷனுக்கு வரும் ஒலி ஒளித்திரளானது (Wave) வழியினூடே இருக்கும் பெரிய கட்டடங்களினால் மோதப்பட்டோ அல்லது மறிக்கப்பட்டோ இடையூறு ஏற்படுவதனால் அலைத்திரள் சிதறுகின்றன. ஆனால் ஒருவிதத் தடையும் இல்லாத உயர்ந்த இடத்தில் பரந்த வெளியில் இருப்பின் ஒலியும் ஒளியும் நன்றாய்ப் பரவிப் பலன் தரும்.

இன்னும் "ஐந்தாவது சாலை" என்னும் இடத்தில் ரேடியோ நகரம் (Radio city) என்னும் ஓர் பெருங் கட்டடம் கட்டப்போகின்றனர். இதைக் கட்டி முடிக்க 5 கோடி டாலர் ஆகுமாம். இதில் டெலிவிஷன் வைத்து நடத்தப் போகின்றனராம். இதில் நான்கு ஹால்கள் தனியாய் ஒதுக்கப்பட்டிருக்குமாம். அங்குத் தான் பேசுபவர்களின் உருவமோ அல்லது பொருள்களின் உருவமோ தெரியும் விதமாய் ஏற்பாடு செய்யப் போகின்றனராம். இன்னும் 27 இடங்களில் பெரும் அறைகளாகக் கட்டி அங்கிருந்து வேறு ஸ்டேஷன்களுக்கு உருவங்களை அனுப்புவதற்குத் தயார் செய்யப்போகின்றனர். நேஷனல் பிராட் காஸ்டிங் கம்பெனியின் தலைவராகிய ஸ்ரீ அய்லெஸ்வர்த் என்பார், இன்னும் ஒரு வருடத்திற்குள் இந்த டெலிவிஷன் என்னுங் கருவி பூராவும் விருத்தி யடைந்துவரும் என்பது திண்ணம் என்றும், இதன் மூலம் எல்லாக் காட்சிகளையுமே வேறொரு ஸ்டேஷனில் வெளியிடலாம் என்றும், அப்பொழுதுதான் இக்கருவி உலகம் முழுதும் பரவிப் பெரும்பயன் அளிக்கும் என்றும் கருதுகிறார்.

### பிற்காலத்திய கூட்டம் எவ்வாறு நடைபெறும்?

அரசாங்க சபை கூடுவது போன்ற விஷயங்களில் டெலிவிஷன் மிகவும் பயன் அளிக்கும். எவ்வாறெனின், இடை இடையே உள்ள இருபது ஊர்களின் மெம்பர்கள் ஒரு கூட்டங் கூடவேண்டியிருந்தால் எல்லோரும் ஒன்றுசேர வேண்டிய தவசியமில்லை. அவரவர்களும் தத்தம் பட்டணத்திலிருந்தே கூட்டங் கூடி முடிவைக் கிரகிக்கலாம். சாதாரணமாய் டெலிபோன் மூலம் ஒவ்வொரு அங்கத்தினரும், மற்றைய பத்தொன்பது அங்கத்தினருடைய அபிப்பிராயங்களைக் கேட்டுணர்வது சகஜம். ஆனால் இந்த டெலிவிஷன் என்னுங் கருவியின் சகாயத்தால் ஒவ்வொரு அங்கத்தினரும் கேட்டுணர்வதுந் தவிர பேசுபவர் எல்லோரையும் பார்க்கவும் முடியும். இப்படியாகக் காதால் விஷயங்களைக் கேட்டும், கண்ணால் ஒவ்வொருவரையும் பார்த்தும் எந்த விதமான பெரிய கூட்டங்களையுங் கூட்டி முடிவைக் கிரகிக்கலாம். இம்மட்டோ? இன்னும் ஒவ்வொரு மெம்பரும் கூறும் விஷயங்களையும் தலைவரின் கருத்து முதலிய எல்லாவித வசனங்களையும் டைப் அடித்து இந்தக் கருவியில் காட்டினால் மேற்படி விஷயங்களை அவ்வவ்வூரில் இருக்கும் மெம்பர்களும் அறிந்துகொள்ள முடியும். மற்றும் அதன்கீழ் ஒவ்வொரு அங்கத்தினரும் கையெழுத்திட்டுக் காண்பிக்கலாம். இப்படியாக நவீன காலம் ஒன்று வந்தே தீரும். அக்காலத்திலோ எந்த விதமான மோசடிகளையுந் தெரிந்துகொள்ளலா மென்பது திண்ணம்.

மற்றும் ஒரு பட்டணத்தி லிருக்கும் ஓர் வியாபாரி அடுத்த பட்டணத்திலிருக்கும மற்றொருவரிடம் தாம் வைத்திருக்கும் சரக்குகளை மேற்கண்ட






## எங்கள் அப்பாவுக்குச் சம்பள நாள் !

'நாளையதினம் வெள்ளிக்கிழமை எங்கள் அப்பாவுக்குச் சம்பளம் வரும்! வீட்டில் எங்கள் ஒவ்வொருவருக்கும் என்ன கொண்டாட்டம்! தினிசவாரியாய்ப் பழங்கள் வாங்கி வருவார். பழங்கள் நாலு நாளைக்குத் தின்போம்; இன்பண்டங்களே உண்போம் தொடர இரண்டு மூன்று நாட்களுக்குச் சேலை, ப...ாடைகள் வாங்கி வருவதாக நாலு மாதமாய் சொல்லிக்கொண்டிருக்கிறார். ஒருசமயம் நாளைக்கு வாங்கி வந்தாலும் வாங்கி வரலாம்!' என்று கோகிலம் பள்ளிக்கூடத்திற்குப் போகும் வழியில் லீலாவதியுடன் சந்தோஷமாய்க் குதித்துக் குதித்துச் சொன்னாள்.

அதற்கு லீலாவதி கோகிலத்தைப் பரிதாபத்துடன் பார்த்து, 'தோழி கோகிலம், மூன்று நாலு நாளைக்குப் பழங்களும் இனிய பதார்த்தங்களும் சாப்பிடுவது ஒரு ஆனந்தமா?' என்று கேட்க, 'ஆனந்த மில்லையா? நாங்கள் பத்து நாட்களாகப் படும் கஷ்டம் எவ்வளவு! அரை வயிறும் குறை வயிறும், காய்கறி யில்லாமலும் உண்கிறோம். "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்று பெரியோர்கள் சொல்வதுண்டு. எங்களைப் பார்த்தாலே நீ தெரிந்துகொள்ளலாம். வீட்டிற்குள் எங்கள் நிலைமை அப்படியிருக்க, வெளியில் வரும்பொழுதும் எங்கள் உடுப்புக்களைப் பார், லீலா. நாலு மாதங்களாகச் சோழிந்த ஆடைகளைத் தரித்துக் காலம் தள்ளி வருகிறோம். நாளைய தினம் நல்ல தினம் அல்லவா எங்களுக்கு?' என்று கோகிலம் படபடத்துப் பதிலுரைத்தாள்.

லீலா: ஒரு வருஷமாக என் தாயார் உங்கள் நிலைமையை வெகு பரிதாபத்துடன் கவனித்து வருகிறார்கள். மாதத் துவக்கத்தில் உங்கள் களிப்பையும் கொண்டாட்டத்தையும் பார்த்து மிகவும் வருந்துவார்கள். அவர்களுக்கு உங்கள் தாயாரிடம் வந்து பேசவேண்டுமென்ற ஆவல் மேலிட்டிருக்கிறது. இன்றைய தினம் அந்தப் பேச்சை எடுத்ததால் நான் அதை உனக்கு வெளியிடுகிறேன்.

கோகிலம்: எங்கள் வீட்டிற்கா வரப்போகிறார்கள்! எதற்காக? வந்தால் எங்களைப் பார்த்து என்ன நினைப்பார்களோ! இந்தச் செய்தியை எங்கள் அம்மாவிடம் இன்றைய பகலே அறிவித்து வைக்கிறேன்.

லீ: என் தாயாருக்கு உங்கள் குடும்பத்தின்மீது இருக்கும் கருணை இனி உங்களுக்கு விளங்கும். அவர்கள் உங்கள் தாயாரிடம் சொல்லப்போகிற சங்கதிகள் எனக்குத் தெரியும். உங்கள் குடும்பத்தைப்பற்றி யாதொன்றும் பேசமாட்டார்கள்; எங்கள் குடும்பத்தை நாங்கள் எப்படி நடத்தி வருகிறோம் என்று தெளிவாகச் சொல்லப் போகிறார்கள்.

கோ: எப்படி நடத்தி வருகிறீர்கள், எனக்குச் சற்றுச் சொல்லம்மா.

லீ: முதலில் எங்கள் வரும்படி எவ்வளவென்று என் தகப்பனாரும் தாயாரும் பேசிக்கொண்டு திட்டமாய் அறிவார்கள். இந்த வருஷத்தில் கலியாணம் முதலிய விசேஷங்களும், மற்ற விசேஷங்களும் ஏதாவது உண்டோ; அவற்றிற்கு எவ்வளவு செலவு பிடிக்கும், என்று ஒருவாறாக எதிர்பார்த்துத் தீர்மானிப்பார்கள். எதிர்பாராத துன்பங்கள் ஏதாவது உதிக்குமோ, அவற்றிற்காக ஏதோ கொஞ்சம் பணம் மிகுத்தி வைப்போம் என்று எண்ணுவார்கள். வருஷாந்தரத்திற்கு வேண்டிய நவதானியங்

(52-வது பக்கத் தொடர்ச்சி)

கருவியின் மூலம் காட்டி வியாபாரம் நடத்தலாம். இதனால் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குச் சரக்குகளுடன் செல்லும் சிரமம் ஒழிந்து அவ்வவ்விடத்திலேயே காரியம் நடைபெறும். இன்று நடைபெறும் சினிமா அன்று டெலிவிஷன் மூலம் நடைபெறும் என்பது துணிபு.

ஆகையான் ஈண்டு நாம் கருதுவது யாதெனின், விஞ்ஞான சாத்திரத்திற்கே ஒரு புதிய சகாப்தமும் புத்துயிரும் தோன்றிவிட்டனவென்பதே. விஞ்ஞான சாத்திர உணர்ச்சியினால் உலகத்தையே நடுக்கிடச் செய்கின்றனர். இன்னும் அறிவியலுலகம் சுடர்விட் டெரியுங் காலம் ஒன்று வந்தே தீரும். அன்றே அக்காலத்தாருக்கு மத்திய காலமாகவும், நமக்குச் சுடர் விடுங் காலமாகவும் தோன்று மென்பதற்கோர் ஐயமின்றும். காலச் சக்கரத்தின் [illegible]

களும், புளி மிளகாய் வகைகளும் அததன் பருவ காலத்து விற்கும்பொழுது வாங்கிச் சேகரித்து வைப்பார்கள். அவ்வாறே வருஷாந்தரத்திற்குத் துணிமணிகளுக்கு மாதந்தோறும் ஒரு தொகை மிகுத்திவைத்துச் சேர்ப்பார்கள். இவற்றையெல்லாம் நோக்கியே பிரதிமாதமும் பணம் ஒரு நிதியில் கட்டிவைப்பார்கள். மேலும் எங்கள் தகப்பனார் ஒரு 'கோவாபரேடிவ் ஸொஸைடி' என்னும் கூட்டுறவுச் சங்கத்தில் சேர்ந்திருக்கிறார். அச்சங்கத்தார் சாமான்களை மொத்தமாய் வாங்கி அங்கத்தினருக்கு விற்கிறார்கள். இவ்வித நன்மைகளைப் பெற அந்தந்த குடும்ப பாரத்திற்கேற்ற தீர்க்க திருஷ்டியும், நுண்ணறிவும், முன் ஜாக்கிரதையும் இருக்கவேண்டும். கடவுள் ஜெந்துக்களுக்கும் பறவைகளுக்கும் இயற்கையாக அமைத்திருக்கும் "முன் ஜாக்கிரதை"யிலிருந்து மானிடராகிய நாம் கற்றுக்கொள்ளவேண்டியது எவ்வளவு இருக்கிறது!

எங்கள் வீட்டில் வருஷச் செலவுகளும், மாதச் செலவுகளும், தின செலவுகளும் கூடியமட்டில் முன்னரே தீர்மானிக்கப்பட்டுள்ளன. அநேகமாய் அந்தத் தீர்மானத்தைக் கடந்து நாங்கள் செல்லோம்.

கோ: இவையெல்லாம் நல்ல ஏற்பாடுகளே. இவை எங்கள் வீட்டில் எப்படி நடக்கப்போகின்றன! எங்கள் அப்பாவுக்குச் சொற்ப வரும்படி. எங்கள் அம்மா சில வகைகளுக்கே பணம் செலுத்த வேண்டும் என்பாள். அப்பா தாம் குறித்த வகைகளுக்கே செலவிட வேண்டுமென்பார். சம்பளம் வந்த இரண்டு மூன்று நாட்களுக்கெல்லாம் கோபமும் தாபமும் ஆரம்பித்துவிடும்.

லீ: அதிக வரும்படி, குறைந்த வரும்படி என்று சொல்வது சரியல்ல. வரும்படிக்கேற்றபடி செலவைத் திட்டப்படுத்த வேண்டும். முதலாவது குடும்பத் தலைவருக்குள் 'ஒற்றுமை' யிருந்தால் மாத்திரந்தான் இது நடக்கும். புருஷன் மனைவியின் விருப்பத்தையும் குடும்பத்தில் ஒவ்வொருவருடைய தேவையையும் சூட்சுமமாய் அறிந்து கவனிக்க வேண்டியவராயிருக்க, இல்லாளும் அவற்றை யூகித்தறிந்து தலைவரின் தீர்மானத்தின்படி செலவிடத் திறமையுள்ளவன் என்கிற 'நம்பிக்கை'யைப் பெற வேண்டும். நாம் பேசிய குடும்ப காரியங்கள் முன்னரே ஆலோசித்துத் தீர்மானித்தபடி தினசரி நடந்தேற வேண்டுமானால் இல்லாளிடத்தில் 'நம்பிக்கை' என்பதும் குடும்பத்தில் 'ஒற்றுமை' என்பதும் அவசியம் இருக்கவேண்டும். ஒரு குடும்பம் ஒரு சிறிய ராஜ்ஜியம் என்று எண்ணவேண்டும். குடும்ப ஆலோசனை சபையில் சிறுவர்களான நாங்களும் பெரியோர்கள் சொல்வதைக் கவனித்துக் கேட்போம். அவ்வித ஒழுங்கால் எங்கள் வீட்டுக் காரியங்கள் நடந்தேறி வருகின்றன. தினசரி வாழ்க்கையிலும் நாங்கள் எங்கள் வரும்படிக்குத் தக்கவாறு நடந்துகொள்வோம். ஆனந்தமாய் இருக்கக்கூடிய விசேஷ சம்பவங்களிலும் எங்கள் பொறுப்புக்கு மிகுந்த பெருமைகளிற் புகோம்; எதிர்பாராத துன்பங்கள் நேர்ந்தாலும் கடவுள் கிருபையை நாடி, பண விஷயத்தில் பிறர் உதவியைக் கூடியமட்டில் தேடாது, எங்கள் சேமிப்பைக் கொண்டே காரியத்தை அல்லார் அயலாருக்குத் தெரியாதபடி முடித்துக்கொள்வோம். 'துக்கம் நேரும் காலத்தில் பணக் கஷ்டம் பெருந்துக்கமல்லவோ? இவ்வாறான ஜாக்கிரதைகளால் வாழ்வில் மெய் மறந்து ஆனந்தப்படாமலும், தாழ்வில் மனத் தளர்ச்சி யடையாமலும் ஜகதீசரைக் குடும்பத் தலைவராக எண்ணி எங்கள் கையைக்கொண்டே நாங்கள் ஜீவிக்கும்படியான அருள் அளிக்கவேண்டுமென்று துதித்து வாழ்ந்து வருகிறோம்.

கோ: நாங்கள் அவ்வளவு பயிற்சி யடைய வெகு கஷ்டப்படுவோமோ? எங்களால் கூடுமா? எங்கள் அம்மாவை உங்கள் வீட்டிற்கு அழைத்து வருவதே மேல் என்று தோன்றுகிறது.

லீ: தாயார் மாத்திரமல்ல, தகப்பனும் வரலாம். உங்கள் தாய் தந்தையர் எங்கள் வீட்டிற்கு வருவதை எங்கள் தாயார் தகப்பனார் இரு குடும்பத்தாருக்கும் பெரும்பாக்கியமாக மதிப்பார்கள். அவர்களுக்குச் சம்மதம் இருந்தால் நான் வந்து அழைத்து வருகிறேன். எங்கள் வீட்டிற்கு வருவதால் அநேக குடும்பங்கள் சீர்பட்டிருக்கின்றன. சம்பள நாள் என்று சொல்லுகிறாயே, என் அருமைக் கோகிலம், நாளையதினமே அவர்களை அழைத்து வருகிறேன். எங்கள் வீட்டில் சம்பள தினமும் ஒன்றுதான் மற்ற தினமும் ஒன்றுதான். நான் ஒரு உபமானம் சொல்லுகிறேன் கேள். சில நதிகளில் மழை பெய்யும் பொழுதுதான் நீர் ஓடும்; சிலவற்றில் மழை நின்ற பிறகும் ஊற்று நீர் ஓடும்; கங்கையைப் போன்ற நதிகளின் உற்பத்தி ஸ்தானத்தில் மலையின்மேல் பனி உறைந்திருப்பதால் அவற்றில் வெள்ளம் எப்பொழுதும் ஓடிக்கொண்டேயிருக்கும். அவ்வாறே குடும்பங்களில் சேமிப்பு குவிந்துகொண்டு வருமாகில், வரும்படி குறைந்த அல்லது அற்ற காலத்தில் அந்தச் சேமிப்பு உதவுவதால், குடும்பத்தின் பாக்கியம் வற்றாக் காவேரியாகவும் வடியாக் கங்கையாகவும் பெருகும். மாதம் முதல் தேதியில் எங்கள் தந்தையாருக்குச் சம்பளம் வருகிறபோதிலும், நாங்கள் ஒற்றுமையாலும், நம்பிக்கையாலும், முன்னறிவினாலும், ஊக்கையினாலும் எங்கள் வரும்படிக்கேற்றபடி செலவுகளை அவ்வளவு சீராய் நிர்மாணித்திருக்கிறபடியால், கோகிலா!

எங்கள் வீட்டில் ஒவ்வொரு தினமும் சம்பள தினமே.

(மாதர் போதினி)



# ஆராய்ச்சிப் பகுதி

## பொங்கற் புது நாள்

(ஒரு சிற்றாராய்ச்சி)

[திரு. பி. சே. மாணிக்கவாசக முதலியார், காஞ்சிபுரம்]

பண்டைக் காலந்தொட்டுத் தமிழர்களால் சிறப்பாகக் கொண்டாடப்பெறும் விழாக்களில் பொங்கல் விழாவும் ஒன்றாகும். பொங்கல் என்பது தூய தமிழ்மொழி. வடசொல் திரிபன்று; அல்லது வேறு எம்மொழியினின்றும் கடன் வாங்கப்பெற்றதுமன்று. விநாயக சதுர்த்தி, சரஸ்வதி பூஜை, தீபாவலி, போகிபண்டிகை போன்றன வடமொழிச் சொற்கள். எனவே, இவ்விழாக்கள் பண்டை நாட்களில் வடமொழியாளரால், ஆரிய மக்களால் கொண்டாடப் பெற்றனவாகும். யுகாதி என்பது தெலுங்கு மொழி. இவ்விழா ஆந்திர மக்களால் பண்டு கொண்டாடப்பட்டதாம். பிற்காலத்தில் பலவகை மொழியாளரும் நெருங்கிப் பழகியதால் ஒருவர் விழாவினை மற்றவர் ஏற்றுக் கொண்டாடத் தொடங்கினர். ஆரியர், ஆந்திரர் முதலியோரது விழாக்கள் தமிழரால் அங்கீகரிக்கப் பெற்றன. தமிழர் விழாவும் ஏனையோரால் ஏற்றுக்கொள்ளப் பெற்றது. ஆனால் அவ்வம் மொழிகளிலேயே விழாக்கள் வழங்கி வருவது ஈண்டு கவனிக்கற்பாலது. விழாவின் பெயர் எம்மொழியில் அமைந்திருக்கிறதோ அம்மொழியாளரால் அவ்விழா பண்டு கொண்டாடப்பெற்றதென்பது துணிபு. ஒரு பொருள் ஒருவரிடத்தே இருக்குமாயின் அதற்குப் பெயரும் இட்டிருப்பர். பொருளில்லாவிடத்துப் பெயருமில்லை. இக்காலத்தில் இந்தியாவில் உள்ள அநேக மரஞ்செடி கொடிகட்கு ஆங்கிலப் பெயரின்மையும், புதிது புதிதாய் ஆங்கிலத்தில் பெயர்கள் அமைக்கப்பட்டு வருவதும் மேனாட்டில் அம் மரஞ் செடி கொடிகள் இன்மையைக் காட்டுவதாம். அதே முறையில் ஆங்கில விஞ்ஞான உலகில் காணப்படும் பல பொருள்களுக்குத் தமிழ்ப் பெயரின்மையும் ஆங்கிலப் பெயராலேயே அவற்றை நாம் வழங்கி வருதலுமுண்டு.

பலவகைப் பொருள்களையும் அவற்றின் பெயர் கொண்டு நிச்சயிப்பது போன்று யுகாதி, சரஸ்வதி பூஜை போன்றன தமிழர் விழாவல்ல என்பதும், பொங்கல் தமிழர்க்கே சிறப்பான விழா வென்பதும் அவற்றின் பெயரால் நன்கு அறியலாம்.

தமிழர் கொண்டாடிய விழாக்கள் பல உண்டு. திருஞான சம்பந்தர் காலத்தில் தமிழர்கள் வழக்காற்றில் இருந்த பல விழாக்களை அவர் திருமயிலைத் தேவாரத்திலே குறிக்கின்றார். அவை:— ஐப்பசி ஓணவிழா, கார்த்திகை விளக்கீடு, மார்கழி ஆதிரை நாள், கேரிழையார் கொண்டாடும் தைப்பூசம், மாசிக் கடலாட்டு, பங்குனி உத்திரம், பதினெண் கணங்கள்தம் அட்டமி நாள் என்பனவாம். இவ்விழாக்களனைத்தும் தமிழர்க்கே உரியனவென்று நிச்சயித்துக் கூறுதலும் முடியாது. திருஞான சம்பந்தருக்கு முற்பட்ட காலங்களிலிருந்து இவை தமிழர்களால் நெடுநாட்களாகக் கொண்டாடப்பெற்று வருகின்றனவா என்பது நிறைமதியுடையோரால், தமிழ் நூலாராய்ச்சி வல்லுனரால் ஆராய்ந்து முடிவு செய்யப்பட வேண்டியதாகும்.

இவ்விழாக்களில் கார்த்திகை விளக்கீடு எனச் சிறப்பிக்கப் பெற்றதே இந்நாளில் கார்த்திகைத் தீபமெனத் தமிழ்நாடெங்கும் சிறப்புறு விழாவாக விளங்குகிறது. கார்த்திகை நாளில் மாலைப்போதில் வீடுகளும், தெருக்களும், ஆலயங்களும் வரிசை வரிசையாக விளக்குகள் ஏற்றப்பெற்றிருக்கும். குச்சு வீட்டிலும் விளக்குகள், மச்சு வீட்டிலும் மாடி வீட்டிலும் விளக்குகள்; வீதிகள் முழுதும் விளக்குகள்; எங்கும் விளக்கொளி; எங்கும் ஒளி மயம்.

களங்கமற்ற வானத்தில் ஆயிரக்கணக்கான உடுக்கூட்டங்கள் தோரணையாகத் தோன்றுவதொப்பக் காணும் விளக்கு வரிசைகளின் காட்சியானது அனைவர் கண்களுக்கும் பெரிய விருந்தளியாநிற்கும். அவ்விருந்தினை ஆர்ந்து மகிழ்ந்த கண்களின் பேரின்பக் கடலிற் படிந்து உள்ளம் உவகை யரும்பி மகிழ்ச்சியின் மலர்ந்து நிற்கும். அம்மகிழ்ச்சிப் பெருக்கினை நுகராது போதல் நீதியோ என ஞான சம்பந்தப் பெருந்தகையார் பூம்பாவையின் எலும்புக்கூட்டை நோக்கி, "துளக்கில் கபாலீச் சரத்தான்தொல் கார்த்திகைநாள் விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்" என்று அவ்விழாவின் பெருமை தோன்றக் கூறுகின்றனர்.

ஆரியர்கள் இத்தகைய விளக்கீடு விழாவாகக் கொண்டதே தீபாவலித் திருநாளாகும். தீபாவலி என்பதற்கு விளக்கு வரிசை எனப் பொருள். (தீபம் - விளக்கு, ஆவலி - வரிசை அல்லது மாலை.) தீபாவலியைத் தமிழர் ஏற்றபோதுதான் அந்நாளில் விளக்கேற்றும் வழக்கம் மாறியிருத்தல் வேண்டும். கார்த்திகையில் விளக்கேற்றி மகிழ்ந்து நின்ற தமிழர்கள் அதற்கு முன் மாதத்திலும் தீபாவலியன்று விளக்கு வரிசைகள் அமைக்க இசைவரோ

அன்று விளக்கேற்றும் வழக்கத்தைப் புகுத்த இயலாதெனக் கண்ட ஆரியர்கள் அவ்விழாவினை வேறு வகையில் கொண்டாடுதற்கேற்ற முறைகளையும் கதைகளையும் கற்பித்தனர்போலும். ஆனால், அம்முறைகளிலும், கதையிலும் நுணுகி ஆராய்வோர் அநேக உண்மைகளைக் காண்பர். இதுபற்றி மற்றொரு சமயம் ஆராய்வோம். எடுத்துக்கொண்ட பொங்கற் புது நாள் பற்றிச் செல்வோம்.

பொங்கல் என்ற தமிழ்ச்சொல்லுக்குப் பொங்குதல் என்பது பொருள். பொங்குதல் எனக் கூறும்போது எதைப் பொங்குதல், எதிற் பொங்குதல், எங்கே பொங்குதல், எதற்காகப் பொங்குதல், எப்பொழுது பொங்குதல் எனக் கேள்விகள் எழலாம். எப்பொழுது, எங்கே, எதற்காக, எதில், எதைப் பொங்குதல் என்பதற்கு விடை கூற வேண்டுவது அவசியமே. ஆண்டுதோறும் தைமாதம் முதல்நாளன்று சூரியனுக்குப் படைத்தற்பொருட்டு, வெளியான நடுவாசலிலே, புதுப்பானையிலே, புதுப்புனல், புதிய அரிசி முதலியன கொண்டு பொங்குகிறோம். இதில் கூறப்பெற்ற வழக்கங்கள் வேறு விழாக்களில் காணப்பெறுதனவாக இருக்கின்றன. இதற்குக் காரணமென்னே? இதுவே நம் ஆராய்ச்சிக்குரிய விஷயமாகும்.

ஏனைய விழாக்களனைத்தும் நட்சத்திரங்களையும் திதிகளையும் பற்றி வர, இப்பொங்கலொன்று மட்டும் தேதிபற்றி வருவது இங்குக் கவனிக்கற்பாலது. அதிலும் தைமாத முதல் நாள் கொண்டாடப்படுகிறது. சூரியன் தெற்கிலிருந்து வடக்கே சாய்ந்து செல்லத் தொடங்கும் நாளும் தைமாத முதல் நாளாகும். இதையே உத்தராயண புண்ணிய காலம் என்றுங் கூறுவர். இதுவே, தேவர்கட்குப் பகற்பொழுது ஆரம்பமாகும் நாளென்றுஞ் சொல்லுவர். இப்படி உத்தராயண ஆரம்ப நாளாகிய தைமாத முதல் நாளன்று இவ்விழா அமைந்திருப்பதையும் இதன் நடைமுறைகளையும் கவனிக்கும்போது இதுவே தமிழர்களின் ஆண்டு தொடக்கமாகப் பண்டை நாளில் இருந்திருக்கக்கூடுமோ என எண்ண இடந்தருகிறது.

புது ஆண்டு தொடக்கமாதலின் அன்று பழையன கழித்து எல்லாம் புதியனவாகக் கொள்ளுதல் வழக்கமாக இருக்கிறது. மக்கள் வீடுகளைச் செப்பனிடுவர்; சுண்ணும்பு வர்ணமாதியன தீட்டி அவற்றைப் புதுப்பிப்பர்; பழம் பாண்டங்களை நீக்கிப் புதுப் பாண்டங் கொள்வர்; பழைய ஆடை களைந்து புது ஆடை தரிப்பர்; மார்கழி மாதத்தில் அறுவடையாகி வீடு சேர்க்கப்பெற்ற புது நெல்லினுலாய அரிசி கொண்டு புதுப்பானையில் பெரும் பொங்கலிடுவர்; புதியனவாய்க் கிடைக்கும் காய்கறிகள் பலவுஞ் சமைப்பர். சமைக்கப்பட்ட பொங்கலும் காய்கறிகளுமாகிய இவற்றோடு பால், தயிர், பழம், கரும்பாதியனவற்றையும் கொண்டு என்றும் இல்லா வழக்கமாய் மஞ்சள் இலையிலே நடுவாசலிலே படைத்துச் சூரியனை வணங்குவர். இவ்விழாவில் மஞ்சள் செடியும், மஞ்சளும் முக்கிய இடம் பெறும்.

இவ்வாறு எப்பண்டிகையில் வீடுகள் புதுப்பிக்கப்படுகின்றன? பெரும்பொங்க லிடப்படுகிறது? எல்லாம் புதியனவாய்க் கொள்ளப்பெறுகின்றன? சூரியன் வணங்கப் பெறுகிறான்? மஞ்சள் பெரிதும் பாராட்டப்படுகிறது? வேறெவ் விழாவிலும் இவ்வழக்கங்களில் ஒன்றேனும் காண்கின்றோமில்லை. இவைகளைக் கூர்ந்து கவனியுங்கள்.

நாள், திங்கள், ஆண்டுகளை வகுப்பவன் யார்? சூரியனன்றோ? சூரியன் இல்லையேல் பகல் இரவு உணரக்கூடுமோ? ஆண்டு ஆரம்ப முடிவுகள் அறிய இயலுமோ? பகல் இரவு தோற்றுவித்து மக்கள் உடல் நலப் பேற்றிற்கு உறுதுணை செய்பவன் சூரியனேயாம். சூரியனின்றி, அவனது செங்கதிர்த்திரளாம் அமிழ்தமின்றி, எவ்வுயிர் வாழ்தற்கியலும்? மக்களாயினுஞ் சரி, விலங்குகளாயினுஞ் சரி, மரஞ்செடி கொடிகளாயினுஞ் சரி, வேறெவ்வித உயிராயினுஞ் சரி, செஞ்ஞாயிற்றின் ஒளியின்றி உயிர் வளர்ச்சி யுறுவதில்லை என்பது அனைவரும் ஒப்ப முடிந்த உண்மையேயாம். உலக முடிவைப்பற்றி மேனாட்டறிஞர்கள் கூறும் கூற்றுக்களில் ஒன்று இங்கு ஒப்ப நோக்கத்தக்கது. சூரியன் ஒளி வரவரக் குறைந்து வருகின்றதென்றும், பல கோடி ஆண்டுகட்குப் பின் சூரியன் முழு ஒளியும் அற்று நிற்க, உயிரமிழ்தாம் கிரணங்களைப் பெறாது வாடும் உயிர்கள் ஒரு கண நேரத்தில் அழிந்தொழியுமென்றும் அவர்கள் கூறுவது உயிர் வளர்ச்சிக்குச் சூரியன் ஒளி இன்றியமையாததென்பதை வலியுறுத்தும்.

இதுமட்டு மன்று; உடல் வளர்ச்சிக்கு உணவு அவசியம். உணவோ மழையின்றித் தோன்றுவதில்லை. உயிர்களனைத்தும் மழையினால் நின்று வாழ்கின்றன. மழையின்றிப் பொய்த்துப்போமாயின் உலகம் உயிரற்ற பெரிய மணற்காடாக மாறிப்போம். இதனை,

மழையின்றி மாநிலத்தார்க் கில்லை

* * *

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி

* * *

விசும்பில் துளிவீழி னல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது

என்னும் அறிஞர்கள் வாக்கும் மெய்ப்பிக்கும். இத்தகைய உயிர்க்குயிரான மழையினை உண்டுபண்ணுவது சூரியனே. சூரியன் வெப்பத்தால் மாறும் எல்லா நீர்ப்பொருளும் மீண்டும் மழையாகப் பொழிந்து மண்ணுலகமும் மக்கள் உள்ளமும் குளிரச் செய்கிறது. சூரியன் ஒளியில்லா தொழியுமேல் நீரெல்லாம் புழுத்துப்போகும்; நிலமெல்லாம் தன்மை நாறும்; நெருப்பெலா மற்றுப்போகும்; காற்றெலாம் மாசு பெருகும்.

இவ்வாறு பகல் இரவினால் கால அளவையுஞ்



செய்து தனது செங்கதி ரமிழ்தும் வழங்கிப் பஞ்சபூதங்களை மாசுபடாது மாற்றி, மழையை உண்டு பண்ணி, உயிர்களை உவப்பிக்கும் சூரியனை வணங்குவது மக்கள் இயல்பேயாம். நாள்தோறும் மறைந்து தோன்றும் இளஞ்சூரியனைக் கண்டதும் மக்கள் கொள்ளும் மன மகிழ்ச்சியும் காட்டும் முகநகையும், கூறும் இன்பமார்ந்த ஆரவாரச் சொற்களும் இத்தகையவெனக் கூறுதல் இயலாத செயலாம். இதனாலன்றோ,

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு"

என, நக்கீரதேவரும் முருகாற்றுப் படையின் முதலிலே உயிர்களை உவப்பிக்கும் சூரியனை முருகனுக்கு இணைப்படுத்தினர்.

உயிர், உடலாகியவற்றின் வளர்ச்சிக்கும் இன்பத்திற்கும் மூல காரணனாய சூரியனை ஆண்டுத் தொடக்கத்திலேயே வணங்கிச் "சூரிய பகவானே! சென்ற ஆண்டில் உன்னால் கதிரமிழ்தும், மழைவளமும் பெற்று மகிழ்ந்தோம். உன்னால் கிடைத்த பொருள்களைக் கொண்டு உன்னை வணங்குகின்றோம். சென்ற ஆண்டில் எங்கும் மங்கலம் பெருகச்செய்தது போன்று துவக்கும் புதிய ஆண்டிலும் செய்வாயாக!" என வேண்டுவது வழக்கம். மஞ்சள் மங்கலப் பொருள்களில் தலையாயது. எனவே புதிய ஆண்டில் மங்கலம் பெருகவும் உயிர்கள் குறைவின்றிச் செழிக்கவும் கருதியே மஞ்சள் இலையில் படைத்தும் மஞ்சள் செடியை விநாயகருக்கு இருமருங்கிலும் வைத்தும் மஞ்சளைப் பானை முழுதும் அலங்காரமாக அணிந்தும் வணங்குவர். இத்தகைய செயல்களினாலும், இவ்விழா உத்தராயண ஆரம்பத்தில் நேர்வதாலும் பொங்கற் புதுநாள் எனப் பண்டு தொட்டு வழங்கும் வழக்கினாலும் தை மாதமே தமிழரின் ஆண்டுத் தொடக்கமென்பதை நிச்சயித்துக் கூறலாம். ஆங்கிலேயர் முதலிய மேனாட்டாருக்கும் வருடப் பிறப்பு தைமாதம் நேர்வது இதனைப் பின்னும் வலியுறுத்தும்.

தை மாதத்தில் நேர்ந்து வந்த வருடப்பிறப்பு சித்திரையில் மாற்றப்பட்டது ஆரியரின் கலப்பினால் என்க. ஆரியருக்கு மேஷம் ஆண்டுத் தொடக்கமாதலின் அதனோடொப்ப வரும் சித்திரையை வருட முதலாகப் பெற்றனர் போலும்.

வருட ஆரம்பத்தில் மக்கள் குதூகலங் கொள்வது இயற்கையே. ஆங்கிலேயர் ஜனவரிப் பண்டிகை செய்து வருடப்பிறப்பைக் களிப்பிற் கழிப்பது கவனிக்கத் தக்கது. இதனைக் கருதித்தான் தமிழ் ஆண்டுத் தொடக்கமாகிய தை மாதத்தை நமது செங்குந்த மித்திரனுக்கும் வருட ஆரம்பமாக அறிஞர் அமைத்தனர் போலும்.

கடந்த ஆண்டில் இயற்கை இறைவனும் செஞ்ஞாயிற்றின் கதிரால் மழை முதலிய வளமெலாம் வாய்த்து, அவ்வளப்பங்களி லாழ்ந்த மனம் மகிழ்ச்சியிற் பொங்க, அம்மகிழ்ச்சிப் பொங்கலின் முகடு கிண்டெழுந்த ஒலியே "பொங்கலோ பொங்கல்" என்னும் உள்ளங் கவர்ந்தெழும் ஒலியாகும். கடந்த ஆண்டுபோல் துவக்கும் ஆண்டும் மகிழ்ச்சி தரத்தக்க தாகவேண்டுமென்று முன்னை நாட்களில் மக்கள் வானும் பிளந்தெழப் பொங்கல் முழக்கம் செய்வார்கள். அப்பொங்கல் நாளன்று வீடெலாம் பொங்கல்; ஊரெலாம் பொங்கல்; நாடெலாம் பொங்கல்; எங்கும் 'பொங்கலோ பொங்கல்' என்னும் பேரொலி!

அப்பொங்கற் புதுநாளை, நமது செங்குந்த சமூகத்தில் அறிவும் ஆற்றலும் பொங்க, ஒற்றுமையும் உயர்வும் பொங்க, செல்வமும் சிறப்பும் பொங்க, கல்விநிதி கரையின்றிப் பொங்க, செங்குந்த மித்திரன் செழிப்பிற் பொங்க, தலைவர்கள் மகிழ்ச்சியிற் பொங்க, நாமும் எல்லருடமும் பொங்குதலிற் பொங்கிப் புதுமுறையில் கொண்டாடுவோமாக!

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

---

அரிய சந்தர்ப்பம்! உடனே முந்துங்கள்!

# செங்குந்த மித்திரன்

## பழைய தொகுதிகள் சொற்ப பிரதிகளே யுள்ளன

அரிய விஷயங்கள்! பௌண்டு பிரதிகள்! அழகிய கட்டடம்!

தபாற் கூலி யுட்பட ரூ. 1-4-0

☞ வேண்டுவோர் முன்பண மனுப்பவேண்டும்.

செங்குந்தமித்திரன் ஆபீஸ்,
2/17, பவளக்காரத் தெரு, மண்ணடி சென்னை.




# என் கதை

[நான் எழுதுவது]

என்ன உலகம்! என்ன வாழ்க்கை! என்ன படிப்பு! எல்லாம் வீண், எல்லாம் மாயம். சீ! இந்த உலகத்தில் இன்பத்தை எதிர்பார்ப்பது பாம்பினிடத்தில் அமுதத்தை எதிர்பார்ப்பது போலத்தானிருக்கிறது. இந்தச் சழக்கிற் காலூன்றி மயங்கிக் குட்டுப்பட்டு அதிருப்தியையும் கஷ்டத்தையும் உருண்டை உருண்டையாக விழுங்குவதைக் காட்டிலும் இறப்பதே மேல்......

ஆ! இவ்வளவு கஷ்டத்துக்கும் இவ்வளவு வெறுப்புக்கும் காரணம் அந்தப் பாழும் பத்திரிகையல்லவா? அதன் ஆசிரியரல்லவா? ஆமாம், அது ஒரு தண்டப் பத்திரிகை; அதற்கேற்ற ஆசிரியர். அவரது அறியாமைக்கும் கொரேத்துக்கும் அளவே கிடையாது. அவர் உண்மையில் ஆழ்ந்த அறிவுடையவரானால் நான் எழுதும் வியாசங்களிலுள்ள அருமைகளைச் சிறிதேனும் உணரமாட்டாரா? அவர் கொடூர சிந்தை புடையவராயில்லாவிடின் பனிரண்டு தடவை என் வியாசங்களைக் குப்பையிற் போடுவாரா? ஆஹா, எத்துனை அரிய வியாசங்கள்! எத்துணை ருசிகரமான சிறு கதைகள்! எத்துணை இனிமையான செய்யுட்கள்! எத்தனை எழுதினேன்! ஒன்றும் தலைகாட்டவில்லை. ஐயா, பத்திரிகாசிரியரே, அவற்றிற்காக எவ்வளவு பொன் போன்ற காலத்தை வீணாக்கினேன், எவ்வளவு புத்தகங்களைப் புரட்டினேன், எவ்வளவு ஆராய்ச்சி செய்தேன் (ஆமாம், உண்மையாகவே பெரிய ஆராய்ச்சி தான்), எவ்வளவு மூளையை உருக்கினேன் என்பதை யோசித்துப் பார்த்தீரா? கிடக்கட்டும், எவ்வளவு காகிதம் செலவழிந்திருக்கும், எவ்வளவு மை யொழிந்திருக்கும், எத்தனை பேனாக்கள் தேய்ந்திருக்கும் என்பதையாவது சிறிது கவனித்துப் பார்த்தீரா? உமக்குக் கனிந்த சிந்தையுண்டு என்று யாராவது எண்ண இடமுண்டா? யார் எண்ணினாலும் நான் மட்டும் ஒரு துளியும் நம்பவே மாட்டேன்; என் கதையை யறிந்தவர் எவருமே நம்பமாட்டார்.

நான் [illegible] முதலில் எழுதியனுப்பிய வியாசம் எனக்கு [illegible]மிருக்கிறது. 'கதிரொளி' யென்னும் தலைப்புக் கொண்ட அவ்வியாசத்தில் எவ்வளவு நயங்கள் பொலிந்திருந்தன. அதன் ஆரம்பம் படிப்போர் மனதைக் கவர்ந்திட வல்லது; அதன் முடிவோ அதிலமைந்துள்ள உண்மைகளனைத்தையும் மனதிற் பதித்திடவல்லது. மேற்கோள்களோ எண்ணிறந்தன. திருக்குறளென்ன, நாலடியாரென்ன, கம்பராமாயணமென்ன, வில்லிபாரதமென்ன, இன்னும் எத்தனையோ அரிய நூல்கள்—எல்லாம் எனக்கே சொந்தம்போல அவற்றிலிருந்து பல அடிகளைத் தாராளமாக எடுத்தாண்டிருக்கேன். ஒரு ஞாயிற்றுக் கிழமை முழுதும் அதை எழுதி முடிப்பதிலேயே கழிந்தது. குறைந்தது ஐந்து தடவையாவது அதைத் திருப்பித் திருப்பிப் படித்திருப்பேன். ஒவ்வொரு தடவையும் குறைந்தது பத்துத் திருத்தங்களாவது செய்திருப்பேன். தெளிவாகவும் அழகாகவும் இருக்கவேண்டுமென்பதற்காக மூன்று தடவை அதனை மாற்றி மாற்றி எழுதினேன். முடிவில் பத்திரமாக ஒரு அழகிய உறையிலிட்டு, ஜாக்கிரதையாக ஒட்டி, வெகு கஷ்டப்பட்டு மிகுத்தி வைத்திருந்த ஒன்றே காலணாவுக்கு (ஐயோ, தபாற்கூலியாவது பழையபடி ஓரணாவாக இருக்கிறதா!) தபாற்றலை வாங்கி அந்த உறையின்மீது ஒட்டி, அருமை நண்பனை ரயிலிலேற்றிவிட்டு வருவதுபோல் அதைப் பத்திரமாகத் தபாற் பெட்டியிற் போட்டுவிட்டு வீட்டுக்குத் திரும்பினேன். அன்று என் தகப்பனாரும் "ஏது தம்பி இன்றைக்கு என்றுமில்லாதபடி உல்லாசமாக இருக்கிறான்," என்றார்.

அந்த மாதத்தின் பதினாறாந் தேதியை என்னைப்போல் அவ்வளவு ஆவலாக எவருமே எதிர்பார்த்திருக்க மாட்டாரென்றெண்ணுகிறேன். அந்நாளும் வந்துற்றது. எவ்வளவு ஓட்டைக் கடிகையாரமாயிருந்தாலும் அன்று என் மனம் அடித்துக்கொண்டது போல் அடித்துக்கொள்ளாதெனவே நான் நம்புகிறேன். எப்பொழுது தபாற்காரன் வருவானோ என எதிர்பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தேன். சரி, பத்திரிகையும் என் கைக்கு வந்தது. அதன்மேலிருந்த உறையைக் கிழிப்பதற்குள் என் கை உத



றிற்று; என் உடலெல்லாம் வியர்த்துவிட்டது; மார்பு படபடவென்று துடித்தது. ஒருவாறு உறுதியேற்படுத்திக்கொண்டு அதனை மெதுவாகப் பிரித்து இதழிதழாகப் புரட்டிப் பார்த்தேன். என்னென்னவோ அர்த்தமற்ற தலைப்புக்களெல்லாம் கிடந்தனவே யொழிய எனது 'கதிரொளி'யை மட்டும் காணோம். மீண்டும் ஒவ்வோரிதழாகத் திருப்பினேன்; மூன்றாந் தடவையும் சலியாது புரட்டிப் பார்த்தேன்; காணவேயில்லை. ஆ! அன்று நான் பட்ட பாட்டை யாரே அறிவார்? மனமுடைந்தேன்; சோர்வுற்றேன். ஆவலும் ஆத்திரமும் வாதாடிக்கொண்டிருந்த என் முகம் வெறுப்புக்கும் கவலைக்கும் இடமாயிற்று. வெறுப்போடு பத்திரிகையை ஒரு மூலையில் வீசியெறிந்தேன். "என்ன பத்திரிகை! பெயர் மட்டும் 'மித்திரன்'. வெகு அழகாக இருக்கிறது. எந்த நண்பனாவது இவ்வளவு கடூரமாக இருப்பானா?...சீ சீ, எய்தவனிருக்க அம்பை நொந்தேன். பத்திரிகை என்ன செய்யும்? எல்லாம் அந்த ஆசிரியரது வேலையல்லவா?" என்று பலவாறு எண்ணினேன். அவர்மீதெழுந்த கோபத்தால் என்னென்னவோ முணுமுணுத்தேன். இடையில் ஒரு வேளை விலாசம் தப்பாக எழுதியிருப்பேனோ என எண்ணினேன். ஆனால் என் மனம் இல்லவேயில்லையென அந்தச் சமாதானத்தை ஒத்துக்கொள்ள மறுத்தது. ஒரு வேளை என் கடிதம் காலதாமதமாகச் சென்றிருக்கலாம் எனத் தோன்றிற்று. என் இதயத்தில் ஒரு புத்துணர்ச்சி கிளைத்தது. "'கதிரொளி' எனும் அழகான தலைப்புப் பூண்டு, தலைப்புக்கேற்ற இனிமை வாய்ந்த வியாசமொன்று வந்தது. காலதாமதமானதால் அதை இம்மாத மித்திரனில் வெளியிட வியலாமைக்காக வருந்துகிறோம்." என்பது போன்ற குறிப்பு ஏதாவது இருக்கிறதா எனப் பார்ப்பதற்காக வீசியெறிந்த பத்திரிகையை மீண்டும் ஆவலுடன் எடுத்துப் பிரித்தேன். என் கவலைக் கனல் முன்னினும் அதிகமாகவே மூண்டது. நான் தேடிய குறிப்புக்கு நேர்முரணாக முதற்பக்கத்தில் கொட்டையான எழுத்தில் "இளைஞர்களிடமிருந்து வரும் வியாசங்கள் அவர்களது ஊக்கத்தையும் உற்சாகத்தையுமே காட்டுகின்றன. அத்தகையோர் தங்கள் வியாசங்கள் வெளிவருவதில்லையென்பதால் மனமுடைந்து பின்னடைந்துவிடாது மேன்மேலும் முயன்று பயனடைவார்களாக." என்று குறிக்கப்பட்டிருந்தது. இந்த வீண் வார்த்தை என் கவலையை யாற்றுமா? மீண்டும் கவலை என் மனத்தைக் கப்பிக்கொண்டது. பிரசுரிக்கப்பட்டிருந்த விஷயங்கள் சிலவற்றைச் சிறிது படித்துப் பார்த்தேன். வியாசங்கள் தலை வாலில்லாது கிடந்தன; கதைகள் உப்பு சப்பற்றுக் கிடந்தன; செய்யுட்கள் தளைதடுமாறிக் கிடந்தன. ஆமாம், எனக்குத் தோன்றியது அப்படித்தான். அவையெல்லாம் வெளிவந்திருக்க எனது அருமையான வியாசம் மட்டும் வெளிவாராதிருப்பதன் காரணமென்னவென எனக்குத் தோன்றவில்லை. ஒருகால் ஆசிரியர் எனது கடிதத்தைப் பிரிக்க மறந்திருப்பாரோ என்றெண்ணினேன். கடைசியாக, என் வியாசத்தின் நயங்களையும் நுட்பங்களையும் உணரச் சக்தியில்லாமையால் ஆசிரியர் அதனைக் குப்பைக் கூடையிலெறிந்துவிட்டுத்தானிருக்க வேண்டுமென முடிவு கட்டினேன். நல்லோர் பெயர் தெரியாது மாய்ந்தொழிவதும், தீயோர் சுலபமாக மேலோங்குவதும்தான் உலக வழக்கம் போலும் என என் மனம் வேதாந்தம் பேசிற்று. அன்றைய பொழுதெல்லாம் சிடுசிடென்றே கழிந்தது. இரவு வந்ததும், ஆசிரியரைத் திட்டுவதா, உலகத்தைத் திட்டுவதா, என்னைத் திட்டுவதா என யோசித்துக்கொண்டே உறங்கிவிட்டேன்.

இவ்வாறு ஒரு தடவையல்ல, இரண்டு தடவையல்ல. எத்தனையோ வியாசங்களும், சிறு கதைகளும், செய்யுட்களும் இவ்வாறு அலங்காரமாகச் சிங்காரித்துக்கொண்டு தபால் வண்டியிலேறிப் பத்திரிகாசிரியர் அறைக்குச் சென்று அங்கே—பாபம்! பக்கத்திலுள்ள கூடையில் அமைதியாக அமர்ந்துவிட்டன. நுணுக்கமான வர்ணனைகளும், ஆவலைக் கிளப்பும் இரகசியங்களும், ஆச்சரியத்தை யெழுப்பும் சம்பவங்களும் நிறைந்த "மணிமாலிகை" என்னும் ருசிகரமான துப்பறியும் கதையொன்று எழுதியனுப்பினேன். மனத்தை மாட்சிமைப்படுத்தவல்ல இயற்கைத் தோற்றங்களையும் அவற்றின் தத்துவங்களையும் விளக்கும் "வானவில்" என்னும் இனிமையான பாடலொன்று புனைந்தனுப்பினேன். ஒன்றேனும் தலை காட்டியபாடில்லை.

கடைசியாக (பனிரண்டாந் தடவை) 'கமல வதனம்' என்னும் காதற் கவிதையை மிகவும் திறம்பட எழுதினேன். அதை யெனது அத்யந்த நண்பனிடம் வாசித்துக் காட்டினேன். அவனோ, "உன்னிடம் ஏதோ ஓர் அரிய சக்தி மறைந்து கிடக்கின்றது. இன்னும் சிறிது காலத்தில் நீ ஒரு பேராசிரியனாகத் திகழ்வது திண்ணம். உண்மையிலேயே மேனாட்டு நவீன ஆசிரியர்களாலும் இத்துணை ருசிகரமான கதையை எழுதவியலாது. தமிழிலோ, இத்தகைய கதை இதுவரை வெளிவந்ததே கிடையாது. இந்தக் கதையினால் உன் பெயர் எங்கும் பரவுமென்பதில் ஐயமேயில்லை" எனப் பலவாறு உயர்த்தி உயர்த்திப் பேசினான். நானும் அந்தப் புகழ்ச்சியை யருந்திய போதையில் தலை மயங்கினேன். எனதருமை நண்பன் இவ்வாறு புகழ்ந்த அக்கதை கட்டாயம் 'மித்திர'னில் வெளிவருமெனப் பூரணமாக நம்பி அதனை ஆசிரியருக்கனுப்பினேன். ஆனால் ஐயா, அதுவும் தனக்கு முன் சென்ற தன் தோழர்களுடனேயே தங்கிவிட்டது. அதற்கும் அதே கதி வாய்த்தது. அது வெளிவாராதது கண்ட என்னுள்ளத்தில் விரக்தியும் வெறுப்பும், ஆத்திரமும் க்ஷாத்திரமும் பொங்கியெழுந்தன. அந்த நேரத்தில் தற்செயலாக எனது நண்பன் என்னிடம் ஓடி வந்தான். பத்திரிகையும் கையுமாக இருந்த என்னைக் கண்ட அவன் "பார்த்தனையா, நான் கூறியது உண்மைதானே? அந்தக் கதையால் நீ பெரியது ஏதோ

ஒன்றை அடையப்போகின்றாயென்று சொன்னேனல்லவா? அது கிடக்கட்டும்; நீதான் தமிழ்ப்புலியாய்விட்டாய். எனக்குத் தமிழில் நூற்றுக்குப் பதினைந்து மார்க்கு வந்திருக்கிறது. எனக்குத் தமிழின் வாசனையும் தெரியாதென்று பண்டிதர் ஏசுகிறார். நானென் செய்வது?" என்று சொல்லிக்கொண்டே சிரித்தான். அவனது கள்ளச் சிரிப்பால் என் உள்ளம் உண்மையை புணர்ந்தது. "தமிழ்க் கதையைப்பற்றி இவன் கூறிய அபிப்பிராயத்தையும் உண்மையென மதித்து நம்பினேனே. என்ன பேதைமை!" என எண்ணினேன். அப்பொழுதுதான் அவன் வேண்டுமென்றே வேடிக்கைக்காக என் கதையைப் புகழ்ந்து பேசினான் என்று எனக்குப் புலப்பட்டது.

அவன் போன உடனே என் அறைக்குள் சென்றேன். தற்செயலாக என் கதையின் பிரதியொன்று அங்குக் கிடந்தது. அதை யெடுத்து ஆழ்ந்து வாசித்தேன். எனது நண்பனுடைய குறும்பை உணர்ந்ததனாலோ, பத்திரிகாசிரியர் என் வியாசங்களைப்பற்றிக் கொள்ளும் அபிப்பிராயத்தை உணர்ந்ததனாலோ, வேறு என்ன காரணத்தினாலோ அறியேன்—கதையைப் படித்து முடித்தவுடன், "ஆஹா! இவ்வளவு ஆபாசமான கதையையும் எழுதினேனே. சிறு பிள்ளைகள் உளறுவது போல் யோசனையின்றி வாய்க்கு வந்ததை யெழுதியிருக்கிறேனே. இந்தக் கதையை யாராவது வாசித்துப் பார்த்தால் நம்மைப்பற்றி எவ்வளவு கேவலமாக நினைப்பார்கள். நல்ல வேளையாக அந்த ஆசிரியர் நம்மீது வைத்த கருணையினால் இதனை வெளியிடாது விடுத்தார். அவருக்கு நாம் எவ்வளவு கடமைப்பட்டுள்ளோம்." என எண்ணித் தெளிந்தேன். ஆசிரியரவர்களே, தயை கூர்ந்து என்னை மன்னித்தருள வேண்டும். நீர் கொடூரசிந்தை யுடையவரா கருணை புருவானவரா, அறியாமை மிகுந்தவரா அறிவு நிரம்பியவரா, உமது பத்திரிகை ஒன்றுக்கும் உதவாததா பயன் நிறைந்ததா என்பதை நானே கூறினால் வாசகர்கள் நகைப்பார்களென்று கூறாது விடுகின்றேன். நண்பர்களே! பிள்ளைகளைப் பெற்றுப் பெற்றுப் பறிகொடுக்கும் சில பெற்றோர் மனதைப்போல என் மனமும் திடப்பட்டுவிட்டது. பலமற்ற பிள்ளைகளைப் பெற்றால் உடனே எமன் கையேந்தி நிற்கின்றான். பிரயோசனமற்ற வியாசங்களைக் கண்டால் ஆசிரியர் பக்கத்திலுள்ள கூடை வாய் திறக்கிறது. இப்பொழுது நான் எழுதச் சலிப்பதுமில்லை; எழுதுவது வெளிவாராதது பற்றித் தளர்வதுமில்லை. இந்த அனுபவ முடையவன் நானொருவன் மட்டுமல்ல என்பதும் எனக்கு ஒரு வித ஆறுத லளிக்கின்றது. இத்தகைய அனுபவ முடையவர் எல்லோரும் கடைசியாக என்னுடைய முடிவுக்கே வருவார்களாவெனவே யோசிக்கின்றேன்.

---

# என்று ஒழியுமோ?

(அனுபவம் எழுதுவது)

பலவித நன்மைகளையும் விட்டுத் தீமைகளைக் கைக்கொள்ளத் தயாராயிருப்பது போலவே நாகரீக வழக்கங்களிலும் நாம் உண்மையானவைகளைக் கைவிட்டுத் தீங்கிழைக்கும் போலி நாகரிகங்களைக் கைக்கொண்டு அவற்றிற் கடிமைகளாகி அல்லலுழக்கின்றோம். நம்முள் மிகப் பலருக்குப் பீடி சிகரெட்டு பிடிப்பது ஒரு நாகரிகம்; உயர்ந்த சாராயங் குடிப்பது ஒருயர்ந்த நாகரிகம்; தாங்கள் விருந்துக்குச் செல்லு மிடங்களில் தங்களைப்பற்றி வீண் டம்பம் பேசி, பலரைத் தாழ்த்திக் கூறி, ஆங்கிலத்தையும் தமிழையும் கலந்து தடமாட்டத்துடன் உளறி, சாப்பாட்டில் மனம் பதைத்தாலும் பதார்த்தம், பலகாரம் முதலியவைகளை இலையில் மிகுதியாக வைத்து வயிற்றைக் காய வைத்துச் செல்வது மிக உயர்ந்த நாகரிகம். ஐயோ நாகரிகமே! நீ ஏனோ இவர்களுக்கெல்லாம் சரியாகப் புலப்படமாட்டாய்!

இவ்வாறு எண்ணுதற்கரியனவாக நம்மிடை மலிந்து கிடக்கும் பல அநாகரிக வழக்கங்களில் பிறரைக் காணச் செல்வதில் நம்மவர் அனுசரிக்கும் முறையும் ஒன்றாம். ஆங்கிலேயரிடமுள்ள தீய வழக்கங்களை மாத்திரம் வடிகட்டி எடுத்துக்கொள்ளும் நம்மவர் அவர்களிடமுள்ள சில நல்ல வழக்கங்களை மறந்துவிடுகின்றனர். அவர்களிடமிருந்து நாம் கட்டாயம் கற்க வேண்டிய ஒரு முக்கிய வழக்கமிருக்குமாயின், அது ஒழுங்குதான்; எக்காரியத்தையும் குறித்த காலத்தில் குறித்த முறையில் திட்டமாகச் செய்யும் வழக்கந்தான். அவர்கள் ஒருவரைக் காண வேண்டுமாயின் சரியான நேரத்தில் முன்னதாக அறிவித்துவிட்டுச் செல்லுகிறார்கள். சென்ற பின்னரும் ஆகவேண்டிய காரியத்தை உடனே கவனித்து ஒரு குறித்த நேரத்தில் முடித்துவிடுகிறார்கள். நம்மவரோ, வருவதும் இஷ்டப்பட்ட நேரத்தில், போவதும் இஷ்டப்பட்ட காலத்தில். இதனால் பிறருக் குண்டாகும் கெடுதிகளை இவர்கள் சிறிதேனும் கவனிப்பதில்லை. இன்னும் குறித்த காலத்தில் எதையும் செய்து முடித்தல் என்னும் ஒழுங்குதான் நம்மவரிடத்தில் குதிரைக் கொம்பாயிருக்கிறது. எந்தக் காரியத்தையும் தள்ளி வைப்பதாலும் ஒழுங்கீனமாகச் செய்வதாலும், எந்தப் பொருளுக்கும் மேலான, விலைமதிப்பற்ற, மீட்கக்கூடாத காலத்தை நாம் வீணில் கொல்லுகிறோம். மேல் நாட்டார் ஒவ்வொரு விநாடியையும் எவ்வளவு பெரும்பயனுக்குபயோகப்படுத்துகிறார்களென யோசிக்கின் இது எத்துணை நஷ்டமென்றும் எத்துணைப் பாபமென்றும் நன்கு புலப்படும்.



ஒருவரைக் காணச் செல்லும்பொழுது அதற்கு முன்னதாகவே தெரிவித்துச் செல்லுதல் உத்தமம். அது சாத்திய மில்லாத காலத்தில் மாத்திரம் சரியான வேளைக்காவது செல்லுமிடத்தி லுள்ளவர்க்குக் கஷ்ட மளிக்காதவாறு முன் ஜாக்கிரதையுடன் செல்ல வேண்டும். இந்த நல்ல விதிகளையெல்லாம் அசட்டை செய்து சாப்பாட்டு நேரத்திற்கோ அல்லது சற்றுப் பின்னுகவோ திடீரெனப் போய் உட்காருவது நம்மவரிடைச் சகஜமா யிருக்கிறது. இப்படிச் செல்வதால் எவ்வளவு கஷ்டங்களுக் கிடமுண்டாகிறதென யோசியுங்கள். சாப்பிடும் சமயமாக இருந்தால் தங்களுக்குச் செய்த உண்டியை வந்தவர்களுக் கிட்டுப் பின்பு வீட்டிலுள்ளவர்கள் சமைத்துச சாப்பிட வேண்டும். சாப்பாட்டு நேரத்திற்குச் சற்றுப் பின்பு சென்றால், அப்பொழுதுதான் அனலிலும், புகையிலும், காரத்திலும், புளியிலும் அவதிப்பட்டு, 'அப்பாடா' என்று ஆயாசத்துடன் உட்கார்ந்தவர்கள் உடனே மறுபடியும் அடுப்போடு அழவேண்டி யிருக்கிறது. இதனால் எத்துணை சாந்தமுடையோராயினும் எத்துணை விருந்தோம்புவோராயினும் சற்று மனக்கஷ்ட மடைவது திண்ணம். இதனால் துன்பமடைபவர் பெண்களே. சில குடும்பங்களில், சிறப்பாகப் பெருந் தனவந்தரது குடும்பங்களில், பெண்கள் உணவு கொள்வதற்குப் பகலில் 2 மணிக்கு மேலு மாகிறது.

இன்னும், வெளியூர்களிலிருந்து வரும் சிலர் இரவில் அகாலத்தில் 9, 10 மணிக்கு மேலும் வருகின்றனர். இப்படி வருபவர்கள் உணவருந்தினரோ இல்லையோவென அறிதல் நமக்கியலாததே. ஆயினும் அவர்களைச் "சாப்பிடுகிறீரா?" என்று கேட்கவும் கூடாது. அவர்களும் "சாப்பிட்டுவிட்டு வந்தோம்" அல்லது "இன்னும் சாப்பிடவில்லை" என்று தாங்களே சொல்வதில்லை. ஆகையால் அவர்களைக் கண்ட உடனேயே சாதத்திற்கு உலை அடுப்பின்மே லேறிவிட வேண்டும். அப்படி அந்நேரத்தில் கஷ்டத்துடன் சமையல் செய்தால் தாங்கள் சாப்பிட்டாய்விட்டதெனக் கூறி அதை மறுப்பதும் உண்டு. டம்பத்திற்காக இவ்வாறு பொய் சொல்லுபவரும் சிலர். கஷ்டப்பட்டுச் சமையல் செய்து அது வீணுகப் போகுமானால் அதனைச் செய்தவர்களது மனம் என்ன பாடு படும் என்று யோசியுங்கள். இஃதெல்லாம் எந்த விதத்திலாவது நாகரிகத்தில் சேருமா? இவைகளெல்லாம் பெரிய அநாகரிகங்களல்லவோ? மட்டித்தன மல்லவோ? சாதாரணமாக அல்லது அரைகுறையாகக் கல்வியைத் தொட்டுப் பார்த்தவர்களும் நாகரிகத்தை மூலையிலிருந்து கோணலாகக் காண்பவர்களுமே இவ்விதம் செய்கின்றனர்.

இவர்கள் இவ்வாறாக, உத்தியோகத்திற்காகச் சிபார்சு பெறவோ வேறு எதாவது காரியம் ஆக வேண்டியோ ஒரு பெரியவரிடம் செல்லுபவர்களும் சரியாக நடந்துகொள்வதில்லை. முதலில் அவரால் அந்தக் காரியம் சாத்தியமா, அதைச் செய்வதால் அவரது சுயமரியாதைக்கும் மனச்சான்றுக்கும் பங்க மேற்படாதிருக்குமாவெனக் கவனிப்பதில்லை. சிலர் தங்களுக்கு உதவிபுரிய வேண்டிய பெரியார் ஏதோ ஒரு வேலையில் ஆழ்ந்திருக்கும் சமயத்தில் செல்லுகிறார்கள். அவர்கள் சென்ற வுடனே அவர் தமது வேலையை யெல்லாம் விட்டுவிட்டு அவர்களைப் பார்க்க வரவேண்டும். அப்படி வாராவிட்டால் அவரைப் பற்றிய இகழ்ச்சி காற்றில் கலக்கிறது. 'மிகப் பெரியவர்! ஏதோ கொஞ்சம் நாடிச் சென்றால் அப்பொழுதுதான் தம்மைப் பற்றிப் பிரமாதமாக நினைத்துக்கொள்ளுகிறார்.' என்று அவரைப்பற்றி எங்கும் தூற்றுவார்கள். ஐயோ பாபம், பெரியோருக்கு வருபவர்களையெல்லாம் கண்டு வார்த்தையாடுவதை விட வேறு வேலையில்லையா? அவரவர்க்கு எதாயினும் சொந்த வேலை யிராதோ? அவைகளைப்பற்றி யெல்லாம் வருபவர் கவனிப்பதில்லை. அப்படி அவர்கள் காணச் சென்ற பெரியார் பேச வந்தாலும் பெரிய தொல்லையே. சில சமயங்களில் அவர் சாப்பாட்டை முடித்துக்கொண்டு உடை உடுத்தி உத்தியோக சாலைக்குச் செல்வதற்கு நெருக்கடியாகக் காலம் இருக்கும் சமயத்தில் செல்வார்கள். அப்பொழுது அவர் பேசுவது கஷ்டமென்றால் 'ஐந்தே நிமிஷம்' என்பார்கள். விதியில்லை யென்று மனக்கஷ்டத்துடன் பேச வந்தால் தாங்கள் குறித்துச் சென்ற சமாசாரத்தைப்பற்றிப் பேசுவதில்லை. அதற்கு முகவுரைகளெல்லாம் வேண்டும். தங்கள் காரியத்தைக் கேட்டால் "ஒன்றுமில்லை. சும்மா உங்களைப் பார்க்க வந்தேன்" என்பர். இப்படி வீண் சமாசாரங்கள், தங்கள் காரியத்தோடு சம்மந்தமில்லாத சமாசாரங்கள் முதலியவற்றைப்பற்றி அளப்பார்கள். "ஐந்து நிமிஷம்" என்றதை அடியோடு மறந்துவிடுவார்கள். பார்க்க வந்தவர்கள் திருப்பித் திருப்பிப் பார்த்துச் செல்வதுதானே? ஏன் வீண் வம்பளக்கவேண்டும்?

இவ்வளவு ஆனபிறகு தங்கள் சமாசாரத்தை ஆரம்பித்தால் அதைச் சுருக்கமாகச் சொல்வதில்லை. அதைக் கேட்டு அப்பெரியார் அந்தக் காரியம் தம்மாலியலாதது என்றால் அவரை வற்புறுத்துவது. "தங்களா லியலாததா? தாங்கள் மனம் வைத்தால் எல்லாம் ஆகும்" என்பது. இவ்வாறு அவர்கள் செய்யும் புகழ்ச்சி அவரது சக்தியி லமையாத காரியத்தை அவர் சக்தியில் புகுத்துமா? தம்மால் முடியாதென்று உண்மையை அறுத்துச் சொல்லிவிட்டாலோ அவர்மீது பெரும்பழி. தங்களுக்குச் சாத்தியமான காரியத்தை முடியாதென்று பொய் சொல்லுபவர் சிலருண்டு. சாப்பிடுவதும் உறங்குவதும் தவிர வேறு வேலையின்றி உட்கார்ந்து தசையைப் பெருக்கிக்கொண் டிருப்பவர் சிலர். இவர்களெல்லாம் பணம் முதலியவற்றாலும் அநியாய வழிகளாலும் தம் பெயர்களை உண்மை

ஆராயும் உணர்ச்சியற்ற மக்களிடையே காட்டி விட்டால் அவர்களைப்பற்றி வதந்திக ளேற்படுவ தில்லை. "அவர் மிக நல்லவர். ஏதோ பெரிய காரியத்தைக் கவனிக்கவேண்டி யிருந்ததால் வர வில்லை" என்பர். இன்னும், மனத்தில் அந்தக் காரியத்தைச் செய்வதில்லை என நிச்சயமாக எண்ணிக்கொண்டே "அதற்கென்ன, தங்களுக்குச் செய்யாம லிருப்பேனா? கட்டாயம் என்னா லியன்றதைச் செய்கிறேன்" என்று நயவார்த்தைகள் பேசுபவரும், உண்மையை மறைத்து வண்டைக்காய்க் குழம்புபோல் பேசுபவரும் ஊரார் வசைமொழியினின்றுந் தப்புவது மட்டுமன்றி அவர்களது போற்றி புரைக்கும் ஆளாகின்றனர். இவ்வாறு உண்மையை யொளித்துக் காதுக்கினிமையாகப் பேசி மழுப்புவதும் நாகரிகந்தானா? உண்மையே! நாணயமே! இந்தக் கலிகாலத்துலகம் உங்களுக்குத் தக்கதல்லவென் றறிந்துதான் நீங்க ளிருவரும் இதைவிட்டு ஒன்றாய்ப் பறந்தீரோ?

இவ்வாறு அநாகரிகங்களும், மட்டித்தனமும் நம் நாட்டில் வேரூன்றி, அதனைப் பாழ்படுத்தி, அதன் மக்களை இழிவுபடுத்தி, கன்னி மேயோக்கள் வசைபாட இடந்தந்து நிற்கின்றன.

அன்னியருடைய வீண் வசைகள் நமது மனத்தில் ஊடுருவிப் பாய்கின்றன. ஆனால் நாம் நமது ஒழுங்கான நடைமுறையினாலேயே அத்தகையோரது வாய்களை யடைத்தல் வேண்டும். உண்மையாகவே நாம் ரோஷக்காரராயின், நம்நாடு மேன்மை பெறவேண்டுமாயின், நமது மக்கள் பல நாட்டு மக்களிடைச் சிறந்து விளங்கவேண்டுமாயின், அயல் நாட்டார் நம்மை இகழ அஞ்ச வேண்டுமாயின், அவர்கள் உண்மையில் நம்மைப்பற்றிப் பெருமையாக நினைக்க வேண்டுமாயின், உண்மையில் இப்பொழுதிலிருந்தே நாம் அந்தச் சிறந்த நிலையை அடைய முயலவேண்டும். அதற்காகப் பெரும்பாடே படவேண்டும். நாம் இப்பொழுதிருக்கும் இழிநிலையாகிய கரையை விட்டு முன்னேற்றமாகிய எதிர்க்கரையை அடைய வேண்டுமாயின் இடையே இருக்கும் குறைபாடென்னும் கடலைக் கடக்க வேண்டும். அது முயற்சி யென்னும் கப்பலின்றி இயலாது. அக்கப்பலும் தளர்ச்சி, அசட்டை முதலிய புயல்களுக்கு அசையாதபடி அவ்வளவு திடமா யிருத்தல் வேண்டும். அத்தகைய கப்பலைச் செய்தற்கு வேண்டிய உபகரணங்களே ஒற்றுமை, அறிவு, அன்பு, அபிமானம், நற்சிந்தை, பொது நலங் கருதுதல் முதலியவையாம். இவைகளெல்லாம் நமக் கின்றியமையாதவை. இவற்றை நாம் அடைதலும் எளிதில் முடியாது. ஆயினும் இவற்றை நாம் எப்படியாவது அடைந்தே தீர வேண்டும். உண்மையாக முற்படுவோருக்கு இவை அசாத்தியமல்ல. இவற்றை யெல்லாம் நாம் பெறுவது, போலி நாகரிகங்கள், அநாகரிகங்கள், ஆராய்ச்சியின்மை, மூட நம்பிக்கைகள் முதலியவற்றை வேரோடு களைந்த பிறகே. இக்கெடுதிகளை வெட்டி யெறியும் களைவெட்டியும் கல்வியே. அன்பர்களே! கல்வியே கருந்தனம்; அதனினுங்கில்லை சிற்றுயிர்க் குற்ற துணை. அதுவே நம்மை மூடத்தனமாகிய இருட்டறையினின்றும் வெளிப்படுத்தி உண்மையறிவாகிய சூரிய ஒளியிற் புகுத்துவது. ஆதலால் அதனையே தேடுங்கள். பிச்சை யெடுத்தாயினும் கல்வியைக் கைக்கொள்ளுங்கள் அநாகரிகங்களை ஒழியுங்கள். அவற்றிற் கடிமையாகாதேயுங்கள். அப்பொழுதே சுக வாழ்வும் சீரிய நிலையுமெய்தி இணையிலா வானந்த இல்லத்திற் குடி புகுந்திருப்பீர்கள். கெடுதியை யகற்றி நன்மையை நிலைநாட்ட முற்படும் உங்களுக்கு இறைவனருள் பாலிப்பது திண்ணம். இறைவனருள் பெறும் நீங்கள் காரியசித்தி பெறுவதும் உறுதியே.

---

## எது லாபம்?

உங்களுக்குப் பல நன்மைகளை யளித்து, உங்களைப் பல வழிகளிலும் உயர்த்துவதையே தன் கடமையாகக் கொண்டுழைக்கின்றான் நமது 'மித்திரன்' அவனுக்கு உணவு முதலியவை யளித்து ஆதரிப்பது உங்கள் கடமை யல்லவா? அவன் உங்களிடம் எதிர் பார்ப்பதெல்லாம் ஒன்றரை ரூபாய் தான். அந்தத் தொகையை எப்படிச் செலுத்தலாம்? அவன் சார்பாக உங்களிடம் வந்து உபந்நியாசங்கள் நிகழ்த்தும் பிரசாரகர்களிடம் தரலாம். இல்லை, மணியார்டர் மூலம் அனுப்பலாம். இரண்டும் செய்யவில்லை யென்றால், மித்திரனே ஓடி வந்து "ஐயா, வி. பி. யில் வந்து விட்டேன். எப்படியாவது பணங்கட்டி என்னை ஆதரியுங்கள்" என்று உங்கள் வாயிலில் நிற்கின்றான். பிரசாரகரிடம் கொடுத்து விட்டால் ரூ. 1—8—0. மணியார்டர் மூலம் அனுப்பினால் ரூ. 1—10—0. வி. பி. யில் வந்தபின் பணம் கட்டினால் ரூ. 1—14—0. எது உங்களுக்கு லாபம்? நீங்களே யோசியுங்கள்.



# செங்குந்த யாத்திரைவாசி

மு. மு. தாண்டவராயப் படலம்

வீரவாகு: சித்திர குப்த! சரி போதும். கடைசியாக இன்னும் ஒரு நாட்டாண்மைக்காரரைப் பார்ப்போம்.

சித்தி: ஸ்வாமி! அதோ நிற்கின்றவரைப் பாருங்கள். அவர் பெயர் மூண்டகக்கண் முத்துத் தாண்டவராய முதலியார். அவர் ஒரு பெரிய நாட்டின் தலைநகரிலுள்ள நாட்டாண்மைக்காரருள் ஒருவர். இவர் கால் வைத்த இடமெல்லாம் பாழ், கண் வைத்த இடமெல்லாம் நாசம். இவரது நாட்டின் அதிகாரத்திற் குட்பட்ட கீழ் நாடுகள் பல உண்டு. அந்நாடுகளில் பைசலாகாத வழக்குகள் இவர் ஊருக்கு வருவதுண்டு. சில சமயங்களில் நாட்டுத் தலைநகராரை அவ்வவ்வூர்களுக்கும் தருவிப்பதுண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் இவர் ஊரார் இவரைத் தவிர வேறு யாரையும் அனுப்புவதில்லை. ஏனெனில் இவர் ஒருவர்தான் எவ்விதத் தொழிலும் இல்லாதவர்; பிள்ளைகுட்டி இல்லாதவர், யாதொரு சொத்தும் இல்லாதவர், சுருங்கக் கூறின் யாதொரு குடும்பத் தொல்லையும் இல்லாதவர்.

நாரதர்: ஆமாம், இவருக்கு எப்படி நாட்டாண்மைப் பட்டம் கிடைத்தது?

சித்தி: முனி புங்கவரே! இதோ வந்துகொண்டிருக்கிறேன். தற்காலச் செங்குந்தர்களுடைய நிலைமையை நன்குணர்ந்த தங்களுக்கும் காரணம் காட்ட வேண்டுமா? வேண்டியதில்லை யாயினும் தங்கள் கருத்தை அறிந்துகொண்டேன். இவர் ஒரு பரம்பரைக் குடியில் தோன்றியவர் என்பது முதற்காரணம். "பொய்யுடை யொருவன் சொல்வன்மையினால் மெய்போலும்மே மெய்போலும்மே" என்றபடி மெய்யைப் பொய்யாகவும், பொய்யை மெய்யாகவும் தலைகீழாக மாற்றிப் பேசும் சொல்வன்மை நிரம்ப வாய்க்கப்பெற்றவர் என்பது இரண்டாவது காரணம். செங்குந்தர்களுக்குள் தற்போது அறிவாற்றலும், உலக அனுபவமும் உள்ளவர்கள் மிக மிக அருமையாக இருக்கிறபடியால் இத்தகையோர்க்கு ஜனங்களிடை நிறைந்த செல்வாக் குண்டாகிவிடுகிறது. இப்படிப்பட்டவர்கள் இட்டதே சட்டமாய்விடுகிறது. எதிர்த்துப் பேசுவாரில்லை. நாட்டுக் கட்டுப்பாடு, ஜாதிக் கட்டுப்பாடு என்பவற்றிற்குப் பயப்படவேண்டியதாயிருக்கிறது. நாட்டாண்மைப் பட்டம் பெற்றிருந்தும் இவர் செய்யும் கலகங்களைப் பொறுக்க மாட்டாதவர்களாய் அவ்வூரார் இவர் அடிக்கடி, அதாவது மாதத்தில் சுமார் 25 நாட்கள் வரையில், வெளியூர் விவகாரங்களை முன்னிட்டு உள்ளூரிலில்லாதபடிச் செய்வது வழக்கம். இவர் நாட்டாண்மைப் பட்டமும் இன்றி, வெளியூருக்குப் போவதுமின்றி இருந்திருப்பாரேயானால், அவ்வூரை என்ன பாடு தான் படுத்தியிருப்பார் என்பதைத் தாங்களே யூகித்துக் கொள்ளுங்கள்.

வீரர் சிங்கமே! இவர் கால் வைத்த ஊரை இரண்டு மூன்றாக்காமல் திரும்பி வரவேமாட்டார். இரண்டுபட்ட ஊரில்தான் இவருக்கு வேலையுண்டு. எப்போதும் அநியாயக் கட்சிக்கே துணையாயிருப்பார். கக்ஷிகள் நீடூழி வாழவேண்டுமென்பதே இவருடைய மனமார்ந்த கோரிக்கை. இவர் தலையைக் கண்டவுடனே நியாயவாதிகள் அஞ்சி நடுங்குவார்கள். கக்ஷிகள் நிலைத்திருந்தால்தான் கட்டுப்பாடும், நாட்டுப் பெருமையும் அதிகாரமும் நிலைத்திருக்குமென்பது இவரது அபிப்பிராயம். பெரிய நாட்டார் என்ற ஹோதாவினாலும், வெல்வாய ஞானத்தினாலும், பொதுஜனங்கள் வாயில்லாப்பூச்சிகளானதினாலும் விவகாரங்களை இவர் இஷ்டப்படி வெகு சுலபமாக மாற்றிவிடுவார். ஏழை ஜனங்கள் பாவம் பெரிய நாட்டார் தங்கள் பேச்சில் என்ன தப்பிதம் கண்டுபிடித்து அபராதம் விதித்து விடுவாரோ என்று பயந்து நியாயத்தை எடுத்துக் காட்டவும் துணியமாட்டார்கள். மூண்டகக்கண் ஐயாவினுடைய குணாதிசயங்களை அறிந்த அநியாயக் கக்ஷிக்காரர்கள் அரிசி மூட்டை துவரை மூட்டை போன்றவைகளை ஐயாவீட்டிற்கு அனுப்பிவிட்டே சுலபமாகத் தங்கள் பக்கம் ஜயித்துக்கொள்வார்கள். கிளிஞ்சலில் வெள்ளி யிருக்கிறதென்று பல நாட்கள்வரையில் வாதித்துப் பலகலைகளில் வல்லுநர் பலரை ஒருங்கே தோற்கடித்துத் தன்னுடைய வாதமே சரியானது என்றும் எதிரிகள் தாங்களே தோற்றோம் என்றும் ஒரு ராஜ சபையில் ஒத்துக் கொள்ளுமாறு செய்த ஒப்பற்ற வெல்வாயனைப் போல் இவர் நியாய விரோதமாய்ப் பேசுகிறார் என்றுகூட யாரும் கண்டு பிடிக்கவோ, சந்தேகிக்கவோ முடியாதபடி அவ்வளவு சாமர்த்தியமாகப் பேசுவார்.

இம்மகானுபாவர் தமது நாட்டைச் சேர்ந்த ஒரு கிராமத்திற்குச் சென்று தங்கியிருந்த தருணத்தில் அவ்வூர் வண்ணான் தன் பிரார்த்தனையை நிறைவேற்றக் கருதிச் செங்குந்த முதலிமார்களை அணுகி மாரியம்மன் குடமெடுக்க உத்தரவு கேட்டான். பெரியதனக்காரர் உத்தரவு கொடுத்தார். எகாலி வாத்திய கோஷத்துடன் வழக்கப்படிக்

குடத்தை எடுத்துக்கொண்டு வீதி வலம் வந்தான். ஒரு முதலியார் விடுவிடென வந்து 'அடே குடமெடுக்க உனக்கு யார் உத்தரவு கொடுத்தது, போகக்கூடாது, காலை ஒடித்து விடுவேன், திரும்பி ஓடிப்போ' என்றார். சமாசாரம் ஊர் முழுதும் பரவிவிட்டது. குடமெடுக்க உத்தரவு கொடுத்தவர் கேள்விப்பட்டு ஓடிவந்து 'அடே நீ எடுத்துக்கொண்டு போ. யார் என்ன செய்கிறார்கள் பார்ப்போம்' என்றார். சண்டையும் கூச்சலும் பெருகின. விஷயம் பெரிய நாட்டாராகிய இந்த மு. மு. தாண்டவராய முதலியார் அவர்கள் சமுகத்திற்கு எட்டிற்று. 'ரொம்ப நல்லாயிருக்கு' என்று சொல்லி நகைத்து, 'நாம் இன்று நரி முகத்தில் விழித்தோம். இந்த நல்ல சந்தர்ப்பத்தை நழுவவிடலாகாது. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும். இப்பெரிய ஊர் இரண்டானால் மறுபடியும் ஒற்றுமைப்பட பல வருஷங்கள் செல்லும். இதில் மாத்திரம் சரியான வேலை செய்துவிடுவோமானால் நமக்குப் பல ஆண்டுகள் வரையில் வேலையிருக்கும். இக் கிளை நாட்டைச் சேர்ந்த கிராமங்கள் 15 இருக்கின்றன. அவற்றிலும் இதையொட்டிக் கக்ஷிகளை புண்டாக்கிவிடவேண்டும். இது நமக்கு பெரிய காரியமுமல்ல. போதும் நம் காலத்தைக் கழித்துவிடலாம்.' என்று யோசித்துக்கொண்டிருந்தபோது வண்ணான் குடத்து வழக்கு நாட்டார் சமுகத்திற்கு வந்துவிட்டது. தேடிப்போன தெய்வம் தெருவில் கிடைத்தபோது விட்டுவிடுவாரா? விரிவிற்கஞ்சி சுருக்கமாகக் கூறுகிறேன். வாதிப் பிரதிவாதிகளுக்குப் புத்திசொல்லுவார்போல் நவவீரர் முதலாகச் சொல்லப்பட்ட செங்குந்தர்கள் பெருமைகளையெல்லாம் எடுத்துக் கூறி இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த நம்மவர்கள் அற்ப காரியத்தை முன்னிட்டுச் சண்டை செய்து கக்ஷிப் பிரிவால் கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் உள்ளாகிப் பெருமை இழந்து நிற்பது சரியல்லவென்று உபதேசம் செய்துவிட்டு, ஆனாலும் அக்கிரமத்திற்கு உட்படுவோரை மாத்திரம் இலேசில் விடக்கூடாது. விடுவோமானால் நம்முடைய முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்ட தெய்வீகம் வாய்ந்த கட்டுப்பாட்டுக்கும், நாட்டுத் திட்டத்திற்கும் என்ன பெருமை இருக்கிறது? மேல் நாடு கீழ் நாடு என்ற வரன்முறை யில்லையா? என்று சொல்லிவிட்டு, ஏதோ விஷயத்தை விசாரித்து அறிந்துகொள்வார்போல் இரண்டு பக்கத்திலும் சில கேள்விகள் கேட்டு அக்கேள்விகள் மூலமே இருவருக்கும் ஒருவர்மேல் மற்றொருவருக்கு விரோதமும் க்ஷாத்திரமும் உண்டாகுமாறு செய்து சரியான முடிபோட்டுவிட்டார்.

ஊர் இரண்டுபட்டுவிட்டது. முண்டகக் கண்ணருக்கு முழுமனத் திருப்தி புண்டாய்விட்டது. 'சரி அதற்கென்ன பின்னால் விசாரிப்போம். அகாலமாய்விட்டது. எனக்கும் இப்போது வேலையிருக்கிறது.' என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டு விடியற்காலத்தில் எழுந்து தமக்கு ஏதோ அவசரமான வேலை தம்மூரில் இருப்பதாகச் சாக்கு சொல்லிவிட்டு இரண்டொருவர் தவிர மற்றையோர் அறியாதபடி போய்விட்டார். ஊர் இரண்டு பட்டதென்று முன்னமே கூறினேன். அம்மட்டோ! இம்மகானுபாவர் எண்ணியபடியே அவ்வூரைச் சேர்ந்த 16 கிராமங்களும் இவ்விரண்டாயின. ஆங்காங்குச் சிறு வியாஜ்ஜியங்களும், பெரு வியாஜ்ஜியங்களும் தொடரப்பட்டன. நாட்டுத் தலைவருக்குப் பல மனுக்களும் தூதுக் கூட்டங்களும் சென்றன. அவர்களும் வழக்கப்படி மு. மு. தா. ரா முதலியாரை அனுப்பினார்கள். முதலியாரும் கக்ஷிப் பஞ்சாயத்துக்களில் வெறுப்புற்றவரைப் போலவும், ஊரார் வற்புறுத்தலின்பேரில் போகிறவரைப்போலவும் பாவனை காட்டி ஒருவாறு ஒப்புக்கொண்டவரைப்போல் புறப்பட்டார். உண்மையில் கக்ஷியொழிந்து ஜனங்கள் க்ஷேமப்படவேண்டுமென்ற கருத்துடையவராயிருந்தால் கக்ஷிகள் சீக்கிரம் ஒழிந்திருக்கும். கக்ஷிகளும் சண்டை சச்சரவுகளும் நாளுக்கு நாள் வளர்பிறைச் சந்திரனைப்போல் விருத்தியடைந்துகொண்டே வந்தன. 'நோவாதடித்தான் ஓயாதழுதான்' என்பதுபோல பஞ்சாயத்துகள் நடந்துகொண்டும், ஊரார் ஒன்று சேர்வது போலவும் இருந்தனவே யொழிய உண்மையில் ஒழிந்தபாடில்லை கக்ஷிகள்.

அரசாங்க நீதிமன்றங்களிலும் இக்கிராமங்கள் சம்பந்தமான வழக்கு ஏதாவதொன்று இருந்தபடியே இருந்தது. ஏழை ஜனங்கள் வம்பு வழக்குகளுக்காக வரிகொடுக்கவேண்டியிருந்ததோடு தங்கள் தொழிலையும் சரிவரச் செய்யாமல் நீதிமன்றங்களிலும் பஞ்சாயத்துக்களிலும் வேடிக்கை பார்ப்பதும் கூடிக்கூடிப் பேசுவதுமாக இருந்து வீணே காலங்கழித்து வறுமையுற்றனர். இவ்வாறு அநேக குடும்பங்கள் பாழாயின. 13 வருஷங்களும் கழிந்தன. 16 கிராமச் செங்குந்தர்களும் ஓட்டாண்டிகளாயினார்கள். இந்த நாட்டு முண்டகக் கண்ணர் கொடுங்கோன்மையையும் ஜனங்கள் அடைந்துவரும் வறுமையையும், இழிவையும், அபகீர்த்தியையும் கண்டு சகியாதவனாகிய முத்தையன் என்னும் ஒரு வாலிபன் இரண்டொருவரைத் தனக்குத் துணைவராகச் சேர்த்துக்கொண்டு கக்ஷிப் பிளவினால் இப்பதினாறு கிராமங்களும் பிரத்தியக்ஷமாக அடைந்துள்ள பலனை விளக்கிக்காட்டி, இவ்வளவிற்கும் முண்டகக்கண்ணரே காரணபூதர் என்பதையும் அவரை அந்நாட்டினின்றும் ஒழித்தாலன்றிக் கக்ஷிகள் ஒழியாவென்றும், ஒற்றுமை படையாதவரையில் எந்த ஊரும் க்ஷேமமடையாதென்றும் தெளிவாக எடுத்துக்காட்டிக் கிராமந்தோறும் பிரசாரம் செய்ய ஆரம்பித்தான். நாட்டார் அதிகாரத்தை நிராகரித்துப் பேசும் இவ்வாலிபனுக்கு இம்முண்டகக்கண்ணர் செய்த இடைஞ்சலுக்கும் அளவேயில்லை.

முத்தையனும் ஊக்கம் தளராதவனாய் மனோதிடத்தோடு இடைவிடாது பொதுஜன ஊழியத்தில் ஈடுபட்டு வந்தான். எழெட்டு மாதங்களுக்குப் பிறகு பொதுஜனங்கள் கொஞ்சம் கொஞ்ச



# கூட்டுறவு இயக்கமும் அதனால் உண்டாகும் நன்மைகளும்

[மூர்த்தம் வரைவது]

உலகப் போக்கில் "தனக்கு" என்று கூறிவந்த சொல் நாளுக்கு நாள் மறைந்து வருகிறது. புதிதாக ஓர் உணர்ச்சி பிறந்து வளர்ந்து வருகிறது. அது யாதெனில் "எல்லோர்க்கும்" என்னும் கூட்டுறவு உணர்ச்சிதான். ஆதியில் ஒருவன் தன் நலத்தைக் கருதி வந்தான். ஆகையால் தன்னைத் தவிர பிறர் எவரையும் அன்புடன் பாராமல் அவர்களிடம் விரோதம் பாராட்டி அவர்களைக் கொன்று தின்றும் வந்தான். சிறிது காலம் பொறுத்துத் தன் மனைவி என்றும் மக்கள் என்றும் கூறித் தன் குடும்பத்தைக் காப்பாற்றினால் போதும் என்னும் உணர்ச்சி உண்டாயது. ஆகையால் அந்தக் காலத்தில் ஒருவன் தனக்கு என்றும், தன் குடும்பத்திற்கென்றும், மக்களுக்கென்றும் கூறி, உணவுகளையும் உடைகளையும் சேகரித்துவந்தான். வீடு கட்டிக்கொண்டு வாழவேண்டும் என்னும் நோக்கத்துடன் கவலை எடுத்துக்கொண்டு கவனத்தைச் செலுத்திவந்தான். இந்த ஆதி குடும்பத்தின் வாழ்வைக் கவனித்தால் முதலில் ஜனங்கள் மிகவும் சுயநலப் பிரியமுள்ளவர்களாக இருந்தார்கள் என்றும், நாளடைவில் மூடத்தனம் நீங்கி, அறிவு வளர வளர ஒருவர் பேரில் ஒருவர் பற்றுடையவர்களாக இருந்து, ஒருவருக்காக ஒருவர் உழைத்து வந்தார்கள் என்றும் அறியலாம். ஒரு குடும்பத்தில் தந்தை, புருஷன் முதல்வனாகக் கருதப்பட்டு வந்தான். அவனுக்கு இரண்டாவதாகத் தாய், மனைவி கருதப்பட்டுவந்தாள். பிறகுதான், மக்கள், சுற்றங்கள் என்று உறவு பாராட்டத் தொடங்கினார்கள். புருஷன் மனைவி இவர்கள் இருவரும் ஒருவர் அன்பிற்கு ஒருவர் பாத்திரராய் இருந்ததோடு ஒருவர் ஆதரவில் ஒருவர் இயக்கப்பட் டிருந்தார்கள். இவர்கள் இருவர் ஆதரவில்தான் மக்களும் சுற்றங்களும் இருந்துவந்தார்கள். புருஷன், மனைவிக்குக் குடும்பத்தை நடத்தப் போதுமான உணவுகளையும், ஆடைகளையும், சாமான்களையும் திரவிய மூலமாகவும், மற்றும் பொருள் மூலமாகவும் சம்பாதித்துக் கொடுத்து வந்தான். மனைவி, புருஷன் உயிர் வாழவேண்டும், மக்கள் விருத்தியடைய வேண்டும் என்னும் நோக்கத்தோடு சரியான உணவைத் தயாரிப்பதிலும் குடும்பத்தை நிர்வகிப்பதிலும் கவனத்தைச் செலுத்தி வந்தாள்.

நாகரிகம் இந்த மக்களிடைப் பரவப் பரவ, ஒருவன் அல்லது ஒருத்தி, தன் குடும்பத்திற்காக உழைத்துச் சேகரித்த பொருளிற் தானும் தன் குடும்பமும் கொண்டது போக மற்றதை ஒரு சாரார் சேர்த்தும், பிறிதொரு

---

[64-வது பக்கத் தொடர்ச்சி]

மாக முத்தையன் சொல்லுக்குச் செவி சாய்க்க ஆரம்பித்தார்கள். நாளடைவில் உண்மையை உணர ஆரம்பித்தார்கள். நாட்டதிகாரிக்குச் செல்வாக்கு குறைய ஆரம்பித்தது. 12 மாதங்களுக்குப் பிறகு முத்தையனுடைய கோரிக்கை நிறைவேறிற்று.

முண்டகக்கண்ணர் சூழ்ச்சியை உணர்ந்த ஜனங்கள் அவரை நையப் புடைத்து ஊரைவிட்டுத் துரத்தவேண்டுமென்று முயற்சி செய்தார்கள். இதையறிந்த வாலிபன் ஜனங்களின் அறியாமைக்காக மிக்க மனவருத்த முற்றவனாய்க் கிராமந்தோறும் கூட்டங்கூட்டி,

'இணர் எரி தோய்வு அன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று'

'கறுத்து இன்னா செய்த அக்கண்ணும் மறுத்து
செய்யாமை மாசற்றார் கோள்' (இன்னா

'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்துவிடல்'

'பகல்கருதிப் பற்றாசெயினும் இகல்கருதி
இன்னா செய்யாமை தலை'

'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு'

'நண்பு ஆற்றார் ஆகி நயம்இல செய்வார்க்கும்
பண்பு ஆற்றார் ஆதல் கடை'

என்பன போன்ற தலையங்கமிட்ட பல உபந்யாசங்கள் செய்து ஜனங்களிடை அமைதியை புண்டாக்கி இவரைத் தம் நாட்டிற்குத் தகுந்த மரியாதையோடு அனுப்பி வைத்தான்.

(தொடரும்)

சாரார் அயலானுக்குக் கொடுத்து உதவியும் வந்தார்கள். மற்றும் ஆதியில் மக்கள் தாம் கற்றறிந்த நெய்தல், விவசாயம், கைத்தொழில் முதலிய வித்தைகளைப் பலரிடத்தில் பரவச் செய்தார்கள். ஆதியில் தன் குடும்பத்திற்குப் போதுமான ஆடையை நெய்தவன் நூதன முறையில் அதிகமாக நெய்து அண்டை வீட்டுக்காரனுக்குக் கொடுத்து, அவன் அதிகமான முயற்சியால் விளைவு செய்த தானியத்தை வாங்கி வந்தான். ஆகையால் கொடுக்கல் வாங்கல் மூலமாய் இவர்கள் இருவருக்கும் ஒருவித சம்பந்தம் உண்டாயது. அதைப் போல் ஒருத்தி தான் அதிகமாக வளர்த்து வந்த ஆட்டினின்றும் பாலை அதிகமாகக் கறந்து, அண்டை வீட்டுக்காரிக்குக் கொடுத்து அவள் அதிகமாக வளர்த்து வந்த கோழியையோ அவை இட்ட முட்டைகளையோ வாங்கி வந்தாள். ஆகையால் இவர்கள் இருவருக்குள் ஒரு கூட்டுறவு உண்டாயது. இப்படியே பொன் வெள்ளி செம்பு நாணயங்கள் மக்களிடைப் பரவுவதற்கு முன்பு வியாபாரம் நடந்து வந்தது. நாகரிகம் முற்றமுற்ற, ஒருவர் ஆதரவுக்கு மற்றொருவர் பாத்திரமாக இருக்கிறார்கள் என்னும் உணர்ச்சி மக்களிடைப் பரவப் பரவ, ஒருவர் ஒரு பொருளை விருத்தி செய்து பலருக்குக் கொடுத்து அவர் விருத்தி செய்த வஸ்துவை வாங்கி உபயோகித்தால் பெரிதும் நன்மை உண்டு, லாபம் உண்டு என்னும் உண்மையைப் பாமர ஜனங்கள் உணர உணர, சுயநலம் என்னும் பேய் பறந்து ஓட, பொதுநலம், கூட்டுறவு என்னும் புதிய இன்பம் மக்களுக்கு ஊட்டப்பட்டு வந்தது. நாளடைவில் கைத்தொழில் விவசாயங்களில் கைதேர்ந்த மக்கள், புதிய நாகரிகத்தில் ஈடுபட்டு உழல்வதாலும், மற்றும் பல ஜாதி மக்களிடைக் கூடிப் பழகுவதாலும், அவர்கள் விளைபொருள்களைத் தாங்கள் வாங்கித் தங்கள் பொருள்களை அவர்களுக்குக் கொடுத்து லாபத்தை மிகுதியாகப் பெறுவதாலும், கூட்டுறவு மக்களிடை இருந்தால் எவ்வளவு நன்மை பயக்கும் என்று கண்டார்கள்.

உலகத்தில் புதிதாகப் பல ஊர்கள் கண்டு பிடிக்கப்பட்டதாலும், அதனால் பல நாணயங்கள் மக்களிடைத் தோன்றுவதாலும், பல உலோகங்களும் பல விளைபொருள்களும் கண்டு பிடிக்கப்பட்டு அவற்றைக் கொண்டு நூதனமான முறையில் கைத்தொழிலும் விவசாயமும் விருத்தி செய்யப்பட்டு வருவதாலும், ஜனங்களிடத்தில் நம்பிக்கை வேரூன்றி நிற்பதாலும், வியாபாரம் நாளுக்குநாள் பலத்து வருகிறது. புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் யந்திரங்களாலும் மற்றும் போக்கு வரவிற்குச் சாதகமாயுள்ள புகைவண்டி, மரக்கலம், ஆகாயக் கப்பல் முதலிய வசதிகளாலும், தந்தி, ஆகாயவசனி முதலியவற்றாலும் வியாபாரம் அதிகமாகப் பலத்து வருகிறது. இதனால் கொடுக்கல் வாங்கல் சுலபமாக இருப்பதால் ஒவ்வொரு நாட்டாரும், ஒவ்வொரு ஜாதியாரும், ஒவ்வொரு கைத்தொழிலாளரும் தத்தம் நாட்டில் எந்த விளைபொருள் சுலபமாகவும் அதிகமாகவும் கிடைக்கிறதோ, எந்தப் பொருளைக் குறைந்த செலவுக்குச் சிரமமில்லாமல் அதிகமாகச் செய்து பிறநாடுகட்கு ஏற்றுமதி செய்து லாபம் திரட்ட முடியுமோ, அந்தக் கைத்தொழிலைக் கையாண்டு வருகிறார்கள். இதனால் இவர்கள் தங்கள் நாட்டிற்கு வேண்டிய சாமான்களுள் ஒன்று அல்லது சிலவே செய்கிறார்கள். மற்றவற்றை அயலாரிடத்தில் இறக்குமதியாக அடைகிறார்கள். இதனால் ஒருவர் உழைத்துக் கொடுக்கும் பொருளுக்கும், வேலை செய்து கொடுக்கும் சாமான்களுக்கும் மற்றொருவர் ஆதரவாக இருக்கிறார்கள் என்று அறியலாம். இந்த உணர்ச்சி வியாபாரிகளிடத்தில் பரவப் பரவ அவர்கள் தங்கள் சுயநலத்தைக் கருதிப் பொருள் சேகரிப்பதிலேயே கண்ணாக இருக்கிறார்களே தவிர ஜனங்களுக்கு வேண்டியதையும் நாட்டிற்கு இன்றியமையாததையும் செய்யத் திறமை யற்றவர்களாக இருக்கிறார்கள். ஆனால் தங்கள் கூட்டுறவினால் இதை ஒழிக்கலாம் என்று தீர்மானித்து ஜனங்கள் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி வருகிறார்கள்.

இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தி பலநாடுகளில் பல விதமாக உண்டாகி இருக்கிறது. ஆனால் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய நோக்கமும் ஒன்றே. இவர்களிடத்தில், சங்கத்தை ஏற்படுத்தின வித்தியாசமும், சங்கத்தைப் பாதுகாக்க ஏற்படுத்தின சட்ட வித்தியாசமும், ஒழுங்கு வித்தியாசமும், சங்கத்தைப் புது முறையில் விருத்திசெய்ய எடுத்துக்கொண்ட முயற்சி வித்தியாசமும் தவிரப் பிறிதொன்றுமில்லை. இந்தச் சங்கங்கள் சிறு சங்கங்களிலிருந்து பெரிய பலத்த சங்கங்களாக ஆய்விட்டிருக்கின்றன. நாளடைவில் அநேக மாறுதல்களையும் அடைந்து வருகின்றன. இவ்வித சங்



## குலதிலகர் பகுதி

# செங்குந்த கவிவாணர் சரித்திர தீபிகை

[திருவாளர். வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள், கண்டாச்சிபுரம்]

### முருகவேள்

தெய்விகஞ் சிறந்து விளங்குஞ் சீரிய நஞ்செங்குந்த மரபானது இந்நிலவுலகிற் றோன்றுதற்குரிய மூல காரணராயும், வாழையடி வாழையாய் நம்மரபினரெஞ்ஞான்றும் வழிபடு மாத்மார்த்த தெய்வமாயும், குலப்பெருங் கடவுளாயுந் தலைமை சான்ற தமையனாயும், சகலகலாவல்ல வித்வ சிரோன்மணியாயுந் திகழ்ந்து விளங்கும் நம்மறுமுகத் தோன்றலாகிய முருகவேளே, நம்மரபினர்களில் முத்தமிழ்த் துறைபோகிய வுத்தம சீலர்களாய, தனி பெரும்புலமை வாய்ந்த கவிவாணர்களில் முதன்மை பெற்றுள்ளவராவர். முருகன் என்னும் பதத்திற்கு, அழகுடையவன், இளமையுடையவன் அல்லது கீர்த்தியுடையவன் என்பது பொருள். சண்முகன், கந்தன், வேலன், விசாகன், சரவணபவன் முதலிய பல்வேறு காரணப்பெயர்களாற் றிகழ்ந்து விளங்குபவரு மிவரே. தேவர்களிடுக்கண்டரச் சூராதிகளி னிம்சை யொழிப்பான் வேண்டிச் சிவபெருமான் றிருநுதல் விழியாறினிற் றோன்று மறுபொறி வாயிலாய்ச் சரவணத் துதித்து, கார்த்திகையர் பாலுண்டு, கங்கையில் வளர்ந்தவர். இதனால் இவருக்குக் கார்த்திகேயன், காங்கேயன் என்னும் பெயர்களும் வழங்கலாயின. இவர் கைலாயத்திலுங் கந்தமாதனத்திலு மமர்ந்து செய்த லீலைகள் அளவிடற்கரியன. ஆணவம், மாயை, கன்ம மென்னு மும்மலாதிகளாய அவுணர் கூட்டத்தை வேரறக் களைந்து மாய்த்தவர். அமரர் சிறை நீக்கி யாதரித்தவர். இச்சா சத்தி, கிரியா சத்தி, யென்னும் வள்ளி தெய்வானையர்களைப் பாரியைகளாகவும், ஞானசக்தியை வேலாயுதமாகவு முடையவர். இதுவல்லாமல் பதினொரு கோடி ருத்திரர்களைப் பதினொ ராயுதங்களாகவும், நாத தத்துவமாகிய கோழியைக் கொடியாகவும், விந்து தத்துவமாகிய மயிலை வாகனமாகவு முடையவர். செந்தமிழ்த் தெய்வமென்று நந்தேசத்தா ரனைவராலும் புகழ்ந்து கொண்டாடப்பெறுஞ் சீர்த்தியின் மிக்க புலமை வாய்ந்தவர். தலை, இடை, கடை யென்னு முச்சங்கங்களிலு மிருந்து தமிழாராய்ந்தவர். "ச"கத்தமிழின் றலைமைப் புலவா தாலோ, தாலேலோ என்னு மான்றோர் வாக்கும் இங்கு நோக்கத் தக்கது. தமிழ் மொழியைச் செவ்வனே விஞ்ஞாலத்

---

[66-வது பக்கத் தொடர்ச்சி]

கங்கள் பெரும்பாலும் அமெரிக்காவில் முதலில் உண்டாகி விருத்தியாகி வந்திருக்கின்றன. பின்பு இங்கிலாந்திலும் பரவி வேரூன்றி வளர்ந்து வருகின்றன. இந்தக் கூட்டுறவு இயக்கம் காட்டுத் தீப்போல் ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, ஆசியா முதலிய கண்டங்களில் எங்கும் பரவி இந்தியாவையும் அணுகி விட்டது. இதனால் இந்தியாவில் அநேக கூட்டுறவுச் சங்கங்கள் ஆங்காங்கு மக்களிடைப் பரவ ஆரம்பித்தன. ஆனால் இந்தியர்களில் ஒரு தொகுதியார் மாத்திரம் இதன் நன்மைகளைக் கண்டு பிடித்து இதை விருத்திசெய்து வருகிறார்கள். ஆகையால் இவைகள் மேல் நாட்டில் வேரூன்றி இருப்பதுபோல் அவ்வளவு பலமாக இங்கு வேரூன்றவில்லை. எல்லாக் குடிகளும் இந்தச் சங்கங்களினால் உண்டாகும் நன்மைகளை நன்றாய் ஆராய்ந்து அறிவார்களானால் இவைகள் இங்கும் முதிர்ந்து வேரூன்றி நின்றுவிடும் என்பதில் சந்தேகமில்லை.

இதை உண்டாக்கி வளர்த்துப் போஷித்து வருபவர்களின் நோக்கங்கள் என்னவென்றால், இவைகள் ஜனங்களுக்கு வேண்டிய உணவு ஆடை பொருள்களை எங்கிருந்தாலும் சுலபமாகவும் குறைந்த விலைக்கும் கொடுத்துக் குறையைத் தீர்க்க வேண்டும்; இதனால் நல்ல பொருள்கள் மக்களிடைக் கையாளப்பட்டு வரவேண்டும்; மக்களிடையில் நம்பிக்கையும் ஆதரவும் பரவி நிற்கவேண்டும்; எல்லாரையும் — எல்லாக் குலத்தினரையும், மதத்தினரையும், மரபினரையும், எல்லா ஊழியர்களையும்—ஒருங்கு சேர்த்து ஒற்றுமைப்படுத்தி ஒரு குழுவாக இயக்கப்படுத்த வேண்டும் என்பதாம். (தொடரும்)

திற் பரப்பி, புலமையின் மிக்க தமிழ்த் தாயாய்ப் புவிக்கண் நிலவிய கல்விக் கடலாம் நம்மகத்திய முனிவருக்கு ஞானோபதேசஞ் செய்தவர். இவரது புலமையுஞ் சீர்த்தியு மளவுபடுத்திக் கூறலாந் தகையவல்ல. தமிழ் மொழியை முதன் முதல் குடமுனிக் கருளியவர் சிவபெருமானே யாவர். அப்பெருமானுக்கே யவரது திருக்குமாரராய விவர் ஒரு சமயங் குருவா யமைந்து உபதேசஞ் செய்தாரெனின், இவரது மாட்சி யியம்பவல்லார் யார்? மதுரைத் தமிழ்ச் சங்க வித்வானாகிய நக்கீரருக்கும், செந்தமிழ்ச் செல்வியாகிய ஔவையாருக்கும், திருப்புகழ் பாடிய அருணகிரியார்க்கும் உண்மைப் பொருளை உபதேசித்த நல்லாசிரியரு மிவரே யாவர்.

இவர் செந்தமிழ்ப் புலமை நிரம்பிய கவிவாணர்களிடத்து மிக்க பிரீதியு மருளு மன்பு முடையவர். இவர் தம்மைப்போ லொத்த புலவர்களுக் கிடுக்கண் நேர்ந்துழி, அவர்பாற் சென்று, ஆபத்தை நீக்கி, விரும்பிய நல்கி யாட்கொண்டருளும் பெருந்தகைமை யுடையாரென்பதும், "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்றபடி இவர் மெய்ப்புலவர்களை விரும்பு மார்வமுடையவரென்பதும், கவிபாடும் வன்மையில் மிக்க தமிழ்ப் புலமை வாய்ந்த சதுரரென்பதுமாகிய தன்மைகள், இவர் அடிக்கடி புலமையில் வல்ல அன்பர்களிடத்தே வந்து தமிழ்க்கலா விநோதஞ் செய்தலானும், வற்புறுத்திப் பாடல் பெறலானும், பிரபந்தங் கேட்டலானும், எப்பொருட்கு மெய்யுரை தெரித்தலானும், ஐயப்பாடு வினவுதல் நீக்குதலாகிய லீலா விநோதங்கள் புரிதலானும் நன்கு அறியக் கிடக்கின்றன. இவர் தம்மேற் பிரபந்தம் பெறலில் மிக்க நசையுள்ளவ ரென்பதைக் கீழ்க்கண்ட சம்பவத்தா லறியலாம். அதாவது, இவர் வடமொழி ஸ்காந்தத்திலுள்ள தமது சரித்திரத்தைத் தென் மொழியிலோர் பிரபந்தமாகப் பாடுமாறு, உச்சிமேற் புலவர் மெச்சுந் தகைமைகொள் காஞ்சிபுரம் குமரகோட்டத் தருச்சகராகிய கச்சியப்ப சிவாச்சாரியரது கனவிற் றோன்றி, "திகடசக்கரச் செம்முக மைந்துளான்" என்று முதலடியெடுத்துக் கொடுத்து, அந்நூலுக்குக் கந்த புராணமெனப் பெயரமைத்துத் தினந்தோறு மவர் பாடுஞ் செய்யுள்களைத் திருத்தஞ் செய்து கொடுத்து, புராண வரங்கேற்றுங் காலத்தில், 'திகழ் + தசம்' என்பது 'திகடசம்' என்று புணர்தற்கு விதியுளதோவென்று ஏனைய புலவர்களா லாக்ஷேபம் நேர்ந்த காலத்துத் தாமே யொரு தென்னாட்டுப் புலவனாய், வீர சோழியமென்னு மிலக்கண நூலுடன் றோன்றி, அதில் சந்திப் படலத்துப் பதினெட்டாஞ் செய்யுளில் விதி யிருப்பதைக் காட்டிப் புராண வரங்கேற்ற முடித்து, இம்மையிற் புகழும் மறுமையிற் றம் சாயுசிய பதமும் நல்கின ரென்பதே.

தவிர, இவரே தமிழ்ப் புலமையில் மிக்க பாண்டித்யம் பெற்று முதன்மை யுடையவரென்பதை விளக்கப் பண்டைக் காலத்தில் நடந்ததோர் நிகழ்ச்சியைக் கூறுதல் மிகையகாதென்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். எனவே யதனைச் சுருக்கிக் கூறுதும். பண்டைக் காலத் தோர் பகல் புலவர்களுந் தேவர்களும், முனிவர் முதலாயினோருங் கூடியிருந்த சபைக்கண் வித்வ தாம்பூலங் கொடுக்க நேர்ந்தது. 'யாவரீண்டு முதன்மைப் புலமை யுடையவர்? எவர்க்கு முதற் றாம்பூலங் கொடுக்கலா மென்னு மாசங்கை யெழுந்தது. அவ்வமய மாங்கிருந்த முதியாளும், லோகோபகாரியும், வித்வாம்சையுமாகிய ஔவைப் பிராட்டியாருக்கே முதற் றாம்பூலங் கொடுப்பதெனத் தீர்மானித்து, வித்வ தாம்பூலத்தை யேற்றருளுமாறு அவரிடம் நீட்டினர். அவரோ, "அன்புடையீர்! அது பெறற்குரியர் யாமல்லேம், புலவர்களாகிய தேவர்களுக்கெல்லா மதிபனும், ஐந்திரவியாகரணம் என்னு மரிய விலக்கணஞ் செய்தவனும், உலகிற்குக் காரணமாய மழையை வருஷிக்கச் செய்பவனுமாகிய இந்திரன்பாற் சென்றளிமின்!" என்று மறுத்தனர். அதற்கு அப்புலவர்களதிசயித்துச் சுவர்க்கஞ் சென்று நிகழ்ச்சியோதி வித்வ தாம்பூலத்தைச் சசிகேள்வனிட மீந்தனர். புரந்தரனு முண்ணடுங்கி, "ஐயகோ! இது பெறற்கு யானுரியனல்லேன். என்னினுஞ் சிறந்த புலவரொருவருளர். அவர் இறைவனிடம் புலமை பெற்றவராய், சர்வ ஞானப் பெருங்கடலாய், உமையை மணந்த ஞான்றுற்ற விடர் களைந்தகற்றிய தவமுடையவராய், விந்தமலைக் கருவமடக்கிக் காவிரி நீத்தஞ் செழியச் செய்த வற்புதயோகஞான சித்தியுடையவராய் விளங்கும் குறுமுனி. அவர்பால் இதனைக் கொடுமின்," என்றனன். அவர்களவ்வாறே தென்றிசைக்கண்ணுள்ள பொதியமலை யடைந்து கும்பமுனியாகிய அகஸ்தியர்பா லீய, அவர் சரஸ்வதியே புலமைக் கதிபதி, கல்வித் தெய்வம், எழுத்தின் கிழத்தி, எவ்வுயிரின் நாவுதோறிருக்கும் வித்வக்களஞ்சியமானகையால், அன்னவளிடத்தில் கொடுக்குமாறு கூறினர். அவ்விதமே சகலகலாவல்லியாரிடஞ் சென்று விவரங் கூறி வித்வ தாம்பூலத்தைப் புலவர்கள் கொடுக்கப் பாரதியாரோ, மிகவும் பயந்து தாம்பூலத்தை வாங்க மறுத்து, "கற்றது கைம்மண்ணளவு, கல்லாத துலகளவாகும். எனவே நான் பூரண வித்வாம்சை யல்லள். அண்டசராசரமனைத்தையு மொருங்கே யுதவிய ஆதிபரா சத்தியாகிய பார்வதி தேவியாரே பூரண கலாவதியாகுமாகையா லவரிடஞ் சென்று, இத்தாம்பூலத்தை யீவீராக," வென்றனள். அங்ஙனமே யவர்கள் பர்வதராஜ புத்திரியாரிடஞ் சென்று, மிகப் பணிவாக யாவையும் விண்ணப்பித்து வித்வ தாம்பூலத்தை யேற்றருளுமாறு வேண்டலும், அம்மையார் புலவர்களை நோக்கி "புலவீர்காள்! யானிதற் குரியளல்லேன்! என்னறக் கற்று எழுத்தும் வாசிக்கினும் பெண் புத்தி யென்பது பேதைமைத் தன்றோ? தலைச்சங்கத்திருந்து தமிழாராய்ந்தமையானும், தமிழை வளர்த்த பொதிகை முனியாகிய அகத்தியனுக்குச் செந்தமிழைச் செவியறிவுறுத்தமையானும், தந்தைக்கு முனந் தாரக மொழிந்து சற்குருவாய் விளங்கலானும், கடைச் சங்கத்தில் களவியலென்னும் பொருணூலுக்கு மெய்யுரை தெரித்



தமையானும், வேதப் புலவனாகிய விரிஞ்சனைச் சிறைப்படுத்தி யனுக்கிரஹஞ் செய்தமையானும், நக்கீரர், பராசர குமாரர்கள், நந்தி முதலாயினோருக்கு ஞானோபதேசம் புரிந்தமையானும், இன்னும் பல ஹேதுக்களானும் நமது இளைய குமாரனான முருகப்பெருமானே சகலகலா வல்லவனாவன். அவனே புலவர்களிலெல்லாம் முதன்மை பெற்றவன். ஆகையா லவனிடஞ் சென்றளிமின்' என்றனள். அவ்வாறே யவர்களிறுதியிற் கந்தலோகஞ் சார்ந்து, பரம கருணாநிதியாகிய முருகக் கடவுளைத் துதித்து, நடந்த தோதி, வித்வ தாம்பூலத்தை யேற்றருள வேண்டுமென் றிரந்தனர். பிரான் மகிழ்ந்து புன்னகையரும்பி யவ் வித்வ தாம்பூலத்தை யேற்றருளினரென்பர். இச்சரித்திர நிகழ்ச்சி முறை யாவும்,

"புலவீரென் றனையழைத்தீர் புரந்தரனே
யெனவவனும் பொதிகை வெற்பி
னிலகியகோ முனிபுலவ னென்றறுமே
யவனுங்கேட் டிரங்கி நின்று
கலைமகளாம் புலத்தியெனக் கலைமகளுங்
கருத்தழிந்து கௌரி யென்ன
மலையரசன் மகள்புதல்வன் சரவணவேள்
புலவரென வகுத்தா ளன்றே"

என்னுந் தமிழ்த் தனிப்பாட லொன்றில் நன்கு காணக் கிடக்கின்றது. "நூலறி புலவ" என்றும, "பலர் புகழ் நன்மொழிப் புலவரேறே" என்றும், "நின்னொடு புரையுந ரில்லாப் புலமையோய்" என்றும் நக்கீர தேவர் தமது திருமுருகாற்றுப்படையில் கூறலானும், இவர் தமிழறிவில் மிக்க புலமை வாய்ந்தவ ரென்பது நன்கு விளங்குகின்றது. தவிர,

"திருத்தகு மதுரைதன்னிற் சிவன் பொரு
ணிறக்கு மாற்றா
லுருத்திர சருமனாகி யுறுபொருள் விரித்தோன்"

என்று கந்தபுராணங் கூறியவாறு, கடைச்சங்க காலத்துச் சோமசுந்தரப் பெருமானால் மொழியப்பட்ட "இறையனா ரகப்பொருள் என்னும் களவியலாகிய பொருணூலுக்கு உரை எழுதுமாறு பாண்டியன் ஆங்குள்ள புலவர்களுக் காக்ஞாபித்தலும், நக்கீரர், கபிலர், பரணர் முதலிய நாற்பத்தொன்பதின்மரும் தனித்தனி யுரை கண்டு, தங்கடங்களுரைகளே சிறந்தனவென்று தருக்கித்துக் கலகஞ் செய்ய, அதனால் மனக்கிலேச மடைந்த மன்னன், ஆலவாய்ப் பெருமானிட முறையிட, அவர் வித்வ கோலங்கொண் டெழுந்தருளி வந்து, "பாண்டிய! இவ்வூரிலே சிவபக்தியிற் சிறந்த தனாட்டியனென்னும் வைசியப் பிரபுவிடத்தில் நமது இளைய பிள்ளையாராகிய முருகவேளை ஓர் மூங்கைப் பிள்ளையாயவதாரஞ் செய்து, உருத்திர சருமர் என்னும் பெயரோடு வளர்ந்து வருகிறானாதலின், அவர் முன்னிலையில் இந் நாற்பத்தொன்பதின்மருடைய வுரைகளையும் வாசிக்கச் செய்யின் மெய்யுரையைக் காணலாம்" என்று சொல்லி மறைந்தருளினர். பாண்டிய னவ்வாறே செய்கையில் மூங்கைப் பிள்ளையாகிய முருகன், சில புலவர்களுடைய சொல்லாட்சிக்கு [illegible] யிகழ்ந்தும், சிலருடைய பொருள் வைப்பை நோக்கி யுவந்தும், கபிலர், பரணர் என்னும் புலவர்களுடைய வுரைக்கு ஒவ்வோரிடத்துத் தலையை யசைத்தும் கேட்டிருந்து, மதுரைக் கணக்காயன் மகனார் நக்கீரனார் தம் முரையை வாசித்த காலத்தில் ஒவ்வொரு சொற்றொறும் பொருட்சுவை தேக்கித் தலையசைத்துக் கண்கடோறு மானந்தபாட்பம் பொழிந்து, மெய்ப்புளகங் காட்டி, யுண்மையுரை யிதுவேயா மென்பதை நன்கு விளக்கி யருளின ரென்ப. மற்றுஞ் சகல சுருதிகளு மிவரையே சகலலோக குருவென்று சாற்றுகின்றன. புராண பரிபாலன கிருபா மூர்த்தியெனப் புலவர்கள் போற்றித் துதிக்கின்றனர். ஆகையா லிதுகாறுங் கூறியவாற்றால் முருகவேளே புலமையிலும் கவி சமத்காரத்திலும் முதன்மை யுடையவ ரென்பது போதருகின்றது. இதனால் முருகவேளே தன்னேரில்லாத் தனிப்பெரும் புலவனென்ப தொருதலை.

நிற்க, இவர் புலமை யுடையோர்பா லணுகி ஐயப்பாடு வினவிய சரித்திரத்தையு மீண்டு சங்கிரகமாக வுரைத்த லத்தியாவசிய மாதலால், அதனை யொருவாறு சுருக்கிச் சொல்வோமாக. ஒரு சமயம் மிக்க பசியால் வாடி இளைப்புற்றவராய் நமது தமிழ் மூதாட்டியாகிய ஔவையார் நடுக்காட்டில் செல்லுமமையத்து, அவர் பால் ஓர் கலாவிநோதஞ் செய்யும் பொருட்டு நமது செந்தமிழ்ப் பரமாசாரியனாகிய அறுமுகப் பெருமான் ஓர் மாட்டிடைப் பையன் வடிவந் தாங்கிச் சில எருமை மாடுகளை மேய்த்துக்கொண்டு, ஆங்கிருந்த நாவல்மரமீதேறி உட்கார்ந்துகொண் டிருந்தனர். முருகனென் றோராத அம்மூதியாள், பையனை நோக்கித் தம் பசி தணியச் சில நாவற் பழங்கள் போடுமாறு கேட்டனள். அவனோ, "அம்மே! நிற்குச் சுடும் பழந் தேவையோ, சுடாதன வேண்டுமோ? புகல்வீராயின் போடுதும்" என்றனன். அது கேட்டு மிக்க வியப்புடையாராய்ச் 'சுடும்பழமும் உளது கொல்?' என்னும் சந்தேக சித்தமுடன் "சுடும் பழமே போடுவாயாக" வென்றனள். அதற்குப் பெருமானாகிய பையன், நன்கு கனிந்த பழங்கள் கீழே மணலில் விழுமாறு மரத்தைக் குலுங்க வுலுக்கினர். அவ்வாறு வீழ்ந்த பழங்களில் மணல் செறிந்திருப்பதைப் போக்குமாறு அம்மையார் அவற்றை வாயினாலூதுதலும், பெருமான் முதியாளை நோக்கி "பாட்டீ! பழம் சுடுகின்றதோ?" என்றெள்ளி நகையாடினர். பிறகு விஷய முணர்ந்த பெரியாள் தன் அறியாமைக்கு மிக வருந்தி,

"கருங்காலிக் கட்டைக்கு
வாய்நாணாக் கோடாலி
இருங்கதலித் தண்டுக்கு
நாணுமே—பெருங்கானில்
காரெருமை மேய்க்கின்ற
காளைக்கி யான் தோற்ற
தீரிரவு துஞ்சாதென் கண்"

பெருமான் கருணைகூர் முகங்களாறும், கரங்கள் பன்னிரண்டுமிலங்க மயில்வாகனருடராய்க் காட்சி தந்து, "பண்டிதாய்! ஏமாற்ற மடைந்ததா யெண்ணி மனங் கவலற்க. கலாவிநோதமாகச் சில ஐயவிலக் கறிவான் நின்பாலுற்றனம். ஆதலின் இவ்வுலகில் இனியது யாது, கொடியது யாது, அரியது யாது, பெரியது யாது எனக் கூறுக" என்று கேட்டலும், ஔவைப் பிராட்டியார் உடனுக்குடன் "இனியது கேட்கிற் றனிநெடு வேலோய்!" என்றும்; "கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்!" என்றும்; "அரியது கேட்கின் வரிவடி வேலோய்!" என்றும்; பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!" என்றும் தொடக்கங்களையுடைய பாசுரங்களால் விடையளித்தன ரென்பர். இத் திருவிளையாடலினுங் கூடப் பெருமான் வித்வத் தன்மை யுடையவர்களிடம் பெரிதும் விருப்ப முடையவ ரென்பதும், தமிழ்ப் புலமையில் மிக்க பாண்டித்யமும் ஆர்வமும் உடையவ ரென்பதும், வெள்ளிடை மலைபோல் தெள்ளிதி னுணரக்கிடக்கின்றன.

தவிர, சிவபெருமான் அன்பர்களைச் சமயம் நேர்ந்துழி தடுத்தாட்கொள்ளுஞ் செயல் போல கந்தக் கடவுளார் தாமுமோர் சம்பவத்தி லீடுபட்ட தன்மையும், வற்புறுத்திப் பாடல் கொண்ட வன்மையும், "தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன்" என்று புலவர்களால் புகழ்ந்து பாடப்பட்ட தமது அருமைத் திருவாயால் பாடிய கவி சமத்காரமும் தெரிய, கூறப்படும் சரித்திர வரலாற்றை இங்கே அன்பர்களுக்குக் கூறுமவிருக்க மனமிசையவில்லை யாதலின், அதனைச் சுருக்கமாக மொழிகுதும். அதாவது இற்றைக்குச் சுமார் ஓராயிர மாண்டுகட்கு முற்பட்ட காலத்தில், செந்தமிழ் மணங்கமழுந் தொண்டமண்டலத்தில் செங்காட்டங் கோட்டந் துறையூரில் செங்குந்தகுல மரபிலே தோன்றி சிவனை யன்றி வேறொருவரையும் பாடாச் செந்நெறி யொழுகுஞ் சிவநேசச் செல்வராயும், செந்தமிழ்ப் புலமை நிரம்பிய சிறந்த மேதாவியாயும் விளங்கிச் சிவகவி யென்றோ ரியற்கைப் பெயர் வாய்ந்த பொய்யாமொழிப் புலவரென ஒருவ ரிருந்தனர். அவரிடத்து ஓர் குகனடியார் சென்று, 'நல்லிசைப் புலவீர்! குமாரக் கடவுள் மீது ஓர் பிரபந்தம் பாடித் தருங்க' வென்றனர். அதற்குப் புலவர், "கோழியைப் பாடிய வாயாற் குஞ்சினைப் பாடேம்" என்று முரட்டுத் தனமாய் வெறுத்துரைத்தனர். அதனால் மனங் கன்றிய வடியார் குகனிடம் விண்ணப்பிக்க, பெருமான் சமயம் பார்த்திருந்தனர். தம்மை வணங்காதவர்களை வணங்கச் செய்வதிலும், பாடாதவர்களைப் பாடச் செய்வதிலும், அடங்காதவர்களை யடக்குவிப்பதிலும் எஃகுடை யண்ணலுக்கு எக்காளும் மிக்க மகிழ்ச்சி யாதலால், அப்பொய்யா மொழியார் சந்திரவாணன்பால் பரிசு பெற்று, மனுஷ சஞ்சாரமில்லாத ஓர் பாலை வனத்தின் வழியாய் மிக்க அவசரமாய் மீளுகின்ற சமயத்தில் நமது குமாரக் கடவுள் அவரைத் தடுத்தாட்கொள்ள விரும்பி, திருக்கரத்திலே வேலும் வில்லும், அம்புகளுங் கொண்டு மிக்க கோர ரூபத்துடன் வேடுவர் கோலங் கொண்டு தோன்றி வழி மறித்து, "இப் பாலைவனத்துக்குரிய என்னை மதியாது மிகு அவசரமாய்ச் செல்லும் நீ யாவன்?" என்று வினவி யருளினர். யாது நேருமோ என்று பயந்து நடுங்கிய அச்சிவகவி "யான் புலவன்" என்றனர். அதற்குக் கிராத மூர்த்தியாகிய பெருமான் நகைத்துப் "புலவன் என்னுஞ் சொல், நங் குறிஞ்சித் தெய்வமாகிய செவ்வேடனுக்கு எற்குமன்றி வேறு யாவர்க்கு அடுக்கும்? ஒரு சிறிது அத் தெய்வத்தின் மாணவனாகிய அகத்தியற்குச் சேரும். நீ புலவனென்று மொழிவது எனக்கு மிக்க வியப்பை யளிக்கின்றது. ஆயினும் நிற்குக் கவி வருமோ?' வென்றனர். இவ்வார்த்தை செவிப்பட்டதும் ஒருவாறு புலவர் அச்சம் நீர்ந்தவராய்ப் "பாடுவேன்" என்றனர். "ஆயின் என் பெயரும், இந்நிலமும், சுரம்போக்குத் துறைபு மமைய, வெண்பாவில் 'பொன் போல்' என்று தொடங்கி முடித்தி" யென்றார். உடனே புலவர் "உன் பெயர் யாது" என்றனர். அதற்கு வேட்டுவக் குமரன் (குஞ்சைப் பாடேன் என்றவிவன் குஞ்சினுந் தாழ்ந்ததாகிய முட்டையை இப்போது பாடட்டும் என்று மனத்தி லெண்ணியவராய்) "என் பெயர் முட்டை" யென்றனர். உடனே புலவர் சுரம் போக்குத் துறையில்,

"பொன் போலுங் கள்ளிப்
பொறி பறக்குங் கானலிலே
என்பேதை செல்லற்
கியைந்தனளே—மின்பாயும்
மானவேன் முட்டைக்கு
மாறாய தெவ்வர் போங்
கானவேன் முட்டைக்குங் காடு"

என்று ஒரு வெண்பாவைப் பாடினர். இது கேட்ட வேடுவராகிய பெருமான், உண்மகிழ்ந்தனராயினும், வெளிப்பட்ட புன்னகையினராய் நகைத்து, 'இச் செய்யுளில் சொற்குற்ற மிலவாயினும் பொருட்குற்ற முள்ளது' என்றனர். அக் குற்றத்தை யுணர்த்துமாறு புலவர் கேட்கப் பெருமான், "சதுரக் கள்ளிச்செடிகள் எரிந்து பொறி பறக்கும் பெருநெருப்பு மிக்க காட்டினிடத்தே சிறுநெருப்புக்குத் தானும் வெந்து சாம்பராகும் வேலமரத்து முள் காலில் தைப்பது இசையுமோ" என்று கூறி, நான் பாடுகிறேனென்று, அக்கவியில் அவரது பெயரும், பாலை வருணனைகளும், உரிப்பொருளு மமைய,

"விழுந்ததுளி யந்தரத்தே
வேமென்று வீழ்ந்தால்
எழுந்துசுடா் வுருமென்
றேங்கிச்—செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்தே
பெய்வளையும் போயினளே
பொய்யா மொழிப்
பகைஞர் போல்"



# தென்னிந்திய செங்குந்தர் மூன்றுவது மகாநாடு
# திருமயிலாப்பூர், சென்னை

## வரவு வகைகள்

### திருவல்லிக்கேணி

| | | | |
|---|---|---|---|
| சா. மா. லோகநாத முதலியார் | 15 | 0 | 0 |
| M. இராமலிங்க முதலியார் | 10 | 0 | 0 |
| A. N. மாசிலாமணி முதலியார் | 5 | 0 | 0 |
| A. N. அப்பாதுரை முதலியார் | 5 | 0 | 0 |
| தொ. கு. திருநாவுக்கரசு முதலியார் | 5 | 0 | 0 |
| ஆ. சுந்தர முதலியார் | 5 | 0 | 0 |
| சில்லரை வசூல் | 17 | 0 | 0 |

### திரு மயிலாப்பூர்

| | | | |
|---|---|---|---|
| கை. க. அய்யாசாமி முதலியார் (கைலி வியாபாரம், மதறாஸ் & கொழும்பு) | 50 | 0 | 0 |
| தணிகாசலத்தி முதலியார் | 10 | 0 | 0 |
| C. சுப்பராய முதலியார் | 5 | 0 | 0 |
| N. T. பஞ்சாட்சர முதலியார் | 5 | 0 | 0 |
| P. C. சோமசுந்தர முதலியார் | 5 | 0 | 0 |
| இருசப்ப முதலியார் | 5 | 0 | 0 |
| சில்லரை வசூல் | 26 | 0 | 0 |

### சைதாப்பேட்டை

| | | | |
|---|---|---|---|
| பெஸ்ட் பனியகாட் கம்பெனி | 20 | 0 | 0 |
| நேஷனல் பனியகாட் கம்பெனி | 10 | 0 | 0 |
| S. சடையப்ப முதலியார் | 10 | 0 | 0 |
| இம்பீரியல் பனியகாட் கம்பெனி | 10 | 0 | 0 |
| S. ரத்தினவேல் முதலியார் | 10 | 0 | 0 |
| M. பொன்னுசாமி முதலியார் | 10 | 0 | 0 |
| கோ. நடேச முதலியார் | 5 | 0 | 0 |
| தொ. துரைசாமி முதலியார் | 5 | 0 | 0 |
| P. ரத்தினசபாபதி முதலியார் | 5 | 0 | 0 |
| துளசிங்க முதலியார் | 5 | 0 | 0 |
| M. குமாரசாமி முதலியார் | 5 | 0 | 0 |
| S. முருகேச முதலியார் B.A., L.T. | 5 | 0 | 0 |
| சில்லரை வசூல் | 27 | 0 | 0 |

### செங்கற்பட்டு ஜில்லா, காஞ்சீபுரம்

| | | | |
|---|---|---|---|
| இரண்டாவது மகாநாட்டு மிச்சப் பணத்தில் வரவு | 125 | 0 | 0 |

[70-வது பக்கத் தொடர்ச்சி]

என்று ஒரு வெண்பாப் பாடினர். அதனைக் கேட்ட புலவர் பயந்து, "புல்லறிவாளனாகிய வேடனோ இவ்வுயரிய நடையில் பாடலிசைக்க வல்லான்? குறிஞ்சி நிலக் கடவுளாகிய முருகனே இவ்வேடுவ கோலம் புனைந்து வந்தானென் றுன்னி, யவர் பாதங்களில் சாஷ்டாங்கமாய் வீழ்ந்து நமஸ்கரிக்க, பெருமான் றிருவுள மிரங்கி, மூழுமதியன்ன வாறு முகங்களும், மூந்நான்காகும் விழிகளினருளும், வேலும், வேறுள படையின் சிருஞ், செழுமலரடியுங் காட்டித் தான் வேறு சிவன் வேறு அல்ல வென்னு முண்மையை விளக்கி ஞானோபதேசஞ் செய்ததுமல்லாமல், அவர் நாவில் தமது கூரிய வேலால் பீஜாக்ஷரத்தையு மெழுதி யநுக்கிரஹித்து மறைந்தருளின ரென்ப. இச்சரித்திர வரலாற்றை நமது அருணகிரியார் திருப்புகழில் "முற்பட்ட முரட்டுப் புலவனை, முட்டைப் பெயர் செப்பிக் கவிபெறு பெருமானே" என்று சித்தரித்துப் பாடுகின்றார். மார்க்க சகாய தேவரும் தமது திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழில்,

"......................விளம்ப வவர்மேல்
விழுந்ததுளி யென்றெடுத்துப் பாடியவர் நாவில்
வேல்கொடு பதித்த சதுரா"

என்று இச்சம்பவத்தை வெகு அழகாகக் குறிப்பிட்டுள்ளனர். எனவே இதுகாறுங் கூறிய இவரது திருவிளையாடல்களெல்லாம், இவர் புலமைத் துறையில் அன்பர்களுக் கருளியதும், தடுத்தாட்கொண்டதும், பிரபந்தம் பாடல் முதலியன பெற்றதும், ஐயவினு எழுப்பிச் சந்தேகந் தெளிந்ததும், காவியங்களுக் குரை கண்டதுமாகிய கலாவிநோத லீலைகளே மிகுந்திருத்தலான், இவர் செந்தமிழ்ப் புலமை நிரம்பிய முதற்பெருந் தேசிக னென்பதற் கெட்டுணையு மையமின்று. இவரே பரிபூரண கலாநிதி, வித்வ சிரோன்மணி, கல்விக் களஞ்சியம், செந்தமிழ்த் தீஞ்சுவைப் பொக்கிஷம். ஆகையால் இவரே தமிழ் முதற்பெருங் குரவராவர். தமிழில் இவரை நிகர்வார் யாவருமிலர். இவரே தமிழில் முதற்புலமை வாய்ந்தவர். ஆகையால் கல்வியில் விருப்பமுடையவர்கள் இவரைத் திரிகரண சுத்தியோடு வணங்கி வழிபாடியற்றின், எளிதில் கல்வியில் வல்லுநராவர். கவிபாடுந் திறனு மெளிதில் கைகூடும். ஆதலால் செங்குந்த குலச் சீரியர்களே! சகோதர சகோதரிகளே! தமிழ்த் தெய்வமாகிய சண்முகப் பெருமான் பாத கமலங்களை எந்நாளு மறவாமல் வணங்கி வழிபாடாற்றி இம்மையம்மை நலன்களைப் பெற்றுய்வீர்களாக!

(தொடரும்)

சுபம்! சுபம்!! சுபம்!!!

| | | | |
|---|---|---|---|
| ஆரணி | | | |
| S. A. ஆலாலசுந்தர முதலியார் | 10 | 0 | 0 |
| துடியேற்றம் | | | |
| ஆ. சே. வேலாயுத முதலியார் | 20 | 0 | 0 |
| தக்கோலம் | | | |
| A. R. செல்லப்ப முதலியார் | 10 | 0 | 0 |
| துருவராஜப்பேட்டை | | | |
| குட்டி. சிதம்பர முதலியார் | 5 | 0 | 0 |
| திருவத்திபுரம் | | | |
| M. லோகநாத முதலியார் | 10 | 0 | 0 |
| புதுவை | | | |
| S. P. அண்ணாமலை முதலியார் | 10 | 0 | 0 |
| சிங்கப்பூர். சு. அண்ணாமலை முதலியார் | 5 | 0 | 0 |
| கீழையூர் | | | |
| அ. சொக்கலிங்க முதலியார் மூலம் வரவு | 10 | 0 | 0 |
| கீழப்பெரும் பள்ளம் | | | |
| S. V. முத்துசாமி முதலியார் | 5 | 0 | 0 |
| உன்னியூர் | | | |
| R. மாணிக்க முதலியார் | 25 | 0 | 0 |
| மதுரை. | | | |
| மதுரையைச் சேர்ந்த தல்லாகுளம், திருவாப்புடையார் கோவில், கோரிப்பாளையம், பொது மகமை நிதி ஏஜண்டு மூலம் வரவு | 50 | 0 | 0 |
| சேலம் அம்மாபேட்டை | | | |
| செங்குந்த மகாஜன சங்கம் | 10 | 0 | 0 |
| செங்குந்த வாலிப சங்க நன்கொடை, T. R. அருணாசல முதலியார் மூலம் | 5 | 0 | 0 |
| திருச்செங்கோடு | | | |
| V.V.C.R. வையாபுரி முதலியார் | 10 | 0 | 0 |
| பாண்டமங்கலம் | | | |
| மு. பழநியப்ப முதலியார் | 5 | 0 | 0 |
| கோயமுத்தூர் | | | |
| V. S. செங்கோட்டைய முதலியார் | 50 | 0 | 0 |
| டிக்கட் விற்றதில் வரவு | 32 | 8 | 0 |
| ரங்கோன் வரவு | | | |
| M.P.R.M. இருளாண்டி முதலியார் | 10 | 0 | 0 |
| ச. மாரிமுத்து முதலியார் | 4 | 5 | 0 |
| அ. பழனியாண்டி முதலியார் | 3 | 0 | 0 |
| அ. வீ. அம்மைய முதலியார் | 3 | 0 | 0 |
| க. பதினெட்டாம்படி முதலியார் | 3 | 0 | 0 |
| வ. க. தனுஷ்கோடி முதலியார் | 3 | 0 | 0 |
| வா. மீ. நாகலிங்க முதலியார் | 3 | 0 | 0 |
| மூ. அ. மூக்க முதலியார் | 2 | 0 | 0 |
| சிவ. சுந்தர முதலியார் | 2 | 0 | 0 |
| வெ. நா. வீரபத்திர முதலியார் | 2 | 0 | 0 |
| கு. ஆறுமுக முதலியார் | 2 | 0 | 0 |
| ராம. து. குருசாமி முதலியார் | 2 | 0 | 0 |
| ப. கா. ப. இருளாண்டி முதலியார் | 2 | 0 | 0 |
| கூ. கா. மீ. கா. பழனி முதலியார் | 2 | 0 | 0 |
| கொ. அ. கு. குற்றால முதலியார் | 2 | 0 | 0 |
| ஒ. ராம. கு. சேது ராமசாமி முதலியார் | 2 | 0 | 0 |
| R. M. A. சுந்தர முதலியார் | 2 | 0 | 0 |
| தா. சங்க முதலியார் | 2 | 0 | 0 |
| தொ. வ. நாகலிங்க முதலியார் | 2 | 0 | 0 |
| பா. கு. வெள்ளைச்சாமி முதலியார் | 1 | 0 | 0 |
| ஆ. அ. சங்கரபாண்டிய முதலியார் | 1 | 0 | 0 |
| ப. கி. தர்மலிங்க முதலியார் | 1 | 0 | 0 |
| ராம. க. சேது ராமசாமி முதலியார் | 1 | 0 | 0 |
| வெ. நா. வெ. அங்கமுத்து முதலியார் | 1 | 0 | 0 |
| க. சு. வேலு முதலியார் | 1 | 0 | 0 |
| வெ. நா. சி. வெள்ளைய முதலியார் | 1 | 0 | 0 |
| கு. மு. மு. பொன்னுசாமி முதலியார் | 1 | 0 | 0 |
| மு. ப. ஆ. அண்ணாமலை முதலியார் | 1 | 0 | 0 |
| கூ. மு. நா. சுப்பிரமணிய முதலியார் | 1 | 0 | 0 |
| ஆ. ராம. சுந்தர முதலியார் | 1 | 0 | 0 |
| நா. அ. முப கோ வேலாயுத முதலியார் | 1 | 0 | 0 |
| G. முனிசாமி முதலியார் | 1 | 0 | 0 |

ஆக மொத்தம் 758—13—0

### மூன்றாவது மகாநாட்டுச் செலவு வகைகள்

| | | | |
|---|---|---|---|
| பிரயாணச் செலவு | 56 | 5 | 3 |
| தபால் | 73 | 4 | 6 |
| பந்தல் அலங்காரம் | 34 | 13 | 6 |
| சாப்பாடு | 264 | 8 | 3 |
| சாமான் வகையரா | 56 | 6 | 6 |
| அச்சுக்கூலி & பிளாக்—செலுத்தியது | 100 | 0 | 0 |
| ஷை செலுத்த வேண்டியது | 134 | 13 | 0 |
| கூலி முதலியன | 36 | 1 | 6 |
| புஷ்பம் & வாத்தியம் | 57 | 0 | 0 |
| தொண்டர் & பிரதிநிதி (Badges) | 23 | 7 | 9 |
| இதர செலவுகள் | 45 | 1 | 6 |
| ஆக மொத்தம் செலவு | 881 | 0 | 3 |
| ஆக மொத்தம் வரவு | 753 | 13 | 0 |
| | 122 | 3 | 3 |
| இருப்பு | 6 | 7 | 3 |
| | 128 | 10 | 6 |



# தலைச் சங்கப் பிரதிநிதிகள் சுற்றுப் பிரயாணம்

நமது தலைச்சங்கத்துப் பிரதிநிதியாகிய தமிழ்ப் புலவர் சு. நா. குமரகுரு முதலியார் 23-6-31-ல் சென்னையிலிருந்து புறப்பட்டுச் சாரம் சென்று அங்கே 'அருணகிரிநாதர் அவதாரம்' என்பது பற்றிப் பேசி முடித்து மறுநாள் சொக்கப் பெருவளூர் சென்று 25-6-31-ல் கூடிய பொதுக் கூட்டத்தில், 'மணிவாசகர் மாண்பும் நமது கடமையும்' என்பதுபற்றி உபந்யசித்து, மறுநாள் புறப்பட்டுச் செட்டிப்பாளையம், நகர், கிடார், செர்நெற் குன்றம் சுற்றிக்கொண்டு கண்டாச்சிபுரம் சென்றார். அவ்வூர் பாக்கி வசூலான மறுநாள் 8-7-31 இரவு கூடிய பொதுக் கூட்டத்தில் 'மணிவாசகர் மாண்பும் முன்னேற்ற வழியும்' என்பதுபற்றிப் பிரசங்கித்து மறுநாள் திரு. க. பொ. இராஜமாணிக்க முதலியாருடன், சித்தாத்தூர், ஆலம்பாடி இவை சுற்றிக்கொண்டு 13-7-31-ல் ஒட்டம்பட்டு சென்று அங்கே கூடிய கூட்டத்தில் 'வள்ளியம்மைத் திருமணமும், நம்மவர் சுபாசலமும்' என்பதுபற்றிப் பேசினார். மறுநாள் சம்பை, திருவரங்கம், கூனூர், திருப்பாலைப் பந்தல், திருக்கோவலூர், காட்டுப்பையூர், முதலூர் முதலிய விடங்களுக்குச் சென்று 24-7-31-ல் புதுச்சேரி திரு. ஆ. வே. முத்தைய முதலியாரவர்களைக் கண்டுகொண்டு முத்தியாலு பேட்டை, சாலைத்தெரு, பெத்துசெட்டிப் பேட்டை சென்றார்.

அவ்வூரில் கூடிய கூட்டத்தில் 'அமர்நீதி யற்புதம்' என்னுஞ் சொற்பொழி வாற்றி, மறுநாள், செல்வபெருமாள் பேட்டை, இலாசு பேட்டை, கதிர்காமம், சொக்கநாதன் பேட்டை, சண்முகாபுரம், வில்லியனூர், கூடப்பாக்கம், நல்லாற்றூர் முதலிய விடங்களைச் சுற்றிக்கொண்டு நெட்டப்பாக்கம் சென்றார்.

அவ்வூரில் கூடிய கூட்டத்தில் பிரசாரகர், 'செங்குந்தர் சீர்திருத்தம்' என்பதுபற்றிப்பேசி, மறுநாள் திருவாமாத்தூர், விழுப்புரம், பண்ணுருட்டி, பாளையம், முத்துகிருஷ்ணபுரம், கொங்கராயனூர், பட்டாம்பாக்கம், திருக்கண்டீச்சுரம், குணமங்கலம், குமரநாய்க்கன் பேட்டை, திருப்பாதிரிப் புலியூர், புதுவண்டிப் பாளையம், பழயவண்டிப் பாளையம், புருகேஸ் பேட்டை, கூடலூர், சிதம்பரம் முதலிய விடங்களைச் சுற்றிக்கொண்டு லால்பேட்டைக்குச் சென்றார்.

அவ்வூரில், 'சமூக முன்னேற்றம்' என்பதுபற்றிப் பேசி, மறுநாள் கொல்லிமலை, எள்ளேரி, குறுங்குடி முதலிய விடங்களுக்குச் சென்று புதிய சந்தா சேகரித்துக்கொண்டு 1-9-31-ல் காட்டார் மங்கலம் சென்றார்.

அவ்வூரில் கூடிய பொதுக்கூட்டத்தில், திரு. ப. ஆ. முருக முதலியாரும், திரு. கு. ஆ. கோவிந்தசாமி முதலியாரும், பிரசாரகரும் முறையே 'கல்வி, சமூக முன்னேற்றம், குலதிலகர் கூத்தர் மான்மியம்' என்னுஞ் சொற்பொழி வாற்றினர். மறுநாள் பிரசாரகர், திட்டைக் குடி விருத்தாசலம், குறிஞ்சிபாடி, குப்பம், புதுகுப்பம், கஞ்சிநாதன் பேட்டை, பெரிய கண்ணாடி, மீனாக்ஷி பேட்டை, விழப்பளம், வடலூர், கருங்குழி, முதனை, உளுந்தூர் பேட்டை, திருநாம நல்லூர், குடியாங்குப்பம், ஆனத்தூர், திருவெண்ணை நல்லூர், கோவுலாபுரம், இருந்தை, பரிக்கல், சூரப்பட்டு, நங்காத்தூர், கல்லாலம்பூண்டி, தென்பேர், எசாலம், தச்சூர், புதுப்பாளையம், ஆசூர், பனையவரம், தாதாபுரம், பெரிய தச்சூர், முதலிய விடங்களைச் சுற்றிப் புதிய சந்தா சேர்த்தும், பணம் வசூலித்தும், பிரசங்கம் செய்துகொண்டும், நமது சங்கப் பிரசாரகர் 23-12-31-ல் சென்னை வந்து சேர்ந்தார்.

பிரசாரகரை வரவேற்று உபரிரித்ததோடு அவர் மூலம் சந்தாவும் நன்கொடையும் அளித்து மிகவும் உதவிபுரிந்த நமது செங்குந்த கனவான்களுக்குச் சங்கத்தின் நன்றி மிகவும் உரித்தாகுக.

சுபம்.

---

2-2-32 இரவு $7\frac{1}{2}$ மணிக்குச் சென்னையினின்றும் திருவாளர்கள் தி. அ. சண்முக முதலியாரும், பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்களும் 3-2-32-ல் திருச்சியை யடைந்து திரு. தி. அ. வெங்கடாசல முதலியார் திரு. M. C. ராமசாமி முதலியார் அவர்களால் பிரதிநிதிகளை உபசரிக்கப் பெற்று. அவ்விடம் உள்ள சந்தாக்களை வசூலித்து, பொன்மலை, ஸ்ரீரங்கம், திருவானைக்காவல் முதலிய இடங்களைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு 7-2-32—ல் மண்ணச்சநல்லூருக்குச் சென்று அவ்விடம் திருவாளர்கள் பொன்னுசாமி முதலியார், பிச்சையப்ப முதலியார், சந்தியப்ப முதலியார் முதலிய பிரமுகர்களால் உபசரிக்கப் பெற்று அவ்விடத்திய சந்தாபாக்கிகளை வசூலித்துக் கொண்டு லால்குடி முதலிய இடங்களையும் சுற்றிக்கொண்டு 11-2-32-ல் துறையூருக்குச் சென்றார்கள். அவ்விடம் திரு. ஆ. வீ. முத்தை முதலியார் அவர்களாலும், பிரபல வியாபாரியும் செல்வச் சீமான்களுமாகிய திருவாளர்கள் வீரப்ப முதலியார், பழனியாண்டி முதலியார், சபாபதி முதலியார் முதலியவர்களால் உபசரிக்கப்பெற்ற. அவ்வூரில் சந்தா முதலியதை வசூலித்துக்கொண்டு தாத்தையங்கார் பேட்டைக்குச் சென்றார்கள்.

### மேட்டுப்பாளையம்

14-2-32-ல் மேட்டுப்பாளையம் சென்று அவ்விடம் ஜவுளி வியாபாரியும், செல்வவந்தரும் ஆகிய தேவராயப்பட்டி திரு. ஆனை முதலியாரும் அவரது குமாரர்கள் சி. ஆ. சின்னத்தம்பி முதலியார் அவர்களால் நமது தலைச்சங்கப் பிரதிநிதிகளை வரவேற்று

...பசரிக்கப்பெற்ற அன்றிரவு 7 மணிக்குச் செங் குந்தர் பொதுச் சாவடியில் அவ்வூர் செங்குந்த வாலிபர் பொதுக்கூட்டம் கூடியது. அவ்வமயம் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் "பிறப்பு" என்பதைப்பற்றியும், திரு. தி. அ. சண்முக முதலியார் "செங்குந்தர்கள், ஒழுக்கம், சங்கம், மித்திரன்" என்னும் விஷயமாய் உபந்யசிக்கப்பட்டு இரவு 11-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

உன்னியூர்

17-2-32-ல் தாத்தையங்கார் பேட்டை முதலிய இடங்களைச் சுற்றிக் கொண்டு மாலை 4-மணிக்கு உன்னியூருக்குச் சென்றார்கள். அவ்விடம் மிராஸ்தாரும் தலைச்சங்க நிருவாகக் கமிட்டி மெம்பரும் கல்விநிதி கமிட்டி மெம்பருமாகிய திரு. R. மாணிக்க முதலியார், மிராஸ்தார், திரு. ஆநந்த முதலியார், உன்னியூர் செங்குந்த சங்க காரியதரிசி திரு. P. மாரியப்ப முதலியார் முதலிய பிரமுகர்களால் உபசரிக்கப் பெற்று, 18-2-32 மாலை 6 மணிக்குப் போர்டு ஸ்கூலில் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் தலைமையில் ஓர் செங்குந்த பொதுக் கூட்டம் கூடியது. அவ்வமயம் திரு. தி. அ. சண்முக முதலியார் அவர்களால் "செங்குந்தர் சீர்திருத்தம்" என்னும் விஷயமாயும் திரு. P. மாரியப்ப முதலியார் "சங்கம், மித்திரன்" என்னும் விஷயமாகியும் உபந்யசிக்கப்பெற்றுத் தலைவர் முடிவுரைக்குப்பின் இரவு 11 மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

20-3-32-ல் நமது பிரதிநிதிகள், மோகனூர், மணப்பள்ளி, ஒருமந்தூர், வேலூர், பாண்டமங்கலம், ஜேடர்பாளையம், புதுப்பாளையம், கட்டிபாளையம், திருக்காடுதுறை முதலிய இடங்களைச் சுற்றிக்கொண்டு, 25-2-32 இரவு கரூருக்குச் சென்று அவ்விடம் உள்ள பிரபல வியாபாரியும், தலைச்சங்க நிருவாக மெம்பருமாகிய திரு. A. அண்ணாமலை முதலியார் பிரதிநிதிகளை உபசரிக்கப்பெற்றது. திரு. அ. சு. ஆறுமுக முதலியார் அவர்களும் நமது பிரதிநிதிகளுடன் அவ்வூர் சந்தாபாக்கிகளை வசூலித்துக் கொண்டு 28-2-32-ல் எலவனூருக்குச் சென்று 1-3-32 காலை சென்னை வந்து சேர்ந்தார்கள். நமது பிரதிநிதிகளை உபசரித்து உதவிய நமது செங்குந்த கனவான்களுக்கு நமது தலைச்சங்கத்தினது நன்றி என்றும் உரித்தாகுக.

---

## சங்கப் பிரசாரகர் தமிழ்ப் புலவர் ச. நா. குமரகுரு முதலியார் மூலம் வழங்கப்பட்ட நன்கொடைகள்

22-7-31-ல் கலியாணம்பூண்டி, திருஞான சிவயோக முருகானந்த சுவாமிகள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை காலத்து நன்கொடையாக அளித்தது ரூ. 1—0—0.

9-9-31-ல் பிரசாரகர் வரவேற்பு நன்கொடையாக, மேலணிக் குழி திரு. அ. சி. பேரம்பல முதலியார் மனமுவந்து அளித்தது ரூ. 0—4—0.

14-9-31-ல் விருத்தாசலம், திரு. G. வைத்தியநாத முதலியார் சங்கப் பிரசாரகர் வரவேற்பு நன்கொடையாக அளித்தது ரூ. 0—8—0.

15-9-31-ல் கலியாணம்பூண்டி, திருஞான சிவயோக முருகானந்த சுவாமிகள் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு அளித்த நன்கொடை ரூ. 0—8—0.

தென்பேர் மதுரா புதுப்பாளையம், திரு. தி. கு. சின்னசாமி முதலியார் குமாரன், திருவளர் செல்வன் G. பழனியாண்டி முதலியாருக்கும்; பெருமாத்தூர் திரு. செ. இ. மு. பழனிவேல் முதலியார் குமாரத்தி திருவளர் செல்வி உண்ணாமுலையம்மைக்கும், 9-9-31-ல் நடந்தேறிய திருமண முகூர்த்தத்தில், பிள்ளை வீட்டாரும் பெண் வீட்டாரும் சங்கத்திற்கு நன்கொடையாக அளித்தது ரூ. 2—0—0.

12-10-31-ல் T. புதுப்பாளையம், திரு. மு. அ. கிருஷ்ணசாமி முதலியார், நமது சங்கப் பிரசாரகர் வரவேற்பு நன்கொடையாக அளித்தது 0—8—0.

பண்ணுருட்டிக் கடுத்த குடியியாங் குப்பம் திரு. மெ. ப. முருகப்ப முதலியார் புதல்வன் திரு அப்பாதுரை முதலியாருக்கும், புதுவை. முத்தியாலு பேட்டை நாட்டாண்மை. ஆ. சுப்புராய முதலியார் புதல்வி, ஸ்ரீமதி ஞானம்பாளுக்கும் 7-6-31-ல் நடந்தேறிய திருமண முகூர்த்த காலத்து நமது தலைச் சங்கத்திற்கு நன்கொடையாக அளித்தது ரூ. 0—8—0.

16-10-31-ல் ஷை முத்துகிருஷ்ணபுரம் திரு. மொ. அண்ணாமலை முதலியார் ஷை சங்கப் பிரசாரகர் வரவேற்பு நன்கொடையாக அளித்தது. ரூ. 0—4—0.

### மணியார்டர் மூலமும், நேரிலும் பெற்ற நன்கொடைகள்

திருவாளர் அபிராமம் T. V. நாகலிங்க முதலியார் மூலம் திருமண நன்கொடை 5 0 0

சின்ன காஞ்சிபுரம் திருவாளர் A. திருவேங்கட முதலியார் கல்விநிதிக்கு உவந்தளித்த நன்கொடை. ரூ. 25—0—0.

சிதம்பரம் செங்குந்தர் பிள்ளையார் கோயில் தெருவிலிருக்கும் கோ. பா. நாகசாமி முதலியார் குமாரத்தி செளபாக்கியவதி அமிர்தவல்லி யம்மாளுக்கு நடந்த மஞ்சள் சடங்கில் செங்குந்தர் கழகத்திற்கு நன்கொடை யளித்தது. ரூ. 0—4—0.



# கிளர்ச்சி

## செங்கற்பட்டு ஜில்லா
### செங்குந்தர் சத்தியநெறி இளைஞர் சங்கம் அய்யங்கார் பாளையம் காஞ்சிபுரம்

5-12-31 மாலை $6\frac{1}{4}$ மணிக்கு திருவினர் M. அன்னப்ப முதலியார் அவர்கள் தலைமையில் நடந்த நிருவாக சபைக்கூட்டத்தில் தலைவர் முகவுரைக்குப்பின், (1) தலைச் சங்கத்திற்குக் கிளைச்சங்கக் கட்டணமாகிய ரூபாய் ஐந்தை இம்மாதம் 10-க் தேதிக்குள் அனுப்பிவிட வேண்டும். (2) மூன்றாவது மகாநாட்டிற்குத் திருவினர் மா. அன்னப்ப முதலியார் அவர்களும் இச்சங்கக் காரியதரிசி திரு. A. வீரபத்திரன் அவர்களும் தங்கள் சொந்தச் செலவில் செல்ல வேண்டும். ஆனால் அவர்களுக்குப் பிரதிநிதிக் கட்டணமாகிய ரூபாய் ஒன்றை இச்சங்கத்திலிருந்து கொடுக்க வேண்டும் என்னும் தீர்மானங்கள் நிறைவேறின. தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் இரவு 9 மணிக்கு இனிது நிறைவேறியது.

30-12-31 மாலை திரு. K. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்ற கூட்டத்தில் 'மூன்றாவது மகாநாடு' என்பதுபற்றித் திரு. R. வீரபத்திரன் அவர்களும், 'அன்பு' என்பதுபற்றித் திரு. A. பெருமாள் அவர்களும் 'பத்மினி' என்பதுபற்றித் திரு. M. கோவிந்தராஜன் அவர்களும் பேசினார்கள்.

2-1-32-ல் திரு. M. அன்னப்ப முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வேறு சில தீர்மானங்கள் நிறைவேறின.

16-1-32 மாலை திரு. P. C. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்ற கூட்டத்தில் தலைவர் முன்னுரையில் இளைஞர்களைப்பற்றிப் பேசினர். பிறகு திருவாளர்கள் R. வீரபத்திரன், M. கோவிந்தராஜன், A. பெருமாள் அவர்கள் முறையே, 'இளைஞர்கள்' 'இந்தியா' 'நன்றி மறவேல்' என்பவைபற்றிப் பேசினார்கள். தலைவர் தம் முடிவுரையில் மேற்கண்ட விஷயங்களைப்பற்றி விரிவாகப் பேசிய பிறகு கூட்டம் சுமார் $8\frac{1}{2}$-மணிக்கு இனிது நிறைவேறியது.

30-1-32 மாலை திரு. R. வீரபத்திரன் அவர்கள் தலைமையில் மேற்படி ஆலயத்தில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. 'அஞ்சாமல் தனி வழியே போகவேண்டாம்' 'செல்வம்' 'நல்லொழுக்கம்' என்பவைபற்றி முறையே திருவாளர்கள் மு. மாணிக்கம், M. கோவிந்தராஜன், A. பெருமாள் இவர்கள் பேசினார்கள். தலைவர் தம் பின்னுரையில் மேற்கண்ட விஷயங்களைப்பற்றி விரிவாகப் பேசிய பிறகு கூட்டம் இரவு $7\frac{1}{2}$-மணிக்கு இனிது கலைந்தது.

### காஞ்சிபுரம் செங்குந்த வாலிபர் சங்கம்

மேற்படி சங்க ஆதரவில் 16-1-32 மாலை 6 மணிக்கு விளக்கொளி கோவில் வீதியில் காஞ்சிபுரம் ரேஞ்சு ஸ்கூல் டிப்டி இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ V. ராகவாச்சாரியார் M. A., L. T. அவர்கள் அவைத் தலைமையில் ஒரு கூட்டம் கூடியது. அது காலை ஏராளமான கூட்டம் கூடியிருந்தது. திருவாளர்கள் ச. ஸ்வீ. சிவஸ்வாமி தேசிகர் அவர்கள், திரு. வீ. திருஞான சம்பந்த முதலியார் அவர்கள், பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள், பி. வி. ராஜகோபால் முதலியார் அவர்கள் முறையே கல்வியின் அவசியம், முன்னேற்றம், ஒற்றுமை உணர்ச்சி, பழக்க வழக்கங்கள், என்பவைபற்றிச் சொற்பொழிவாற்றினர். பிறகு தலைவர் அவர்கள் முடிவுரைக்குப் பின் கூட்டம் சுமார் $9\frac{1}{2}$-மணிக்குக் கலைவுற்றது.

---

(மணியார்டர் மூலமும், நேரிலும் பெற்ற நன்கொடைகளின் தொடர்ச்சி)

விழுப்புரம் தாலுக்கா தென்பேர் மதுரா புதுப்பாளையம் செங்குந்த குலாபிமானியும் காங்கிரஸ் கமிட்டி தலைவருமாகிய உயர் சைவத் திருவாளர் மு. அ. கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள் தலைச்சங்கப் பிரசாரகர் தமிழ்ப் புலவர் ச. நா. குமரகுரு முதலியார் அவ்வூர்க்கு விஜயம்செய்த காலத்து வரவேற்பு நன்கொடையாக மனமுவந்து அளித்த நன்கொடை. ரூ. 0—8—0.

பண்ணுருட்டிக் கடுத்த குடியியாங் குப்பம் மெ. ப. முருகப்ப முதலியார் குமாரன் திருவளர் செல்வன் அப்பாதுரை முதலியாருக்கும், புதுவை முத்தியாலுப் பேட்டை, நாட்டாண்மை. ஆ. சுப்புராய முதலியார் குமாரத்தி திருவளர் செல்வி ஞானம்பாளுக்கும், 7-6-31-ல் நடந்தேறிய திருமண சுப முகூர்த்தத்தில் தலைச் சங்கத்திற்கு நன்

விழுப்புரம் தாலுக்கா கலியாணம் பூண்டி, மணலை, தமிழ்ப்புலவர், குமரகுரு முதலியார் புதல்வி சரவணம்பிகை சிவலோக பிராப்தமானதினிமித்தம் 8-11-31-ல் நடந்த மோக்ஷதீபாராதனையின் ஞாபகமாக 'செங்குந்த மித்திரனுக்கு' உவந்தளித்த நன்கொடை 0—4—0

பிரஜோற்பத்தி௵ ஆவணி௴ 27௳ மண்ணச்சநல்லூர் திரு. அ. மு. ரத்தின முதலியார் குமாரர் திரு. நடேச முதலியாருக்கும், கொண்டா குறிச்சி திரு. இராமசாமி முதலியார் குமாரத்தி ஸ்ரீமதி ராஜம்மாளுக்கும் நடந்த திருமணத்தில் நமது சங்க கல்விநிதிக்கு மனமுவந்து கொடுத்த நன்கொடை ரூ. 0—8—0

---

## வட ஆற்காடு ஜில்லா

### மின்னல் செங்குந்த சங்கத்தின் தைப்பூசத் திருநாள்

23-1-32-ல் ஷை சங்கத்தின் சார்பில் தைப் பூசத் திருநாள் நடைபெற்றது. பகல் 11-மணிக்குப் பஜனை கோஷ்டி ஊர்வலமும் 1-மணிக்கு மகேஸ்வர பூஜையும், நடந்தன. 3-மணிக்கு வெங்கனூர் ஸ்ரீலஸ்ரீ ராமலிங்க சுவாமிகள் தலைமையில் கூடிய கூட்டத்தில் தலைவர் அவர்கள் "அல்லமாப் பிரபு" சரித்திரமும், திரு. அண்ணாமலை முதலியார், "பக்தி" என்னும் விஷயமும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கப் பிரசாரகர் திரு. தி. அ. சண்முக முதலியார் "அடியார் பெருமையும் அன்பர் பணியும்" என்னும் விஷயமும்பற்றி உபந்யசித்தனர். தலைவர் முடிவுரைக்குப்பின் வந்தனோபசாரத்தோடு, இரவு 10 மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

### ஷண்முகசுந்தரர் செங்குந்த வாலிபர் சங்கம் முள்ளிப்பட்டு

20-1-32 காலை 10 மணிக்கு இவ்வூர் செங்குந்தர் நிலயத்தில் வாலிபர்களால் மேற்கண்ட பேருடைய சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. சங்கத்தின் நோக்கத்தைப்பற்றித் திருவாளர் காரைக்குடி A. R. N. மாணிக்க முதலியார் சங்கம் நடைபெற வேண்டிய முறையையும் வாலிபர்கள் ஊக்கத்தையும் விரிவாக எடுத்துரைத்துச் செங்குந்த உலகத்துக்கே சூரியப் பிரகாசமாய் அறிவுச் சுடர் தந்த வாலிபர் சிங்கமாகிய செங்குந்த மாபெரும் தலைவரும் மகாஜன சங்க அமைச்சருமாகிய திருவாளர் ம. ஷண்முகசுந்தரர் நாமம் நம் வாலிபர் சங்கத்துக்கு இடப்பெற்றதாகப் பிரேரேபிக்க ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு ஷண்முகசுந்தரர்க்கு ஜே! என்னுங் கோஷத்துடன் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டுப் புஷ்பம் தாம்பூலம் வழங்கப்பெற்றன. சங்கத்தின் உத்தியோகஸ்தர்கள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

---

## தென்னாற்காடு ஜில்லா

### சிதம்பரம் செங்குந்தர் கழகம்

24-1-32 மாலை 6 மணிக்கு அண்ணாமலை சர்வகலாசாலைத் தமிழாசிரியர் உயர்திரு A. சிவப்பிரகாசம் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தலைவர் முகவுரை கூறியபின் உயர்திரு K. பழனிச்சாமி அவர்கள் 'பண்டைத் தமிழர்' என்பதுபற்றியும், உயர்திரு P. ஆலாலசுந்தரம் அவர்கள் 'கல்வியிற் பெரியவன் கம்பன்' என்பதைப் பற்றியும், மிகவும் அழகாகப் பேசினார்கள். அதன்பின் முற்கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்பு வாசிக்கப் பெற்றது. தலைவரவர்கள் பண்டைக் காலத்து நம் தமிழ் மக்கள் வாழ்ந்த நிலையைப் பற்றியும் தற்காலத்து வாழுகின்ற நிலையைப்பற்றியும் இனி நாம் நடக்கவேண்டிய முறைகளைப் பற்றியும் கம்பனது கவியின் சுவையைப்பற்றியும் மிகவும் அழகாகப் பேசினார்கள். வந்தனோபசாரத்துடன் கூட்டம் சுமார் 10 மணிக்கு இனிது முடிந்தது.

---

## சேலம் ஜில்லா

### மஹாத்மா காந்தி தேசீய வாலிபர் சங்கம் அம்மாப்பேட்டை சேலம்

19-12-31 மாலை 6 மணிக்குச் சங்கத் தலைவர் ஸ்ரீமான் ச. கந்தசாமி முதலியார் அவர்கள் தலைமையில் நடந்த 26-வது கூட்டத்தில் தலைவர் முன்னுரைக்குப் பின் ஸ்ரீமான் P. S. ஷண்முக முதலியார் கல்வியைப் பற்றியும், தேச முன்னேற்றம், சமூக முன்னேற்றத்தைப் பற்றியும், ஸ்ரீமான் M. அருணாசல முதலியார் நம்மவர் சமூகத்தைப் பற்றியும், ஸ்ரீமான் S. பழனியாண்டி முதலியார் பழையகால பழக்கவழக்கத்தைப் பற்றியும், பால்ய விவாகத்தைப் பற்றியும், ஸ்ரீமான் P. A. மாரிமுத்து முதலியார் சுகாதாரத்தைப் பற்றியும், ஆண் பெண் கட்டாயக் கல்வியைப்பற்றியும், ஸ்ரீமான் S. K. A. மாரிமுத்து முதலியார் கல்யாண காலங்களில் சிக்கனச் செலவு செய்யவேண்டும் என்றும் சடங்குகளைப் பற்றியும், சேலம் ஸ்ரீமான் ராமசாமையர் கைத்தொழிலைப்பற்றியும், வியாபாரத்தைப்பற்றியும், ஸ்ரீமான் குழந்தை செட்டியார் வாலிபர்கள் ஊக்கமாக வேலை செய்யவேண்டும் என்றும், கதரின் பெருமையைப்பற்றியும் பேசினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இரவு 9 மணிக்கு இனிது நிறைவேறியது.

22-12-31-ல் தலைவர் ஸ்ரீமான் S. P. பொன்னுசாமி முதலியார் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் தலைவர் முகவுரையாக நமது 3-வது மகாநாடு சென்னை மயிலாப்பூரில் கூடப்போகும் விஷயத்தைக் குறித்துச் சொற்பொழிவு நிகழ்த்தினார். பின்பு ஸ்ரீமான் K. மாரிமுத்து முதலியாரும், அது பற்றிப் பேசினார். பிறகு சங்கக் காரியதரிசி கா. மாணிக்க முதலியார் தமது வேலைகளில் நேர்ந்த குறைபாடுகளுக்காக வருத்தத்தை வெளியிட்டார். பின்னர் ஸ்ரீமான்கள் மு. அருணாசல முதலியார், ச. ப. ராமசாமி முதலியார், க. குருசாமி முதலியார், S. பழனியாண்டி முதலியார், K. மாரிமுத்து முதலியார் ஆகியோர் மகாநாட்டு விஷயமாகவும் இனியாவது இச்சங்கத்தை ஊக்கத்துடன் நடத்தவேண்டுமென்றும் வற்புறுத்திப் பேசினர். தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இரவு $9\frac{1}{2}$-மணிக்கு இனிது நிறைவேறியது.

---



## கோவை ஜில்லா

### சன்மார்க்க செங்குந்த வாலிபர் சங்கம் பள்ளிபாளையம், ஈரோடு

20-10-31-ல் திருவாளர் பிரசிடெண்ட் கொ. ப. கொழந்தையப்ப முதலியார் தலைமையில் இரவு $8\frac{1}{4}$ மணிக்குக் கூடிய கூட்டத்தில் 'சங்கக் கட்டடநிதிக்காக ஏலச் சீட்டுகள் சேர்த்துக் கட்டடப் பாதுகாப்புச் சபையினர் கொண்டுவந்த தீர்மானத்தை ஷை ஏலச் சீட்டுகளுக்கு, திருவாளர் வெ. பழனியப்ப முதலியார் அவர்களையும், க. சொக்கலிங்க முதலியார் அவர்களையும் ஏஜெண்டுகளாக நியமித்துச் சீட்டுகள் நடத்திவரப் பாதுகாப்புச் சபையினருக்கு இச்சபையினருக்கு இச்சங்கம் அதிகாரமளிக்கிறது' எனவும், 'திருச்செங்கோடு திருவாளர் V. V. C. V. நடேச முதலியார் அவர்களை பெஞ்சு மேஜிஸ்டரேட்டாகவும், திரு. T. R. வையாபுரி முதலியார் அவர்களைத் திருச்செங்கோடு போர்டு ஐஸ்கூல் அட்வைசரி கமிட்டித் தலைவராகவும் பஞ்சாயத்துக் கோர்ட்டு மெம்பராகவும் சேலம் ஜில்லா முன்சிபல் கௌன்சிலராகவும் சர்க்காரார் நியமித்திருப்பதையும், சேலம் நகரசபைக்குத் திருவாளர்கள் எம். ராமசாமி முதலியார் அவர்களும், S. P. பொன்னுசாமி முதலியார் அவர்களும் கௌன்சிலர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதையும் கண்டு இச்சங்கம் மிகவும் மகிழ்ச்சி யடைகிறது, எனவும் தீர்மானிக்கப்பட்டது.

திரு. பெ. ப. லக்ஷ்மண முதலியார் பெரியோர்களின் மூடப் பழக்கங்கள் என்னும் விஷயமாக நீண்ட சொற்பொழி வாற்றிய பின்னர் வந்தனோபசாரம் கூறப்பட்டுக் கூட்டம் இனிது கலைந்தது.

10-12-31-ல் இரவு $8\frac{1}{2}$ மணிக்குப் பிரசிடெண்ட் திரு. ப. கொழந்தையப்ப முதலியார் தலைமையில் கூடிய கூட்டத்தில் நமது 3-வது மகாநாட்டிற்கும் நமது தலைச்சங்கப் பொதுக்கூட்டத்திற்குப் பிரதிநிதிகளாகச் சங்கத் தலைவர் திரு. ப. கொழந்தையப்ப முதலியார், காரியதரிசி திரு. ப. நஞ்சப்ப முதலியார், திரு. க. சொக்கலிங்க முதலியார், திரு. ப. குட்டியப்ப முதலியார், திரு. வெ. கன்னியப்ப முதலியார் இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் திரு. ந. ப. பால முதலியார் அவர்கள் சங்கத்தின் அங்கத்தினராக அங்கீகரிக்கப்பட்டார்கள். பிறகு வந்தனோபசாரம் கூறப்பட்டுக் கூட்டம் இனிது கலைந்தது.

20-12-31-ல் திரு T. ராமலிங்கம் செட்டியார் தலைமையில் கூடிய கூட்டத்தில் திரு. பெ. ப. லக்ஷ்மண முதலியார் அவர்கள் சுயமரியாதை என்னும் விஷயமாகவும், திரு. ப. நஞ்சப்ப முதலியார் அவர்கள் மகாத்மாஜியும் நமது தொழிலும் என்னும் விஷயமாகவும், திரு. பூ. அ. பாலமுதலியார் அவர்கள் மதமும் மூடக் கொள்கையும் முன்னேற்றத்திற்குத் தடை என்னும் விஷயமாகவும், திரு. ஆ. கு. வெ. ஷண்முகம் அவர்கள் எவ்வுயிரும் ஒன்று என்னும் விஷயமாகவும், திரு. அ. சொக்கலிங்க முதலியார் அவர்கள் இந்திய மக்கள் வறுமைக்குக் காரணம் என்னும் விஷயமாகவும் சொற்பொழிவாற்றிய பின் திருமிகு. பொன்னம்மாள் சென்னியம்மாள் ஆகிய இரு பெண்களின் பரிதாப நிலை என்னும் விஷயமாகத் தொடர்ச்சியாக நீண்ட சொற்பொழிவுகள் நிகழ்த்திய பின்னர் தலைவர் முடிவுரையில் விடாமுயற்சியே முன்னேற்றத்திற்கு வழி என்னும் விஷயமாகத் தகுந்த உதாரணங்களுடன் நீண்ட நேரம் சொற்பொழிவாற்றினார். பிறகு வந்தனோபசாரத்துடன் இரவு $10\frac{1}{2}$ மணிக்குக் கூட்டம் கலைந்தது.

### காரமடை செங்குந்த வாலிபர் சங்கம்

9-12-31 இரவு 8 மணிக்கு ஷை சங்கத்தின் 4-வது கூட்டம் கோயமுத்தூர் உபாத்தியாயர் ம-ா-ா-ஸ்ரீ E. V. சிங்காரவேலு முதலியார் B. A. அவர்கள் தலைமையில் கூடியது. தலைவர், தற்காலத்திய செங்குந்தரின் நிலைமை, கைத்தொழில், நம்மவரிடையேயுள்ள மூட பழக்க வழக்கங்கள், ஒற்றுமை, கல்வி முதலிய விஷயங்களைப் பற்றியும், அயல்நாட்டாரின் முயற்சிகளையும், அவைகளால் ஏற்பட்டிருக்கும் நன்மைகளையும் விரிவாக எடுத்துரைத்தார். பிறகு வந்தனோபசாரம் கூறப்பட்டுக் கூட்டம் இனிது முடிந்தது.

ஷை சங்கத்தின் 5-வது கூட்டம் டிசம்பர்மீ 23உ வடவழி மாரியப்ப முதலியார் தலைமையின்கீழ்க் கூடிற்று. தலைவர் முகவுரைக்குப் பிறகு A. பழனியப்பன் சுகத்தைப்பற்றியும், M. நாட்சிமுத்து கல்வியைப்பற்றியும் பிரசங்கம் செய்தனர். பிறகு தலைவர், பக்தி, ஒற்றுமை முதலிய அரிய விஷயங்களைப்பற்றி நீண்டநேரம் பேசினார். வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

---

## மதுரை ஜில்லா

### செங்குந்த இளைஞர் சங்கம் மதுரை

ஷை சங்கத்தின் பொதுக்கூட்ட மொன்று நடந்த 18—1—32உ திங்கள் இரவு 8-30 மணிக்கு திரு. P. V. முத்துக்கருப்ப முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கடவுள் வணக்கம் பாடப் பெற்றதும் நமது சங்க அங்கத்தினர்களும், கல்லூரி மாணவர்களுமான காலஞ் சென்ற, சி. இராமலிங்கம், மு. அங்குசாமி இருவர்களின் ஞாபகார்த்த வைபவத்தை யொட்டி அவ்விருவர்களின் குணாதிசயங்களையும், கல்வித் திறனையும், அவர்கள் சங்கத்திற்காற்றிய அரிய தொண்டினையும் குறித்துத் திரு. வீ. வீரபத்திரன் மிக்க விரிவாகப் பேசினார்.

அப்பால் நமது மூன்றாவது மகாநாட்டுக்குச் சென்றிருந்த பிரதிநிதிகளி லொருவரான திரு. எஸ். மாணிக்கம் ஆங்கு நடைபெற்ற வைபவங்களையும், உபந்யாசங்களின் கருத்துக்களையும், தீர்மானங்களின் கருத்துக்களையும், தீர்மானங்களின் முக்கியாம்சங்களையும் எடுத்துக் கூறி நம் சமூகம்

துச் சிறந்து விளங்கவும் வேண்டுமானால் கல்வி அவசியமெனவும் அதிலும் ஆண், பெண் இருபாலாருக்கும் அக்கல்வியைப் புகட்டுவது ஒவ்வொரு செங்குந்தரின் கடமை யெனவும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது கலைந்தது.

ரெங்கூன் திரு. கு. இருளாண்டி முதலியார் அவர்களும், ஸ்ரீ வில்லிபுத்தூர் சோதிடமணி. சுப்பையா முதலியார் அவர்களும் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத் தக்கதாகும்.

---

## இராமநாதபுரம் ஜில்லா

### தேவகோட்டை

29-1-32 அன்று கூடிய கூட்டத்தில் செங்குந்தர் ஸ்ரீ ஷண்முகநாதன் பஜனை மடாலயத்தில் திருவாளர் S. P. V. P. வாலசுப்பிரமணிய முதலியார் நமது மூன்றாவது மஹாநாட்டின் பெருமையை விளக்கினர். திருவாளர். அரி. மு. ராமசாமி முதலியார் தலைச்சங்கத்தின் தட்டி யெழுப்பு முறை நமது சங்க முன்னேற்றம் மூன்றாவது மஹாநாட்டின் அறிக்கைப் பத்திரம் முதலியன வாசிக்க இரவு 10½ மணிக்குச் சபை நிறைவெய்திற்று.

### செங்குந்த வாலிபர் சங்கம்

### ஸ்ரீவில்லிபுத்தூர்

8-1-32 வெள்ளிக்கிழமை மாலை 7-30 மணிக்கு ஸ்ரீ ஆனந்த விநாயகர் ஆலயத்தில் திரு. கி. கு. சிவ. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் கூடியது. அவ்வமயம் திரு. ச. சோமசுந்தர முதலியாரவர்கள் 'நமது கடமை' என்பது பற்றிப் பேசினார். பின்பு 'சமீபத்தில் நடைபெற்ற முனிசிபல் தேர்தல்களில் வெற்றிபெற்ற நங்குலக் கனவான்களுக்கு இச்சங்கம் தனது சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது' என்னும் தீர்மானம் நிறைவேறியது. தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் இரவு 10-30-க்கு கூட்டம் கலைந்தது.

11-3-32 வெள்ளிக்கிழமை மாலை 7-30 மணிக்கு ஸ்ரீ ஆனந்த விநாயகர் ஆலயத்தில் திரு. கி. சிவ சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் கூடியது. அவ்வமயம் கடவுள் வணக்கத்திற்குப் பின் திரு. ச. சோமசுந்தர முதலியார் சமூக வளர்ச்சியும் சங்கக் கிளர்ச்சியும் என்பதுபற்றி பேசினார். தலைவர் முடிவுரையுடன் காரியதரிசியால் வந்தனம் கூறப்பெற்று இரவு 10-30 மணிக்குக் கூட்டம் கலைந்தது.

### மண்டல மாணிக்கம்

### செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்

பிரசோற்பத்தி௵ மார்கழி௴ [illegible] இரவு 9 மணிக்குப் புதிய கட்டடத்தில் பு[illegible] திரு வாகத் தேர்தல் கூட்டம் ஸ்ரீமான் நா. [illegible] யாரவர்கள் தலைமையின்கீழ் [illegible] யது. தலைவரவர்கள் முன்னுரைக்குப் பின் காரியதரிசியால் சென்ற 2, 3-வது வருஷ சங்க அறிக்கைப் பத்திரம் தெளிவாய் வாசிக்கப்பட்டன. அதை எல்லோரும் ஆதரித்ததும், புது வருஷ நிர்வாகத் தேர்தல் விஷயமாய் இவ்வூர் போர்டு பெண் பாடசாலை உபாத்தியாயர் உயர்திரு. ஜோசப் டீச்சரவர்கள், நிர்வாகிகளின் வேலைகள், சங்கம் இனி அபிவிருத்தி யடையும் வழி முதலியவைகளைப் பற்றி உதாரணங்களுடன் சொற்பெருக் கிட்டார்கள்.

அதன்பின் சங்கத்தின் புது வருஷ நிர்வாக உத்யோகஸ்தர்களும் புத்தகசாலையின் நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் தமது முடிவுரையில் நமது சங்கம் அபிவிருத்தி யடைய ஒத்துழைப்பும், ஊக்கமும் அத்யாவசியம் என விளக்கினார்கள். பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறியதும், காரியதரிசியவர்களால் சங்கத்தின் பழைய நிர்வாகிகளுக்கும் புதிய நிர்வாகிகளுக்கும் நன்றி யறிதலாக வந்தனமளிக்கப்பட்டது. இரவு 11 மணிக்குக் கூட்டம் இனிது கலைவுற்றது.

புது வருஷ நிர்வாகிகள் :—தலைவர் திரு. அம்பலம் வீ. சி. வீரபத்திர முதலியார்; உபதலைவர் திரு. ச. பா. பொன்னுசாமி முதலியார்; திரு. வெ. மு. கிருஷ்ண முதலியார்; காரியதரிசி திரு. நா. ச. கு. நடராஜ முதலியார்; உபகாரியதரிசி திரு. கு. பெ. முத்துச்சாமி முதலியார்; திரு. பு. க. அ. ராமசாமி முதலியார்; கௌரவ காரியதரிசி திரு. ஜோசப் டீச்சரவர்கள், பொருள் காப்பாளர் திரு. மு. ஆ. பாதம்பிரியா முதலியார்; கணக்குப் பரிசோதகர் திரு. இ. மா. இளையபெருமான் முதலியார்.

புத்தகசாலை நிர்வாகிகள் :—தலைவர் திரு. அம்பலம் இ. மு. சித்திரவேல் முதலியார்; உபதலைவர் திரு. நா. ப. க. ராமசாமி முதலியார்; காரியதரிசி திரு. இ. முனியப்ப முதலியார்; உபகாரியதரிசி திரு. சொ. குருசாமி முதலியார், பொக்கிஷதார் திரு. ஞா. க. மு. பாதம்பிரியா முதலியார், ஆடிட்டர் திரு. ப. சி. மூக்க முதலியார்.

சங்க வாலண்டியர்கள் :—பு. பெரியசாமி; பா. குருசாமி; நா. கணேசன்; கா. குருசாமி; கோ. அய்யம் பெருமான், வெ. லெட்சுமணன்.

நிர்வாக அங்கத்தினர் :—மு. நா. பொன்னுசாமி முதலியார்; மு. செ. முருகலிங்க முதலியார்; க. கலியாண சுந்தர முதலியார்; மே. பெ. புஜுக முதலியார்; [illegible]. வெ. நா. முருகலிங்க முதலியார்; ச. வெ. குருசாமி முதலியார்; வீ. மேகவர்ண முதலியார்.

### தீர்மானங்கள்

1. [illegible] 3-வது மகாநாட்டிற்கு இச்சங்கத்தின் [illegible]களாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் [illegible] ரயில்பாதை வசதிக் குறைவாலும் [illegible] விடப்பட்டதற்கு வருந்துகிறோம் [illegible]



சங்கத்தின் சார்பாய்க் குறிப்பிட்ட தேதியில் மகாநாட்டிற்குத் தந்தி கொடுத்ததை நமது தலைச் சங்கத்துக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

2. சென்ற ஆண்டில் நமது சங்க மெம்பர்களது சந்தா 2 அணாவாக இருந்தது சங்கத்தின் போஷணைக்குப் போதாததால் இதுமுதல் சந்தா 4 அணாவாக வசூல் செய்யவேண்டும்.

3. நமது சங்கத்தின் புது வருஷ சட்டதிட்டங்கள் எழுதிவந்து அடுத்த கூட்டத்தில் வாசிக்கும்படியாய்க் கௌரவ காரியதரிசி திரு. ஜோசப் டீச்சரவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது.

---

## திருநெல்வேலி ஜில்லா

### சங்கரநயினார் கோயில் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்

8-2-32-ல் திரு. S. பழனியாண்டி முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் தலைவர் முகவுரைக்குப்பின் வித்வான் M. கதிர்வேல் பிள்ளை அவர்கள் கல்வி, ஜன சமூக முன்னேற்றம் முதலியவைகளைக் குறித்து மிகவும் கனிவாகப் பேசினார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் வந்தனோபசாரம் கூறப்பெற்றுக் கூட்டம் இனிது கலைந்தது.

7-3-32-ல் கூடிய கூட்டத்தில் திருநெல்வேலி வக்கீல் ஸ்ரீமான் S. பழனியாண்டி முதலியார் தலைமை வகித்தார்கள். தலைவர் முன்னுரைக்குப் பின் நமது ஜாதி முன்னேற்றத்துக்காகவும் சமீபத்தில் நடைபெறப்போகும் ஸ்தல ஸ்தாபனங்களில் நம்மவர் அங்கத்தினராதற்கும் வேண்டிய முயற்சி செய்ய வேண்டுமென்றும் ஸ்ரீமான் S. பழனியாண்டி முதலியார் அவர்களையும் ஒரு அபேக்ஷகராகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது. கல்வி, கல்விக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் நிதி சேர்த்தல், ஐக்கிய நாணய சங்கம் முதலியவற்றைப்பற்றித் திரு. M. திருவுடையா முதலியாரும் திரு. K. சங்கர சுப்பு முதலியாரும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் இனிது கலைந்தது.

---

உயர் திரு. ஆ. வே. முத்தைய முதலியார் அவர்கள் பட்டம் பெற்றமைக்குக்

## கொண்டாட்ட விருந்து

நங்குலத் தலைவரும் புதுவை அரசாங்க மந்திரியுமான உயர் திருவாளர் ஆ. வே. முத்தைய முதலியார், பி. ஏ., பி. எல்., அவர்கள் ஷேவாலியா தேலா லேழியார் தோனே (Chevalier De La Legion D' Honneur) எனும் பெரும் பட்டம் பெற்றதைக் குறித்துச் சனிவாரம் 26-3-32 அன்று மாலை 7 மணிக்கு ஆசிரியர் திரு. ம. சண்முகசுந்தர முதலியாரவர்கள் தமது அகத்தில் ஒரு கொண்டாட்ட விருந்தளிப்பார்கள்.

(50—வது பக்கத் தொடர்ச்சி)

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22288 | 31473 | 24257 | 19121 | 22802 | 34856 | 22850 | 11359 | 11331 | 16545 | 22484 | 15048 |
| 17376 | 17130 | 19805 | 15031 | 1796 | 366 | 15024 | 24228 | 14289 | 13938 | 10435 | 19752 |
| 10439 | 24206 | 22427 | 18603 | 11079 | 19806 | 10965 | 15022 | 11815 | 10978 | 22529 | 132 |
| 1541 | 16601 | 23096 | 23068 | 22544 | 24259 | 34946 | 19135 | 23032 | 141 | 33749 | 1014 |
| 17128 | 14953 | 16603 | 11538 | 17122 | 24246 | 34953 | 11395 | 11347 | 22494 | 1559 | 19132 |
| 19177 | 19756 | 19119 | 22475 | 11117 | 16079 | 10455 | 22473 | 22296 | 16550 | 14942 | 22501 |
| 9045 | 34942 | 22419 | 24245 | 34944 | 10502 | 19167 | 34845 | 13638 | 19731 | 10432 | 22774 |
| 31470 | 9103 | 19839 | 22537 | 10442 | 1026 | 24288 | 10433 | 23020 | 35186 | 20568 | ... |
| 13634 | 23100 | 11388 | 9012 | 11543 | 2751 | 13939 | 11341 | 18600 | 22775 | 10942 | ... |

Registered No. M. 1514

# செங்குந்தர் கட்டட நிதி

நமது மாகாணத்துக்குத் தலைநகராக விளங்குவதுடன் துறைமுகப் பட்டினமாயுமுள்ள சென்னையம்பதியில் நங்குலத்தவர்க்கெனப் பிரத்தியேகமாக ஒரு கட்டடம் இல்லாமலிருப்பது பல வாண்டுகளாக ஒரு பெருங் குறையாக இருந்து வருகிறது. அஃதில்லாமையாலேற்படும் கஷ்டங்களும் அதை நிருமாணிப்பதனலேற்படக்கூடிய நன்மைகளும் எவ்வளவு என்பதை அடிக்கடி சென்னைக்கு வரும் செங்குந்தர்களே அறிவார்கள். கோர்ட்டு, வியாபாரம் முதலியவை சம்பந்தமாகப் பல செங்குந்தர்கள் தினமும் சென்னைக்கு வந்து தங்கிச் செல்கிறார்கள். ரங்கூன், சிங்கப்பூர் முதலிய வெளியூர்களுக்கு வியாபாரத்தை முன்னிட்டும் வேறு அலுவலாகவும் கப்பலேறும் செங்குந்தரும், அவ்வூர்களினின்றும் தம்மூர்களுக்குத் திரும்புவோரும் சென்னையில் சில நாட்களாவது தங்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. அவ்வாறு தங்குவோர் வேறு விடுதிகளில் தங்குவதால் தங்களுக்கேற்படும் சௌகரியக் குறைவைப்பற்றியும் தாங்கள் அனுபவிக்கும் கஷ்டங்களைப்பற்றியும் முறையிடுவது கொஞ்சமல்ல. சிலர் பெருந்தொகையான தொகைகளையும் இழக்கவேண்டியிருக்கிறது. இத்தகையோர், செங்குந்தர்க்கென ஒரு கட்டடம் ஏற்படுத்தும்படி தலைச்சங்கத்தாரை அடிக்கடி வற்புறுத்திக்கொண்டும் வேண்டிக்கொண்டும் வருகிறார்கள். ஆகவே, இவர்களது குறையை நிவர்த்திப்பதற்கொரு கட்டடம் ஏற்படுத்துவது அத்தியாவசியமாகிறது.

வெளியூர்களிலிருந்து வந்து சென்னையில் தங்கிக் கல்வி பயிலும் நங்குல மாணவர்கள் பலரும் தற்போது பல அசௌகரியங்களுக்குள்ளாகிறார்கள். அவர்களுக்குத் தக்க வசதியளிப்பதற்கும் ஒரு கட்டடம் இன்றியமையாததாகும்.

மேலும், நமது தலைச்சங்கம், பத்திரிகை ஆகியவற்றின் காரியாலயங்கட்கு ஒரு தனிக் கட்டடம் இல்லாமலிருப்பதும் ஒரு பெருங் குறையாகவே இருக்கிறது.

இத்தகைய குறைகளையெல்லாம் ஒருங்கே நீக்கும் பொருட்டே இக்காரியங்களனைத்தினுக்கும் ஒருங்கே உதவக்கூடியதொரு கட்டடத்தினைக் கூடிய சீக்கிரத்தில் வாங்கவேண்டுமெனத் தலைச் சங்கத்தார் முயற்சித்து வருகின்றனர். அதற்கு வேண்டிய பொருளுக்காகவே தற்போது செங்குந்தர் கட்டடநிதி என ஒரு நிதியையும் ஏற்படுத்தியுள்ளார்கள். அதன் அவசியத்தையும் அதற்கு அனைவரும் பொருளுதவி புரியவேண்டியதையும் குறித்துச் சென்ற மூன்றாவது மகாநாட்டிலும் ஒரு தீர்மானமும் நிறைவேறியுள்ளது. இதனையெல்லாம் யோசித்துச் செங்குந்த கனவான்கள் இந்நிதிக்குத் தம்மாலியன்ற உதவி புரிய வேண்டுகிறோம்.

இப் பெரும்பணியில் மிகவும் ஊக்கங் காட்டுகின்ற பாளையகாட் கம்பெனியார் தமது மகமை உண்டியல் பணத்தை இந்நிதியில் பிரத்தியேகமாகச் சேர்த்து வருகிறார்கள். அவ்வப்போது கனவான்களால் வழங்கப்படும் நன்கொடைகளையும் அதனோடு சேர்த்து வருகிறார்கள். சேர்ந்துள்ள பணம் திருவாளர் தி. நா. சபாபதி முதலியார் அவர்கள் பெயரில் இந்துஸ்தான் பாங்கில் கட்டப்பட்டிருக்கிறது. இதுபற்றிய கணக்குகளும், அவ்வப்போது நன்கொடை வழங்குவோர் பெயர்களும், வழங்கப்படும் தொகைகளும் மாதா மாதம் மித்திரனில் வெளியிடப்படும்.

| | | | |
|---|---|---|---|
| சென்ற மாதம் பாக்கிலிருந்தது | ரூ. 500 | 0 | 0 |
| இம்மாத வரவு:—மதராஸ் பாளையகாட் கம்பெனியார் வழங்கிய மகமை வசூல் | 60 | 0 | 0 |
| காஞ்சிபுரம் பாளையகாட் கம்பெனியார் வழங்கிய மகமை வசூல் | 40 | 0 | 0 |
| ஆக மொத்தம் பாங்கிலுள்ளது | 600 | 0 | 0 |

இந்தக் கணக்குப் பிரகாரம் இம்மாதம் நூறே ரூபாய் தான் சேர்ந்திருக்கிறது. ஷை நிதி பெருக வேண்டியதன் அவசியம் அனைவர்க்கும் தெரிந்திருந்தும், அதற்கு நன்கொடை வழங்க ஷை பாளையகாட் கம்பெனியார் தவிர வேறெவரும் இம்மாதம் முன் வாராதது மிகவும் வருந்தத் தக்கதாகும். அன்பர்களே, ஒரு கட்டடம் ஏற்படுத்துவதற்குச் சுமார் 10,000 ரூபாயாவது அவசியமல்லவா? இவ்வாறு இரண்டு கம்பெனியாரது மகமைப் பணத்தை மட்டும் சேர்த்துக்கொண்டு போனால் அத்தொகை சேருவதற்கு எத்தனை வருடங்கள் ஆய்விடுமென யோசியுங்கள். இனியாயினும் செல்வச் சீமான்கள் இத் தருமத்திற்குக் கைங்கரியம் செய்வார்களென நம்புகிறோம். இரங்கூன் முதலிய வெளிநாடுகட்குச் செல்லும் கனவான்களைச் சிறப்பாக இதிற் கவனம் செலுத்தி இந்நோக்கம் சீக்கிரத்தில் நிறைவேற உதவி புரியுமாறு வேண்டிக்கொள்ளுகிறோம்.

நன்கொடையனுப்புவோர், " திருவாளர் தி. நா. சபாபதி முதலியார் அவர்கள்,
சென்னை பாளையகாட் கம்பெனி, 31, அரண்மனைக்காரன் தெரு, ஜார்ஜ் டவுன், சென்னை.
என்ற விலாசத்துக் கனுப்புமாறு கேட்டுக்கொள்ளப் பெறுகின்றனர்.

This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the South Indian Sengunatha Mahajana